Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

# தினமுரசு
தினப்பதிப்பு
THINAMURASU

முரசு - 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 பங்குனி 28 சனிக்கிழமை (11.04.2015) பக்கங்கள் 20 ஓசை - 193

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.



## மத்திய அரசை விமர்சிப்பதை நிறுத்த வேண்டும்

### விக்கி மீது அமைச்சர் கிரியெல்ல சீற்றம்

(கொழும்பு)

மத்திய அரசு மீது வசைபாடுவதையும் விமர்சிப்பதையும் வடக்கு முதல்வர் விக்னேஸ்வரன் நிறுத்திக்கொள்ள வேண்டுமென்று அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல வடக்கு முதல்வர் மீதான தனது சீற்றத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.

வடமாகாண சபைக்கு புதிய அரசு செய்துகொடுத்த அனைத்து உதவிகளையும் மறந்து முதல்வர் விக்னேஸ்வரன் மத்திய அரசை தொடர்ந்தும் விமர்சித்து வருவதாகவும் அமைச்சர் கிரியெல்ல குற்றம்சாட்டினார்.

தேசிய அரசாங்கத்தின் மூலமாக வடமாகாணசபைக்கு கிடைக்கப்பெற்ற விடுதலையை மறந்து முதலமைச்சர் விக்னேஸ்வரன் சர்வதேசத்திடம் வசைபாடிக் கொண்டிருக்கின்றார் என அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தினை கட்டுப்படுத்தும் வகையில் அரசாங்கம் செயற்படுவதாக வடமாகாண முதலமைச்சர் ஐ.நா. பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ள நிலையில் அரசாங்கத்தின் கருத்தினை வினவிய ஊடகவியலாளர்களிடமே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களை அங்கீகரித்து உரிமைகளை வழங்கியது நாம் என்பதை தமிழ் தலைமைகள் மறந்து விட வேண்டாம் எனவும்

19 ஆம் பக்கம் பார்க்க

## வலி. வடக்கு காணி விடுவிப்பு; இன்று முதல் பதிவுகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட காணிகள் விடுவிப்பின் இரண்டாம் கட்டத்தில் 590 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி தெல்லிப்பளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட J/235 காங்கேசன்துறை தெற்கு, J/236 பளை வீமன்காமம் வடக்கு, J/237 பளை வீமன்காமம் தெற்கு, J/238 கட்டுவன், J/240 தென் மயிலை, J/241 வறுத்தலை விளான், J/250 தையிட்டி தெற்கு, J/252 பலாலி தெற்கு மற்றும் கோப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட J/284 வளலாய் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் பகுதியாக 590 ஏக்கர் காணிகள் இரண்டாம் கட்டத்தில் விடுவிக்கப்படுகின்றன.

இதற்கமைய இப்பிரிவுகளைச் சேர்ந்த காணி உரிமையாளர்கள் இன்று காலை 9.00 மணிமுதல் இப்பகுதியிலுள்ள தங்களது காணிகளைப் பார்வையிடுவதுடன் தமது பதிவுகளையும் கிராம சேவையாளர்கள் மூலம் மேற்கொள்ளலாம். என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகன்

19 ஆம் பக்கம் பார்க்க

## குளத்தில் மூழ்கி இளைஞர் பலி

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி புதுமுறிப்புக் குளத்தில் மூழ்கி இளைஞர் ஒருவர் மரணமாகியுள்ளார்.

கிளிநொச்சி திருவையாறு கிராமத்தைச் சேர்ந்த பூலோகநாதன் தயாபரனி (வயது - 21) எனும் இளைஞனே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி புதுமுறிப்புக் குளத்தில் இளைஞர் ஒருவரின் சடலம் கரையொதுங்கிய நிலையில் பொது மக்களால் கிளிநொச்சி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதனையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

19 ஆம் பக்கம் பார்க்க

## நெல்லியடியில் விபத்து ஒருவர் மரணம்

(நெல்லியடி)

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றொருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நெல்லியடி பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் நேற்று மாலை 3.00 மணியளவில் இடம்பெற்ற இந்த கோர விபத்தில் இராஜகிராமத்தைச்

19 ஆம் பக்கம் பார்க்க

## கஞ்சா கடத்திய இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு கடற்பகுதியில் 87 கிலோகிராம் கஞ்சாவுடன் 2 பேர் நேற்று முன்தினம் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு நெடுந்தீவு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் மாலை நெடுந்தீவு கடற்பகுதியில் சந்தேகத்திற்கிடமான படகு செல்வதை அவதானித்த கடற்படையினர் அதனை சோதனையிட்டபோது 40 பொதிகளில் அடைக்கப்

19 ஆம் பக்கம் பார்க்க

# மாகாணசபை தீர்மானங்கள் புறக்கணிப்பு

### திணைக்களங்கள் மீது குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களை அமைச்சுக்களும் திணைக்களங்களும் கருத்தில் எடுக்காமல் செயற்படுவதாக வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் குற்றம்சாட்டியுள்ளார்.

வடக்கு மாகாண சபையில் இதுவரை இடம்பெற்ற அமர்வுகளின்போது நிறைவேற்றப்பட்ட அனைத்து தீர்மானங்களின் தொடர் நடவடிக்கைகள் குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சுக்களும், திணைக்களங்களும் உரிய பதில்களை அனுப்பாது காலம் தாழ்த்துகின்றன எனவும், இவை குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் முதலமைச்சருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அவை உரிய அமைச்சு, திணைக்களங்களுக்கு அனுப்பப்படும். அவைகுறித்து உரிய பதிலளிக்க ஒருவாரகால அவகாசத்தை வழங்கமுடியும். மேலதிக கால அவகாசம் தேவைப்பட்டால் அது குறித்து சபைக்கு அறிவித்து காலத்தை நீடிக்கமுடியும்.

இந்த ஒழுங்குமுறைகளைப் பின்பற்றி அமைச்சுக்களின் செயலாளர்களும், திணைக்களத் தலைவர்களும் செயற்படவேண்டும். இவை குறித்து முதலமைச்சர் கருத்தில் கொண்டு ஒழுங்குமுறைகளை பின்பற்ற பணிக்கும்படி கோரப்படுகிறது என்றுள்ளது.

## ஐ.நா. விசேட குழுவின் விஜயம் இரத்து

(கொழும்பு)

உலகளாவிய ரீதியில் ஆட்கடத்தல் மற்றும் காணாமற்போனோர் தொடர்பான விவகாரங்களைக் கையாளும் ஐக்கிய நாடுகள் சபையின் உயர் மட்டக் குழுவொன்றின் இலங்கைக்கான விஜயம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இம்மாத இறுதியில் குறித்த குழுவினர் இலங்கைக்கு வரவிருந்த நிலையிலேயே இந்தப்

19 ஆம் பக்கம் பார்க்க

## புதிய தேர்தல் முறை ஆராய விசேட குழு

தேர்தல் முறையில் மாற்றங்கள் மேற்கொள்வது குறித்து ஆராய விசேட குழு ஒன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று மாலை நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் குழுக் கூட்டத்தில் இந்த விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

குறித்த குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜி.எல். பீரிஸ், நிமால் சிறிபால டி சில்வா, மகிந்த சமரசிங்க, டிலான் பெரேரா, அனுர பிரிய தர்ஷன யாப்பா ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.

# தேர்தலின் பின்னரே யாப்பு சீர்திருத்தம்



### நீதி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலின் பின் ஆட்சி அதிகாரத்தினை கைப்பற்றியவுடன், புதிய அரசியல் யாப்பு திருத்தம் செய்யப்படும் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

உயர் நீதிமன்றம் சுதந்திரமாக தீர்ப்பு வழங்கியுள்ளதாகவும், 19 ஆவது திருத்தம் குறித்து உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை முழுமையாக ஏற்றுக் கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

19 ஆவது திருத்தத்தின் மூலம் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் நியாயமான சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக விஜயதாஸ ராஜபக்ஷ அங்கு கூறியுள்ளார்.

## ஜனாதிபதி மைத்திரி பதவி துறக்க வேண்டும்

### பொதுபலசேனா கோரிக்கை

(கொழும்பு)

அரசியல் களத்தில் கைப்பொம்மையாகச் செயற்படும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உடனடியாக ஜனாதிபதிப் பதவியிலிருந்து இராஜினாமா செய்ய வேண்டும் என பொதுபலசேனா கோரிக்கை விடுத்துள்ளது.

பொதுபலசேனா அமைப்பின்

19 ஆம் பக்கம் பார்க்க

மெய்ப்பொருள் சமத்துவம் சகோதரத்துவம்

# விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாத உணவகங்கள் மீது சட்டம் பாயும்

(யாழ்ப்பாணம்)

விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாத சிற்றுண்டிச் சாலைகள் மீது எதிர்காலத்தில் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்.மாவட்ட பாவனையாளர் அதிகாரசபையின் அதிகாரி த.வசந்தசேகரன் தெரிவித்தார்.

நாம் பலமுறை சிற்றுண்டிச் சாலைகளின் உரிமையாளர்களுக்கு விலைப்பட்டியல் காட்சிப்படுத்தல் தொடர்பில் அறிவித்தல்கள் வழங்கியுள்ளோம்.

இனிவரும் காலத்தில் இவ்வாறு தமது உணவகங்களில் பொருட்களின் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாத சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், வழக்கும் தாக்கல் செய்யப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# மென்பந்து சுற்றுப்போட்டி

சோளங்கன் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியில் நடாத்தும் மென்பந்துச் சுற்றுப் போட்டி இன்று முதல் நடைபெறவுள்ளது.

இதில் பெண்களுக்கான 6 பேர் 5 பந்துப் பரிமாற்றமும், ஆண்களுக்கான 6 பேர் 5 பந்துப் பரிமாற்றமும், மற்றும் 12 பந்து பரிமாற்றமும் நடைபெறவுள்ளது.

இதில் ஆண்களுக்கான 6 பேர் 5 பரிமாற்றம் இன்றும், நாளையும் நடைபெறவுள்ளது. பெண்களுக்கான சுற்றுப்போட்டி எதிர்வரும் 18, 19 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இப்போட்டியிகள் கரணவாய் சோளங்கன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. விபரங்களுக்கு, தலைவர் சுதா 077501 4040 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என அறிவித்துள்ளார். (18)

# சிறுவனைக் கடத்திய மூவருக்கு விளக்கமறியல்

(சாவகச்சேரி)

மட்டுவிலில் 16 வயது சிறுவனைக் கடத்திய குற்றச்சாட்டில் கைதான மூவரை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் உத்தரவிட்டார். மேலும் இவர்களை வரும் 21 ஆம் திகதி அடையாள அணி வகுப்புக்கு உட்படுத்துமாறும் பணித்தார்.

குறித்த சந்தேக நபர்கள் கடந்த வாரம் மட்டுவிலில் வீடு ஒன்றுக்குள் புகுந்து அட்டகாசம் புரிந்ததுடன் வீட்டில் நின்ற சிறுவனையும் கடத்திச் சென்றனர். கடத்தப்பட்ட சிறுவன் கைதடிப் பகுதியில் வைத்து விடுவிக்கப்பட்டிருந்தார்.

இதையடுத்து சிறுவனின் பெற்றோர் சாவகச்சேரிப் பொலிஸில் செய்த முறைப்பாட்டை அடுத்து குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

# வறுமைக்கோட்டிற்குட்பட்ட மாணவர்களுக்கு ஊக்குவிப்பு

(கிளிநொச்சி)



கிளிநொச்சி, கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வாழும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களிற்கு மாதாந்த உதவித் தொகை வழங்கி வைக்கப்பட்டது.

வாழ்வின் எழுச்சித் திட்டத்தின கீழ் சமுர்த்திப் பயனாளிகளாக தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களில், உயர் கல்விக்கு தகுதி பெற்ற மாணவர்கள் குறித்த திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

அதன் அடிப்படையில் குறித்த மாணவர்களின் உயர்கல்வி கற்றல் செயற்பாட்டிற்காக மாதாந்தம் தலா 1000 ரூபா வழங்கப்படவுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் குறித்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு 300 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 167 பேர் தெரிவு செய்யப்பட்டு, அவர்களிற்கான சான்றிதழும், வைப்பு புத்தகமும் நேற்றுக் கையளிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வு நேற்றுக் காலை 10 மணியளவில் கரைச்சி பிரதேச செயலக மண்டபத்தில், பிரதேச செயலாளர் கோ. நாகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி வாழ்வின் எழுச்சித் திட்ட பணிப்பாளர், திட்டமிடல் பணிப்பாளர், அதிபர், ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (29)

# யாழிலும் சேவையை விஸ்தரிக்கும் இலங்கை முதியோர் சுகவாழ்வுக்கழகம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை முதியோர் சுகவாழ்வுக் கழகம் யாழ்.மாவட்டத்தில் தனது சேவையை மேலும் விஸ்தரிக்கவுள்ளது.

தலைநகர் கொழும்பிலிருந்து தனது செயற்பாடுகளை ஆற்றி வந்த கழகம் யாழிலுள்ள அங்கத்தினரோடும் அவர்களின் நண்பர்கள் உறவினர், நலன்விரும்பிகளோடும் ஒன்றிணைந்து வடமாகாண முதியோர்கள் நலனில் கவனம் செலுத்தவுள்ளது.

இதன்படி 1 ஆம் குறுக்குத் தெரு, வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையிலுள்ள யாழ். சென்ஜோண்ஸ் அம்புலன்ஸ் காரியாலயலத்தில் இன்று காலை 9 மணி முதல் 12 மணி வரை கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

வடமாகாணத்தில் சிறப்பான முதியோர் வைத்திய வழிகாட்டல் நிலையமோ, வைத்தியரோ இல்லாமையும், நடந்தேறிய கடந்தகால யுத்தசூழலினாலும் முறையான பழக்கவழக்கம், வாழ்க்கை முறைமை வழிகாட்டல் இல்லாமையாலும் பலவிதமான நோய்களின் மத்தியில் முதியோர்கள் பலர் சிக்கித் திணறுகிறார்கள்.

அவர்கள் சகலரதும் நலன் கருதி வடமாகாண முதியோர்கள், அவர்களின் குடும்ப மூத்த உறுப்பினர்கள், முதியோர் சங்கங்களின் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து இந்தக் கலந்துரையாடல், கருத்துரைக் கூட்டத்தை நடாத்த இலங்கை முதியோர் சுகவாழ்வுக் கழகத்தினால் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

எனவே அனைவரும் தங்களின் நண்பர்கள், உறவினர் நலன விரும்பிகளோடு தவறாது சமுகமளித்து தங்களின் கருத்துக்களையும் பரிமாறி வடமாகாண முதியோர் நலன்களைப் பேணி வளர்க்க உதவுமாறு தலைவர் க.கணேசமூர்த்தி அழைப்பு விடுத்துள்ளார்.

## புதிய நிர்வாகத்தெரிவு

(வேலணை)

வேலணை துறையூர் ஐயனார் ஆலய புதிய நிர்வாகத் தெரிவு நேற்று இடம்பெற்றது.

இதில் தலைவராக ஆ.செல்வராசா, செயலாளராக பி. திருவருள், பொருளாளராக சோ.ஜெகன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (21)

## சமுர்த்திக் கொடுப்பனவு அச்சுவேலியில் வழங்கல்

(அச்சுவேலி)

அச்சுவேலி மற்றும் ஆவரங்கால் பகுதியில் உள்ள சமுர்த்திப் பயனாளிகளுக்கான கொடுப்பனவுகள் தற்போது வழங்கப்பட்டு வருவதாக சமுர்த்திப் பயனாளிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக வழங்கப்படாத கொடுப்பனவுகள் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. அச்சுவேலி, ஆவரங்கால் பகுதியில் உள்ள ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவு ரீதியாகவே இக்கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சமுத்திப் பயனாளிகள் தமக்கான கொடுப்பனவுகளை தங்கள் கிராம சேவையாளர் பரிவு ரீதியாக குறித்த தினத்திற்கு சமுகமளித்து பெற்றுச் செல்கின்றனர். (85)

## DD TV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | சனிக்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஒளிமயமான வாழ்வு |
| Am 07.00 | MORNING SONG |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | ஆரோகனம் |
| Am 09.30 | MY STYLE |
| Am 09.55 | காலைச்செய்தி |
| Am 10.00 | ஆரோக்கியமான வாழ்வு |
| Am 11.00 | மக்கள் முகம் |
| PM 11.30 | I T .COM |
| PM 12.00 | காதல் கீதங்கள் |
| PM 12.30 | சிரிக்க சிரிக்க |
| PM 01.00 | மதிய செய்தி |
| PM 01.30 | திரைப்படம் |
| PM 03.55 | மாலை செய்தி |
| PM 04.00 | சிரிக்க சிரிக்க |
| PM 05.00 | அதிர்வுகள் |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | வரலாற்று நாயகர்கள் |
| PM 07.30 | தெரிந்தல் சொல்லுங்கள் |
| PM 08.00 | பிரதான செய்தி |
| PM 08.30 | இதய ஊஞ்சல் |
| PM 09.00 | ஆங்கில திரைப்படம் தமிழாக்கம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

# வெளிநாடு அனுப்பிவைக்கப்பட்ட பொதி கிடைக்கவில்லை

## முகவரிடம் பெறப்பட்டது பெறுமதி

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்ட பொதி உரியவருக்கு கிடைக்காமை தொடர்பில் கிடைத்த முறைப்பாட்டையடுத்து பொதி அனுப்பிய முகவரிடம் இருந்து அதன் மொத்த பெறுமதி, முறைப்பாட்டாளருக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட பாவனையாளர் அதிகாரசபை அதிகாரி த.வசந்தசேகரன் தெரிவித்தார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பருத்தித்துறைப் பகுதியிலுள்ள ஒரு முகவர் நிறுவனம் ஊடாக இத்தாலி நாட்டில் உள்ள தமது உறவினருக்காக பொதி ஒன்றை ஒருவர் அனுப்பியுள்ளார். அது உரியவரிடம் சென்றடையாத நிலையில் முகவரினால் சாக்குப் போக்குகள் தெரிவிக்கப்பட்டதாக பாவனையாளர் அதிகாரசபைக்கு கிடைத்த முறைப்பாட்டையடுத்து குறித்த முகவருடன் பேசி இப்பிரச்சினைக்கான தீர்வு நேற்று முன்தினம் காணப்பட்டுள்ளது.

இப்பொதியிருந்த பொருட்களின் பெறுமதியான 31600 ரூபாவும், அப்பொதியை அனுப்புவதற்காக பெறப்பட்ட கட்டணமான 5600 ரூபா என்பன குறித்த பொதியை அனுப்பியவருக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற பல செயற்பாடுகள் இடம்பெறுகின்ற போதிலும் அது தொடர்பிலான முறைப்பாடுகள் எமக்குக்கிடைப்பதில்லை. இது முதன்முறையாக கிடைத்த முறைப்பாடு இதற்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

இதுபோன்ற பிரச்சினைகள் தொடர்பில் உரியவர்கள் எம்மிடம் தகுந்த ஆதாரங்களுடன் முறையிடும் பட்சத்தில் உரிய நடவடிக்கைகள் எடுக்கமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# காணிப்பயன்பாடு தொடர்பில் வடமராட்சியில் கலந்துரையாடல்



(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கற்கோவளம் ஜே/406 மற்றும் வல்லிபுரம் ஜே/416 கிராமசேவகர் பிரிவுகளில் "பிரதேச மட்டத்திலான எதிர்கால திட்டமிடலில் காணிப்பயன்பாடு" எனும் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் முற்பகல் 11 மணிக்கு புனிதநகர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பருத்தித்துறை நிர்வாக உத்தியோகத்தர் சீவரத்தினம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இருபகுதி கிராமங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் மக்கள் பிரதி நிதிகளால் சட்டவிரோத மண் அகழ்வு மற்றும் சவுக்கு மரங்கள் அனுமதியில்லாமல் வெட்டப்படுகின்றமை தொடர்பாக அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தினர். அத்துடன் இப்பிரச்சினைகள் தொடர்பாக தாங்கள் உரியவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்வதாக அதிகாரிகள் கூறினர்.

இந்நிகழ்வில் காணிப்பயன்பாட்டின் மேலதிக திட்டங்கள் மற்றும் ஏற்பாடுகள் தொடர்பாக யாழ்.மாவட்ட நிலப்பயன்பாட்டு உத்தியோகத்தர் உமையாளால் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

நிகழ்வில் செல்வி ராதிகாவின் நன்றியுரையோடு கலந்துரையாடல் நிறைவுற்றது.

கற்கோவளம் கிராம அலுவலர் கௌதமன், கற்கோவளம் கிராம பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் சுபாஷன் வல்லிபுரம் கிராம அலுவலர் யோகேந்திரநாதன் வல்லிபுரம் கிராமத்துக்கான பொருளாதார அபிவிருத்தி அலுவலர் செல்வசேகர், சமுர்த்தி அலுவலர் கிருபாகரன் மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரோடு இரு கிராமங்களைச் சேர்ந்த பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். 10 பேர் கொண்ட குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## சாமஸ்ரீ விருது விழா

(வவுனியா)

சாமஸ்ரீ சமூக சேவையாளர் விருது வழங்கும் விழா எதிர்வரும் 18 ஆம் திகதி வவுனியா நகர சபை கலாசார மண்டபத்தில் பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

தேசிய ஐக்கியத்தை வலுப்படுத்தும் முகமாக இருபது வருட காலமாக செய்து வரும் சேவைகளை மேம்படுத்தும் நோக்குடன் சமய, சமூக, கலை, கலாசார ரீதயில் தெரிவு செய்யப்பட்ட புத்தி ஜிவிகளுக்கும் வர்த்தகர்களுக்குமானதாக இவ் விருது விழா இடம்பெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் பிரதம அதிதியாக கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் அல்ஹஜ் றிஸாட் பதியுதீன், விசேட அதிதியாக சமுர்த்தி மற்றும் வீடமைப்பு பிரதி அமைச்சர் அல்ஹாஜ் எம்.எஸ்.எல்.அமீர்அலி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு அதிதிகளாக வடமாகாண சுகாதார அமைச்சர் பத்மநாதன் சத்தியலிங்கம், முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி ஏ.எல்.என்.மைமுனா அஹமட் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு விழா ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது.

## கலைஒளி வீதி புனரமைப்பு

சிறுப்பிட்டி மேற்கு கலைஒளி வீதியானது தற்போது புனரமைப்புச் செய்யப்பட்டு வருவதாக வீதியைப் பயன்படுத்துவோரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வீதியான்து திருத்தப்பணிகள் மேற்கொள்ள என கற்கள் பறிக்கப்பட்டு நீண்ட காலமாக புனரமைக்கப்படாது காணப்பட்டதால் பயணிகள் போக்குவரத்துச் செய்வதில் சிக்கல் நிலை ஏற்பட்டிருந்தது. இது தொடர்பில் பயணிகள் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் விடுத்த கோரிக்கையினை அடுத்தே மேற்படி வீதியின் திருத்தப்பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

பல்வேறு தரப்பினரும் அன்றாடம் பயன்படுத்தி வரும் இந்த வீதியின் திருத்தப்பணிகள் வெகு விரைவில் முடிவடைந்தால் இலகுவாக பயணத்தை மேற்கொள்ள முடியும் எனவும் விபத்துக்கள் மற்றும் வாகனங்கள் பழுதடைவது தவிர்க்கப்படும் எனவும் பல பயணிகள் தமது மகிழ்ச்சியை தெரிவித்துள்ளனர். (85)

## சமுர்த்திப் பயனாளிகள் சிரமதானம்

ஸ்கந்தபுரம் சமுர்த்தி வங்கிச் சங்கம் சமுர்த்தி பயனாளிகளால் சிரமதான்ம் மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது. ஸ்கந்தபுரத்தில் அமைந்துள்ள சமுர்த்தி வங்கிச் சங்கம் கண்ணகைபுரம் கிராமத்தின் சமுர்த்தி பயனாளிகளால் நேற்றைய தினம் காலை சிரமதானப்பணி மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

கண்ணகைபுரம் சமுர்த்தி உத்தியோகத்தரின் ஒழுங்குபடுத்தலில் மேற்கொள்ளப்பட்ட சிரமதானப் பணியில் 75 வகையான சமுர்த்திப் பயனாளிகள் கலந்து கொண்டதுடன் வங்கி வளாகம் முற்று முழுதாகத் துப்புரவு செய்யப்பட்டுள்ளது. (69)

## அதிகரித்த வெப்பத்தால் தார் உருகும் வீதிகள்

(யாழ்ப்பாணம்)

வெப்பம் அதிகரித்துள்ளதால் காப்பெற் வீதி தவிர்ந்த ஏனைய வீதிகளில் தார் உருகுவதால் மக்கள் பயணம் செய்வதற்கு பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

சித்திரை மாதம் ஆரம்பித்ததையடுத்து வெப்பம் அதிகரித்துள்ளது. கொளுத்தும் வெயிலால் பகல் வேளைகளில் நடமாடுவதற்கு மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

அதுமட்டுமன்றி யாழ்.குடாநாட்டின் பிரதான வீதிகள் காப்பெற் இடப்பட்டிருந்தாலும் ஏனைய வீதிகள் சாதாரண வீதிகளாகவே காணப்படுகின்றன. இத்தகைய சாதாரண வீதிகள் அதிகரித்துள்ள வெப்பத்தால் உருகுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு தார் உருகுவதால் சாதாரண வீதிகளில் பயணிப்பதற்கு பாதசாரிகள் மட்டுமன்றி வாகனங்களில் செல்வோரும் சிரமப்படுவதாக கூறுகின்றனர்.

குறிப்பாக ஆனைக்கோட்டையில் இருந்து வட்டுக்கோட்டை வரையிலான நவாலி காரைநகர் வீதி அதிகரித்த வெப்பத்தால் பகல் வேளைகளில் தார் உருகி பயணம் செய்ய முடியாதுள்ளதாகவும் குறிப்பிடுகின்றனர். (66)

## பாலஸ்தாபன அபிஷேகம்

(நுணாவில்)

நுணாவில் மேற்கு அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலய புனராவர்த்தன பாலஸ்தாபன அபிஷேகம் இன்று காலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பாலஸ்தாபன கிரியைகள் நேற்று வெள்ளிக்கிழமை முதல் இடம்பெற்று இன்று காலை பாலஸ்தாபனம் இடம்பெறவுள்ளது. (இ)

# அரசியல் என்பது என்ன? - 04

● வீ.சுந்தரராஜன்

அரசியல் என்பது மக்களின் மீட்சிக்கான ஒரு வழிமுறையாகும். அது மக்களுக்கு கிடைக்கின்ற நல்வாய்ப்புமாகும்.

அதாவது, ஜனநாயக அரசியலில் மக்கள் தமது தெரிவைச் செய்வதற்கான வாய்ப்பு கிட்டுகிறது. இந்த வாய்ப்பைச் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்வதற்கு சிவில் அமைப்புகளும், ஊடகங்களும், புத்திஜீவிகளும், ஊடகவியலாளர்களும் உதவ வேண்டும்.

அரசியலை அதன் கள யதார்த்த நிலைகளோடு, சர்வதேச நிலவரங்களையும் இணைத்து மதிப்பிட்டு, தமது மக்களுக்குரிய தெரிவைச் செய்வதற்கு இந்தத்தரப்புகள் உதவ வேண்டும்.

ஆனால், எமது தமிழ்ச் சூழலில் இந்த நிலைக்கு வாய்ப்பே இல்லை. தமிழ்ச் சூழலில் உள்ள அரசியலாளர்களையும் விட, புத்திஜீவிகளும், சிவில் அமைப்புகளும், ஊடகங்களும், ஊடகவியலாளர்களில் பலரும் மக்களுக்கு எதிராகச் சிந்திப்போராகவே உள்ளனர்.

இதனால்தான் ஈழத்தமிழர் அரசியல் என்பது இத்தனை ஆண்டு காலத்தின் பின்னரும், இவ்வளவு பெரிய – நீண்ட போராட்டங்களின் பின்பும், இத்தனை தியாகங்களுக்குப் பிறகும், எவ்வளவோ இழப்புகளைச் சந்தித்த பின்பும் பாழடைந்த நிலையிலேயே இருக்கிறது என்றால் –

இதற்கெல்லாம் யார் பொறுப்பு?

கடந்த காலத்தின் அத்தனை வீழ்ச்சிக்கும் நிகழ்காலத்தின் இந்தத் தேக்கத்துக்கும் அனைவருமே பொறுப்பு.

இதிலிருந்து யாருமே தப்பி விட முடியாது.

தேர்தற்காலங்களில் மக்கள் எந்தக் கட்சிக்கு – எந்தத்தரப்புக்கு வாக்களிக்க வேண்டும் என்று அறிக்கைகளைத் தயாரித்தவர்கள் அந்தத்தரப்பு விடும் சரி பிழைகளுக்கும் அரசியல் வீழ்ச்சிக்கும் தவறுகளுக்கும் பொறுப்புக் கூற வேண்டும்.

அரசியல் என்பது பொறுப்புக் கூறுதலாகும்.

அந்தப் பொறுப்புக் கூறுதலைச் செய்ய வேண்டியதில்லை என்றுதான் அரசியற் கட்சிகளும் அரசியல் தலைவர்களும் இணையப் போராளிகளும் புத்திஜீவிகளும் பேஸ்புக் புரட்சியாளர்களும் தேசியப் புரட்சிகரப் படைப்பாளிகளும் ஆய்வாளர்களும் ஊடகவியலாளர்களும் கருதுகின்றனர்.

அரசியல்வாதிகளுக்குள்ள அளவுக்கு ஏனையோருக்கும் பொறுப்புக் கூறவேண்டிய கடப்பாடு உண்டு.

பொறுப்புக் கூறாத அரசியல் கண்ணியமில்லாத நடவடிக்கையை உண்டு பண்ணும்.

தமிழர்களின் அரசியல் என்றைக்குமே தமிழ் மக்களுக்குப் பொறுப்புக் கூறும் பண்பை கொண்டமைந்ததல்ல.

அது எப்பொழுதும் எதிர்த்தரப்பின் மீது – அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்துவதிலேயே குறியாக இருந்தது. இன்னும் அப்படித்தான் உள்ளது.

எதிர்தரப்பை குற்றம் சுமத்தி விட்டுத் தப்பிவிடும் கண்ணியமற்ற செயலுக்கான கவசம்தான் தமிழ்த்தேசியம் என்பது.

இந்தத் தமிழ்த்தேசியம் என்ற கருதுகோளில் என்றுமே மக்களுக்கான அரசியல் இருந்ததில்லை. அரசியலுக்கான அறமோ விவேகமோ வெற்றிக்கான ஊற்றுகளோ இருந்ததில்லை.

இதனால்தான் தமிழ்த்தேசிய அரசியலை முன்னெடுத்தவர்கள் வெற்றியடைந்தனர். தமிழ்த்தேசிய அரசியலை ஆதரித்தவர்கள் தோல்வி கண்டனர்.

அதாவது, பொறுப்புக் கூறத்தேவையில்லை என்ற வாய்ப்பைப் பயன்படுத்தி, தமிழ்த்தேசியம் என்ற கவசத்தை அணிந்து, இந்த அரசியல்வாதிகள் வெற்றியடைந்தனர்.

இவர்களை ஆதரித்த மக்கள் எப்போதும் தோல்வியையும் இழப்புகளையுமே சந்தித்தனர். இதுதான் இன்றைய நிலையும்.

நாடாளுமன்றிலும் மாகாணசபையிலும் உள்ளூராட்சி மன்றுகளிலும் அதிக ஆசனங்களோடிக்கும் தேசியவாதிகளால் மக்களுக்குக் கிடைக்கின்ற நன்மைகள் என்ன?

இதைப்பற்றியெல்லாம் யாரும் கேட்க முடியாது. ஏனென்றால், அரசியல் என்பது, பொய்யர்களின் தேசியச் சொத்தாகும் என்றே தமிழ்ப்பொது வெளி கருதிக்கொண்டிருக்கிறது. இவர்களைத்தான் அது தியாகிகள் என்றும் போற்றுகிறது.

இது மயானத்துக்கான வழியாகும்.

நீ நிமிர்ந்து நிற்கும்வரை உன் நிழல் கோணலாய் இருப்பதைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## தமிழ் சிந்தனைக்கு என்ன பெயர்?

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைக்கும் சதி வேலைகளில் ஈடுபட்டிருப்பதாக கூட்டமைப்பின் ஊடகங்களும் கட்டுரை எழுத்தாளர்களும் எழுதிவருகின்றனர்.

தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவரும் வடமாகாணசபை முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன் அவர்களைப் பொய்யர் என்று இந்தியத் தொலைக்காட்சிப் பேட்டியில் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்ததே இவர்களது கோபத்திற்குக் காரணம்.

அவர் இவரைப் பொய்யர் என்பதும், இவர் அவரைச் சிரிக்கவே தெரியாத இனவாதி என்பதும், வரப்போகும் தேர்தலுக்காக இருபக்கத்து இனவாத வாக்குகளையும் அள்ளுவதற்காக இருவரும் சேர்ந்து நடத்தும் நாடகம் என்று சிலர் சொல்கிறார்கள் என்பது ஒருபுறம் இருக்கட்டும்.

தன்னோடு நேர்ப்பேச்சுகளில் குழைந்து சிரித்து வாழ்த்திக் கதைத்துவிட்டு, மாகாணசபைத் தீர்மானத்தின்போது, தன்னை இனவாதி என்றும் இனஅழிப்பைச் செய்தவர் என்றும் குறிப்பிட்டதற்காகவே எரிச்சலடைந்த பிரதமர் ரணில் முதலமைச்சரைப் பொய்யர் என்று குறிப்பிடும்படியானது.

இது ஒருவரது தனி ஆளுமையிலுள்ள போலித்தன்மையையும், கபடத்தனத்தையும் சுட்டுவதற்காகச் சொல்லப்பட்ட குற்றச்சாட்டு என்பது தெளிவு. ஆனால், தமிழ்க் கட்டுரையாளர்கள் ஏதோ இதை தமிழ் சமூகத்திற்கும் சிங்கள சமூகத்திற்கும் இடையிலான பிரச்சினையாகக் காட்ட முற்படுகின்றனர்.

பெரும்பான்மையான தமிழ் ஊடகங்களும் அவற்றின் கட்டுரையாளர்களும் இந்த நாட்டினது இனப்பிரச்சினையைத் தீர்க்கும் முறையில் – தமிழ், சிங்கள, முஸ்லிம் – சகலதரப்பு எண்ணப்பாடுகளையும் அவர்களது சந்தேகங்களையும் அவற்றை எதிர்கொள்ள வேண்டிய முறைகளையும் அலசி நடுநிலைத் தன்மையோடு எழுதுவதில்லை என்பது தெரிந்ததே.

தமிழ்த் தரப்பின் நியாயங்களை மட்டுமே உலகில் உள்ள அனைவரும் கேட்க வேண்டும் அதைத்தான் பேச வேண்டும். அவ்வாறில்லையேல் அவர்கள் துரோகிகள்... நம்மை ஏமாற்றி விட்டார்கள்... என்று வசைபாடுவதே தமிழ்க் கட்டுரையாளர்களின் வழக்கமாக இருந்துவருகிறது.

இப்போது இது இன்னும் ஒருபடி மேலே போய், இவர்களெல்லாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சி எழுத்தாளர்கள் தான் என்பது போல "இறங்கி அடிப்பதாக" மாறியிருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விமர்சிப்பவர்கள் எல்லோரையும் தமிழ்த் துரோகிகளாகவும், சிங்கள இனவாதத்திற்குத் துணைபோகிறவர்களாகவும் சொல்லி கட்சி விசுவாசம் மிக்க ஊழியர்கள் போல, தாங்களறியாமல் கூட தமிழ் இனவாதத்தையே எழுதிவருகிறார்கள்.

நேற்றுவரை கொண்டாடிய, கூடிக் கொடி பிடித்த ரணில் தமிழர்களைப் பிளவுபடுத்தும் சதிகாரர் என்றால், நீங்க்ள் யாருக்குத் தான் அங்கே நிரந்தரமாக உங்கள் பாராட்டுப்பத்திரத்தை வாசிக்கிறீர்கள்? கூடிக் குலாவுவதும் கொடிய நாகம் இவர்தான் என்றும் மாத்தி மாத்தி ஏமாற்றிக் கொண்டிருப்பதன் பொருள் என்ன?

ரணில் சதிகாரர் என்றால், வேறு யார் நீங்கள் அங்கே பேசக் கூடிய நபர்கள்? மைத்திரி? சந்திரிகா? மகிந்த? இடதுசாரிகள்? வலதுசாரிகள்? சிங்களப் பொதுமக்கள்....

ஒரு சமூகத்தைச் சேர்ந்த யாருமே சரியில்லை என்பது யூத வெறுப்புக் கொண்ட ஹிட்லரின் பார்வையல்லவா? கடைந்தெடுத்த பாசிசமல்லவா?

சுயலாப அரசியலுக்கும் தேர்தல் வெற்றிக்குமாக ஒரு கட்சியினர் தமிழ் இனவாதத்தையும் அடையாள அரசியலினூடான பாசிசத்தையும் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்றால், பத்திரிகையாளர்களும் கட்டுரையாளர்களும் அதையே எழுதிக்கொண்டிருப்பதற்கு என்ன பெயர்?

- ஆசிரியர்

# முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவின் விசாரணை அறிக்கை அடுத்தவாரம் வெளியீடு

(கொழும்பு)

ரஷ்யாவின் முன்னாள் இலங்கைத் தூதுவரான உதயங்க வீரதுங்க, உக்ரைனின் தீவிரவாத அமைப்பிற்கு ஆயுதங்கள் விநியோகித்ததாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான முழுமையான விசாரணை அறிக்கை அடுத்த வாரம் வெளியிடப்படவுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி கூடவுள்ள நாடாளுமன்றத்தில் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது. நிலையியல் கட்டளைச் சட்டம் 23 - 2 இன் கீழ் நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் கூடிய போது, ஜனநாயக தேசிய முன்னணியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஒருவார காலத்திற்குள் அறிக்கை தயாரிக்கப்படும் எனக் கூறியிருந்தாலும் ஒத்திவைக்கப்பட்ட நாடாளுமன்றம் 20 ஆம் திகதி மீண்டும் கூடவுள்ளது.

இதன் போதே உதயங்க மீதான அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உறவினரான உதயங்க வீரதுங்க, உக்ரைனின் அரச எதிர்ப்பு அமைப்பிற்கு ஆயுதம் விநியோகித்துள்ளதாக உக்ரைன் வெளி விவகார அமைச்சு, இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு அறிவித்துள்ளது. இதுகுறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், ரஷ்யாவின் முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்க தலைமறைவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுதந்திரக் கட்சியின் அமைச்சர்களை எதிர்க்கட்சிக்கு கொண்டு வருவேன்

### தினேஸ் குணவர்தன சூளுரை

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவராகத் தான் பொறுப்பேற்றால் அரசாங்கத்தில் அமைச்சர் பதவி பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்களை மீண்டும் எதிர்க்கட்சிக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளப் போவதாக மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

எதிர்க்கட்சியில் இணையாத உறுப்பினர்கள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் செயற்படலாம்.

எதிர்க்கட்சியில் இருப்பதென்றால் அரசாங்கத்தில் பதவி பெறாதவர்களாக இருக்க வேண்டும்.

உண்மை நிலையை அறியாத ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்ள பல காலமாக எதிர்பார்த்தவர்களே அமைச்சர் பதவிகள் பெற்றுக்கொண்டுள்ளனர்.

பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் செயற்பட விரும்பியவர்கள் ஐக்கிய தேசிய கட்சியுடனே செயற்பட முடியும். எப்படியிருப்பினும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இதுவரை பிளவுபடவில்லை.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்றும் பிரபல்யமான அரசியல் தலைவர். எங்கள் நம்பிக்கை எதிர்வரும் பயணத்தில், மக்களுடன் இணைந்து நாட்டில் வெற்றியான பயணத்தை மேற்கொள்வதே என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# புதுவருடத்தை முன்னிட்டு விசேட பேருந்து சேவை

புதுவருடத்தை முன்னிட்டு உள்ளூர் மற்றும் வெளிமாவட்டங்களுக்கான விசேட பேருந்துச் சேவைகள், மேற்கொள்ளப்பட்டு வருவதாக இலங்கை போக்கு வரத்துச் சபையின் வடபிராந்திய பொது முகாமையாளர் அஸ்கர் தெரிவித்தார்.

தற்போது பண்டிகைக் காலம் என்பதால் வெளிமாவட்டங்களுக்கு விடுமுறையில் செல்லும் பொது மக்களின் நலன் கருதி விசேட போக்குவரத்துச் சேவைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதுடன். உள்ளூர் சேவைகளும் மக்களின் தேவை கருதி மேலதிகமான சேவைகள் மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பாக அதிகளவில் மக்கள் பயணங்களை மேற்கொள்ளும் வழித்தடங்களுக்கான சேவைகளில் கூடுதல் பேருந்துகள் நேர அடிப்படை இல்லாது தேவைக்கு ஏற்றால் போல சேவைகள் மேற்கொள்ளப்படுவதுடன் இதன் மூலம் மக்கள் அசௌகரியங்கள் இன்றி பயணங்களை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## ஆயிலடி விநாயகர் ஆலய புத்தாண்டு விழா

சாவகச்சேரி கல்வயல ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலய இளைஞர் குழுவின் ஒருங்கிணைப்பில் புத்தாண்டு விழா கொண்டாடப்படவுள்ளது.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஆலய மண்டபத்தில் பிற்பகல் 4 மணிக்கு ஆசிரியர் சி.இளந்திரையன் தலைமையில் நடைபெறும். விழாவில் பேராசிரியர் க.கந்தசாமி பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளதோடு. சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன், சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி.க.கிருபாசக்தி ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்து கொள்கின்றனர்.

மங்கள விளக்கேற்றல், தேவாரம், வரவேற்புரை, தலைமையுரை, நடனம், பிரதம விருந்தினர் உரை, கௌரவ விருந்தினர் உரை, சுப்பர் சிங்கர் பாட்டுப்போட்டியின் இறுதிச் சுற்று, அறக்கொடை வழங்கல், பரிசில் வழங்கல் என்பன இப்புத்தாண்டு விழாவின் போது இடம்பெறவுள்ளன.(இ)

## சசீந்திர ராஜபக்ஷவிடம் விசாரணை

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சுக்குச் சொந்தமான அதிசொகுசு பேருந்து இரண்டை முறைகேடாக பயன்படுத்தியமை தொடர்பில் சசீந்திர ராஜபக்ஷவிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சசீந்திர ராஜபக்ஷவிடம் நிதி குற்றங்கள் பிரிவில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

2013ஆம் ஆண்டு பொதுநலவாய மாநாடு இலங்கையில் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் கொண்டுவரப்பட்ட வெளிவிவகார அமைச்சுக்குச் சொந்தமான அதிசொகுசு பஸ்கள் இரண்டினை முறைகேடாக பயன்படுத்தியமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு தொடர்பில் அவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# போதையில் வந்த இருவர் பொலிஸார் மீது தாக்குதல்

திருகோணமலை மாஹாமாயாபுரச் சந்தியில் நேற்றுமுன்தினம் இரவு நேரக் கடமையில் ஈடுபட்டிருந்த இரு பொலிஸார் மீது குடிபோதையில் வந்த இருவர் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான பொலிஸாரில் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸாரை தாக்கிய சந்தேக நபர்கள் செலுத்தி வந்த முச்சக்கரவண்டியினை சோதனையிட பொலிஸார் முற்பட்ட சந்தர்ப்பத்திலேயே இரு தரப்பினருக்கும் இடையில் மோதல் நிலை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக குறித்த சந்தேக நபர்கள் இருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளதோடு அவர்கள் பயணித்த முச்சக்கரவண்டியையும் கைப்பற்றியுள்ளனர்.

இதேவேளை கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை பொலிஸார் திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளனர்.

### 2015-03-26 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற தேசிய கல்வி நிறுவன பட்டமளிப்பு விழாவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் எஸ். பத்மநாதன் ஆற்றிய உரை

# இலங்கையில் நாடாளுமன்ற ஜனநாயகமும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையும்

(நேற்றைய தொடர்ச்சி)

நாடு பிரதான பிரச்சினைகளுக்கு இணக்க முறையான அணுகுமுறையைக் கடைப்பிடித்து தேசிய ஐக்கியத்தை ஊக்குவிப்பதற்குப் பதிலாக 1972 ஆம் அரசியல் யாப்பானது ஒற்றுமையின்மைக்கும் நாட்டின் பிரிவினைக்குமான விதைகளைக் கொண்டு விளங்கியது. அழிவும் பயங்கரமானதுமான உள்நாட்டு யுத்தம் 1972 ஆம் ஆண்டு யாப்பின் விளைவாகும். ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் அரசியல் கட்சிகளை இல்லாமல் செய்து பெரும் வெற்றியை ஈட்டி, காலஞ்சென்ற ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஆட்சிபீடம் ஏறினார். ஐக்கிய தேசியக் கட்சி 80 சதவீதமான ஆசனங்களைப் நாடாளுமன்றத்தில் பெற்றுக்கொண்டது. அவருடைய கட்சி மீதும் அவருக்குரிய நாடாளுமன்றத்தின் மீதும் அவருக்குப் பூரண கட்டுப்பாடு இருந்தது. ஜனநாயக தாராளவாதமற்ற அரசியல் யாப்பொன்றினைத் தனது முன்னோர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட இவர், அதனை சீர்திருத்தி மெருகூட்டுவதற்குப் பதிலாக அதனை அரசியல் திட்ட எதேச்சாதிகாரத்துக்கு அத்திவாரமாக மாற்றியமைத்தார்.

1972 ஆம் ஆண்டு அரசியலமைப்புக்கு ஒரு திருத்தம் கொண்டு வந்ததன் மூலம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை உருவாக்கப்பட்டது. அவருக்குப் பின் வந்தவர்களினால் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட விசேட அதிகாரங்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதோடு நாடாளுமன்ற அதிகாரமும் பாதிப்புக்குள்ளானது.


1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பு அதற்கு முன்பிருந்த அரசியல் அமைப்பில் காணப்பட்ட குறைபாடுகளை நீக்குவதற்கு முயற்சித்தது. குறிப்பாக அரசின் நிறைவேற்று அல்லது நிர்வாக செயற்பாடுகளுக்கு எதிராக நீதித்துறை தலையிடக்கூடியவாறு அடிப்படை உரிமைகள் அத்தியாயம் ஒன்று இதில் சேர்க்கப்பட்டது. நீதித்துறையினதும் பொது அரசாங்க சேவையினதும் சுதந்திரத்தைப் பேணுவதற்கான ஒழுங்குகள் 1972 அரசியலமைப்பை விட நல்லவையாகக் காணப்பட்டன. விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையின் கீழ் சிறுபான்மையினரையும் சேர்த்துக்கொள்ளும் குறிப்பிடத்தக்க முறையொன்றும் அதில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை அறிமுகப் படுத்தப்பட்டமை 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் பிரதான புத்தாக்கமாக விளங்கியது. இது பற்றி பொதுமக்களிடம் ஆர்வமோ அல்லது எதிர்கட்சிகளின் ஆதரவோ காணப்படவில்லை. நாட்டின் அரசியல் பாரம்பரியங்களிலும், நிறுவனங்களிலும் இது குறிப்பிடத்தக்க விளைவுகளை ஏற்படுத்தியது. அளவுக்கு மிஞ்சிய அதிகாரமுடைய நிறைவேற்று அதிகாரியூடாக அதிகாரத்துக்கான வலு இதன் மூலம் உருவானது. அரசாங்க அங்கங்களிடையே (சட்டத்துறை, நிர்வாகத்துறை மற்றும் நீதித்துறை) அமைப்பு, ரீதியான சமநிலை காணப்படாமையால் அச்சமின்மை ஜனாதிபதி முறைமைக்கு சார்பாக விளங்கியது. இதன் விளைவாக நாடாளுமன்றத்தையும் நீதித்துறையையும் பாதிக்குமளவிற்கு அதிகார ஆட்சி முறைமைக் கலாசாரம் ஒன்று உருவானது. அத்துடன் எஞ்சியிருந்த அரசியல்த் திட்ட கலாசாரம் கூட நாடாளுமன்றத்திலிருந்த பெரும்பான்மையின் கட்டுப்பாட்டினால் குறைக்கப்பட்டது.

தற்போதைய அரசியலமைப்பின் 7 ஆம் அதிகாரம் ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்களையும் கடமைகளையும் குறிப்பிட்டுள்ளது. நாட்டின் தலைவராகவும் அரசாங்கத்தினதும் நிர்வாகத்துறையினதும் தலைவராகவும் ஆயுதம் தாங்கிய முப்படைகளின் தலைவராகவும் ஜனாதிபதி விளங்குவதற்கான ஏற்பாடுகள் அதில் காணப்படுகின்றன. நாட்டின் மற்றும் அரசாங்கத்தின் தலைவர் என்ற முறையில் அவர் பிரதம மந்திரியையும் ஏனைய மந்திரிகளையும் நியமிப்பதோடு தாம் விரும்பியவாறு அவர்களுக்குரிய கடமைகளையும் கட்டுப்பாடுகளையும் திணைக்களங்களையும் ஒதுக்குகின்றார். அவ்வாறான நினமனங்களுக்கு குறிப்பிடத்தக்க கட்டுப்பாடு எதுவுமில்லை. அவர் தேசியக் கொள்கையை வகுப்பதோடு நாடாளுமன்றத்துக்கும் சமூகமளிப்பார். அத்துடன் நடைமுறைப்படுத்தப்படுவதற்கான பிரேரணையையும் முன்வைப்பார். நிர்வாக அமைப்பில் காணப்படுகின்ற உயர் பதவிகளுக்கான உத்தியோகத்தர்களையும் நியமிப்பார். எந்தவொரு அமைச்சையும் அவர் பொறுப்பேற்க முடியும். அவருடைய பொறுப்பின் கீழ் கொண்டு வரக்கூடிய அத்தகைய அமைச்சுக்களின் எண்ணிக்கை பற்றி எவ்வித கட்டுப்பாடும் இருக்கவில்லை.

ஒழுங்கற்ற நடவடிக்கை அல்லது அதிகார துஷ்பிரயோகம் காரணமாக ஜனாதிபதி மீது எந்தவொரு நீதிமன்றத்திலும் வழக்குத் தொடர முடியாது. 8ஆம் அதிகாரத்தின் 35 ஆவது சரத்து பின்வருமாறு கூறுகின்றது. "ஒரு ஜனாதிபதியாகப் பதவி வகிக்கும் ஒருவர் தமது பதவி வழியாக" அல்லது தனிப்பட்ட ரீதியாக அவர் செய்யத் தவறுகின்ற அல்லது செய்த எக்கருமத்துக்கும் எந்தவொரு நீதிமன்றத்திலும் வழக்குத் தாக்கல் செய்யவோ தொடரவோ முடியாது.'

இந்த ஏற்பாடானது ஜனாதிபதிக்கு நீதிவிலக்களித்துள்ளது. அரசியல் திட்ட சர்வாதிகாரத்துக்கான அடிப்படையாக இது விளங்குகிறது. நாடாளுமன்றத்தின் பெறுமதி குறைக்கப்பட்டதோடு அது ஜனாதிபதியில் தங்கிநிற்கும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையானது நீதித்துறை சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தியுள்ளது. இங்கிலாந்தில் 3ஆம் ஜோர்ஜ் மன்னன் காலத்திலிருந்து பதவிக்கு வந்த மன்னர்களுக்கு இருந்த அதிகாரங்களை விட 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பு ஜனாதிபதிக்குக் கூடிய அதிகாரங்களை வழங்கியுள்ளது.



அரசாங்க மற்றும் எதிர்க்கட்சியின் உதவியோடு நிறைவேற்றப்பட்ட 17 ஆவது திருத்தம் ஜனாதிபதியின் அரசியல் திட்ட சர்வாதிகாரத்தினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் குறைப்பதற்கான ஓர் அரசியல் திட்ட உத்தியாக ஓரளவிற்குக் கருத முடியும். இந்தத் திருத்தத்தின் ஏற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டிருப்பின் எதனையும் அரசியல் மயமாக்கும் தன்மையைக் குறைத்திருக்கலாம். இத் திருத்தமானது சுயாதீனக் குழுக்களை அமைப்பதற்கு இடமளித்தது. நீதிச்சேவை ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு மற்றும் பொதுச் சேவை ஆணைக்குழு, இத்திருத்தத்தின் அமுலாக்கம் நிர்வாகத்தை அரசியல் மயமாக்காது ஜனநாயக செயல்முறைக்கும் மீண்டும் உயிர் அளிக்கின்ற பாராட்டத்தக்க அம்சத்தைக் கொண்டு விளங்கியது. எனினும் இது நடைபெறவில்லை. அரசியலமைப்பின் 18ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்தின் மூலம் இது முழுமையாக வாபஸ் பெறப்பட்டது.

18 ஆவது திருத்தத்தின் கீழ் ஜனநாயகம் பாரிய பாதிப்புக்குள்ளானது. இது அரசியல் திட்ட சர்வாதிகாரத்துக்கு வலு சேர்த்தது. ஜனாதிபதி எத்தனை தடவைகள் பதவி வகிக்கலாம் என்ற கட்டுப்பாடுகள் இதன் மூலம் நீக்கப்பட்டன. 1978 அரசியலமைப்பின் படி ஒவ்வொன்றும் 6 வருடங்கள் கொண்ட 2 தடவைகள் மட்டும் ஜனாதிபதி பதவி வகிக்க முடியும். ஆனால் புதிய திருத்தமானது ஜனாதிபதி எத்தனை தடவைகளும் தெரிவு செய்யப்படக்கூடிய ஏற்பாட்டினைக் கொண்டுவந்தது. அத்துடன் சமநிலையைப் பேணுவதற்காக இருந்த அரசியல்த் திட்ட சபையையும் இது ஒழித்தது. அத்துடன் ஜனாதிபதியின் கட்டுப்பாட்டின் கீழ் நீதித்துறையும் கொண்டு வரப்பட்டது.

ஜனாதிபதி தமது பதவிக் காலத்தில் சர்வ அதிகாரத்தையும் பயன்படுத்தக்கூடியவாறு அவருடைய அதிகாரங்களைப் பலப்படுத்துவதற்காகவே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையில் அரசியல் அமைப்பு திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன என்பது ஆய்வுகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. மந்திரிப் பதவிகள் வழங்குவதன் மூலமும் விரும்பும் வேறு பதவிகள் மூலமும் கட்சி மாறுதல் ஊக்குவிக்கப்பட்டு அரசியல் கட்சிகள் பிளவுபடுத்தப்பட்டன. இந்த வகையில் பெரிய கட்சிகளும் சரி சிறியனவும் சரி அதிர்ச்சியைத் தரும் அனுபவத்திற்குள்ளாகின. கட்சி மாறுதல்கள் மூலம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறக்கூடியதாக இருந்ததோடு ஜனாதிபதியின் சர்வாதிகாரத்தினை வலுவாக்கும் நிலை ஏற்பட்டது. அரசியல்வாதிகள் பலருக்கு நாடாளுமன்ற அரசியல் ஒரு வியாபாரமாகியது. அத்துடன் அவர்கள் தமக்கு வாக்களித்தோரைக் கைவிடுவதற்கும் தமக்கு அரசியல் கோட்பாடுகளைப் புறந்தள்ளுவதற்கும் தயாராகவிருந்தனர்.

இந்நிலையில் தொழிற்சங்கங்கள், கல்விசார்புடையோர் மற்றும் சிவில் சமூகத்தினர் சுதந்திரத்திற்கும் மனித உரிமைகளுக்கும் ஏற்பட்ட அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்கு விழித்தெழுந்ததோடு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்குவதற்கு ஆர்வத்துடன் குரலெழுப்பினர். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை தொடர்பான திருத்தங்களை நீக்குவதற்கு நவீன வரலாற்றில் முதன் முதலாக சகல இனத்துவ குழுவினரும் ஐக்கியப்பட்டு ஆணை வழங்கியமை குறிப்பிடத்தக்கதாகும். இத்தகையதொரு செயற்பாடு நாடாளுமன்ற ஜனநாயகத்தை உயிர்ப்பிக்கவும் உரிமைகளையும் சுதந்திரத்தையும் பாதுகாக்கவும் முக்கியமானதாகும்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்கிவிடுவது மட்டும் முடிவாகிவிட முடியாது அது தாராளவாத ஜனநாயக அரசாங்க முறைமைக்கான ஒரு படிக்கல்லேயாகும். இது தொடர்பாக 17ஆவது திருத்தத்தின் ஏற்பாடுகளை மீண்டும் சட்டமாக்குவது மிக முக்கியமானதாகும். ஜனநாயகமும் சுதந்திரமும் மீண்டும் ஏற்படுத்தப்பட வேண்டுமாயின் சலுகைகாட்டல் அதிகார ஊழல் மற்றும் துஷ்பிரயோகம் போன்றவற்றிற்கு இறுதியில் இட்டுச் செல்லும் அரசாங்க அங்கங்களையும் நிறுவனங்களையும் அரசியல் மயப்படுத்தும் செயற்பாட்டுக்கு கட்டுப்பாடு கொண்டு வரப்படல் அவசியமானதாகும்.

அரசியல் என்பது அரசியல்வாதிகளின் பிரத்தியேகக் கரிசனையாக இருக்க முடியாது. தம்மைத் தெரிவு செய்தவர்களின் அபிலாஷைகளைத் தெளிவுபடுத்துபவராகவும் நிறைவேற்றுபவராகவும் இருக்க வேண்டிய முகவர்கள் தாம் என்பதை இன்று அவர்கள் அலட்சியம் செய்ய முற்படுகின்றனர். அதிகாரம் பற்றிய விழிப்புணர்வே சுதந்திரத்திற்கான பெறுமதியாகும். ஜனநாயக விழுமியங்களும், நிறுவனங்களும் நிலைத்திருப்பதற்கு சுதந்திரமும் அறிவும் கொண்ட சிவில் சமூகத்தின் வளர்ச்சியானது தவிர்க்க முடியாத தேவையாகும். இவ்வாறான நிலைமை தோன்றுவதற்கு குடிமக்களிடம் விழிப்புணர்வும் பாரபட்சமற்ற அர்ப்பணிப்பும் இன்றியமையாததாகும்.

# ரணிலுக்கு எதிரான பிரேரணைக்கு ஜனாதிபதி அனுமதி வழங்கமாட்டார்

## அமைச்சர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவிப்பு



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லாப்பிரேரணையை கொண்டுவர ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அனுமதிக்கமாட்டார் என அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

தேசிய அரசாங்கத்தை வீழ்த்தி மீண்டும் மகிந்த ராஜபக்ஷவின் சர்வாதிகார யுகத்தினை ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மகிந்தவின் விசுவாசக் கூட்டணியொன்று முயற்சி செய்து கொண்டிருக்கின்றது. அதன் காரணத்தினாலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் மீது பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு எம்மை குற்றவாளிகளாகக முயற்சிககின்றனர்.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் நடந்த ஊழல் மோசடிகள் மற்றும் கொலை கொள்ளை சம்பவங்கள் அனைத்தும் மக்களுக்கு தெரிந்துள்ளது. அதே போல் கடந்த பத்து ஆண்டுகளில் இவர்கள் ஆட்சி செய்ததன் காரணத்தினால் தான் இன்று எமது அரசாங்கம் அழுத்தங்களுக்கு முகங்கொடுத்து வருகிறது.

இவ்வாறான நிலையில் அரசாங்கத்தை கவிழ்க்க சதி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மகிந்த ராஜபக்ஷவை பிரபல்யப்படுத்தி விமல், தினேஷ், வாசு குழுவினர் அரசாங்கத்திற்கு எதிராக பல சூழ்ச்சி வேலைகளை செய்து கொண்டிருக்கின்றனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வந்து அரசாங்கத்தை கவிழ்க்கும் சதித் திட்டத்தின் பின்னணியில் மகிந்தவே செயற்படுகின்றார். மீண்டும் அவர் அதிகாரத்தை கைப்பற்றி நாட்டை சீரழிக்கப் பார்க்கின்றார். ஆனால் அதற்கு ஒருபோதும் மக்கள் இடம் கொடுக்க மாட்டார்கள்.

அதேபோல் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி யார் பக்கம் நிற்பது என்பதில் இன்றும் குழப்பமாகவே உள்ளனர். மகிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பதா அல்லது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஆதரிப்பதா என்ற குழப்பத்திற்கு முதலில் விடை தேட வேண்டும் என்றார்.

# எதிர்க்கட்சித்தலைவர் யார்? புதுவருடத்தின் பின் தெரியும்

## சுசில் பிரேமஜயந்த தகவல்



தமிழ், சிங்கள புதுவருடத்தின் பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் யார் என்பது அறிவிக்கப்படும் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் 14 கூட்டணிக்கட்சிகளுடனும் தனித்தனியாக பேச்சுவார்த்தை நடாத்தப்படும்.

பேச்சுவார்த்தையின் பின்னர் யார் எதிர்க்கட்சித் தலைவர் என்பது குறித்து அறிவிக்கப்படும்.

எதிர்க்கட்சித் தலைவரை தெரிவுசெய்யும் பொறுப்பினை சபாநாயகர் சமல் ராஜபக்ஷ என்னிடம் ஒப்படைத்துள்ளார்.

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளுடனும் தனித்தனியாக பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும்.

புத்தாண்டின் பின்னர் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி, பொருத்தமான எதிர்க்கட்சித் தலைவர் ஒருவரின் பெயரை வெளியிட உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதற்காக எவ்வளவு கால அவகாசம் தேவை என்பதனை திட்டவட்டமாக கூறமுடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# அரசியல்வாதிகள் சிலருக்கு முதுகெலும்பு கிடையாது

## மேல்மாகாண முதலமைச்சர் கிண்டல்



எனது பதவி பறிபோனாலும். நான் உண்மையைச் சொல்வேன். சில அரசியல்வாதிகளுக்கு முதுகெலும்பு கிடையாது என மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

வத்தளை பிரதேச சபையின் தலைவர் மீது தாக்குதல் நடாத்தப்பட்ட சம்பவம் குறித்து பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமரதுங்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்படவிருந்தது. எனினும் இதுவரையில் தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை. இதற்கு என்னவாயிற்று என நான் எதிர்க்கட்சித் தலைவரிடம் கேள்வி எழுப்புகின்றேன்.

நாட்டின் சில அரசியல்வாதிகளுக்கு முதுகெலும்பு கிடையாது, அதிகார மோகம் கொண்டுள்ளனர். பின்னால் இருந்து முதுகில் குத்தும் செயற்பாடுகள் வழமையாகிவிட்டன.

கடந்த காலங்களிலும் இவ்வாறான சம்பவங்களை நாம் பார்த்துள்ளோம். சந்திரிக்கா ஆட்சி செய்த காலத்தில் மகிந்தவிற்கு எதிராக கோள் சொல்லி மகிந்தவிற்கு எதிராக செயற்பட்டனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு எதிராகவும் இவர்கள் செயற்படக் கூடும். எனது பதவி பறிபோனாலும் நான் உண்மையைச் சொல்வேன்.

தற்போதைய அரசாங்கம் பெரும் எண்ணிக்கையிலான வர்களை தொழில்களிலிருந்து வெளியேற்றியுள்ளது. எமது கட்சியினருக்கு பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டன என்றார்.

# அஸ்கிரிய மகாநாயக்கருக்கு அமெரிக்கா அனுதாபம்



அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் உடுகம ஸ்ரீபுத்தரக்கித தேரர் இயற்கை எய்தியமை தொடர்பில் அமெரிக்கா ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துள்ளது.

தமது எளிமையான வாழ்க்கை முறை மற்றும் பௌத்த போதனைகளின் ஊடாக அனைத்து இலங்கையர்களினதும், வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக அன்னார் அயராத முயற்சிகளை மேற்கொண்டிருந்தார் என இலங்கைக்கான அமெரிக்க தூதரகம் விடுத்துள்ள அனுதாப செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இலங்கையர்கள் மாத்திரமின்றி, அமெரிக்கர்களும் அன்னார் மீது மிகுந்த மரியாதை கொண்டிருந்ததாக அந்த அனுதாபச் செய்தியில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, இயற்கை எய்திய மகாநாயக்க தேரரின் பூதவுடல் கண்டி அஸ்கிரிய விஹாரைக்கு சொந்தமான உடுகம விஹாரையில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

அன்னாரின் பூதவுடலுக்கு அரசியல்வாதிகள், பிரமுகர்கள் உட்பட பெருமளவான மக்கள் இறுதியஞ்சலி செலுத்திவருகின்றனர்.

அஸ்கிரிய மகாநாயக்க தேரரின் இறுதிக் கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை கண்டி பொலிஸ் மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

# மேதினக் கூட்டத்தில் பங்கேற்குமாறு மகிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு

(கொழும்பு)

மே தினக் கூட்டத்தில் பங்கேற்குமாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராபஜபக்ஷவிற்கு உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நாரஹன்பிட்டி அபயராமயவில் வைத்து முன்னாள் ஜனாதிபதிக்கு இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கட்சியின் பொதுச் செயலாளர் அனுர பிரியதர்சன யாப்பாவினால் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ, தென் மாகாண பிரதேச சபை உறுப்பினர்களுடன் நேற்று முன்தினம் சந்திப்பு ஒன்றை நடாத்தியிருந்தார். இந்தச்சந்திப்பிற்கு இடைநடுவில் அனுர பிரியதர்சன யாப்பா,



அபயராமயவிற்கு சென்று அழைப்பினை விடுத்துள்ளார்.

அனுர பிரியதர்சன அபயராமவிற்கு சென்ற போது குழுமியிருந்த பிரதேச சபை உறுப்பினர்கள் இன்னும் வருகிறார்கள் என கோசமிட்டு மகிழ்ச்சியை வெளிப படுத்தியுள்ளனர்.

எனினும், தாம் வந்த விடயத்தை அனுர பிரியதர்சன யாப்பா, மகிந்தவிற்கு அறிவித்துள்ளார்.

அதன் போது கூட்டம் முடிவடையும் வரையில் காத்திருக்குமாறு மகிந்த, அனுரவிற்கு தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதியை பிரதமர் வேட்பாளராக நியமிக்காவிட்டால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டத்தை பகிஷ்கரிக்கப் போவதாக தென் மாகாண பிரதேச சபை உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர.

# பிரதி நீதி அமைச்சர் மன்னிப்புக்கோரவேண்டும்

## பிரபல கலைஞர் கோரிக்கை

பிரதி நீதி அமைச்சர் சுஜீவ சேனசிங்க பகிரங்க மன்னிப்பு கோர வேண்டுமென பிரபல கலைஞர் ஜக்சன் அந்தனி கோரியுள்ளார்.

பிரபல சிங்கள திரைப்பட நடிகையும், தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினருமான மாலினி பொன்சேகாவை நாடாளுமன்றில் கடுமையாகத் திட்டியதாக சுஜீவ சேனசிங்க மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஐரோப்பாவில் பஸ் தரப்பிடமொன்றில் இவ்வாறு கூறினாலும் தண்டனை விதிக்கப்பட்டிருக்கும்.

எனினும் இலங்கையில் நாடாளுமன்றிலும் பெண்கள் இழிவு படுத்தப்படுகின்றனர்.

நாடாளுமன்றில் பெண்களின் பிரதிநிதிகளை அதிகரிக்க வேண்டும் எனவும், பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஒழிக்கப்பட வேண்டுமெனவும் கோரும் ஆளும் கட்சி அமைச்சர்கள் எங்கே? அவர்கள் இது பற்றி என்ன சொல்கின்றார்கள்.

இந்த இழிவுபடுத்த ஒட்டுமொத்த கலைத்துறையையும் பாதிக்கும்.

சுஜீவ சேனசிங்க ஒட்டுமொத்த பெண்களிடமும் பகிரங்கமாக மன்னிப்புக் கோர வேண்டும் என ஜக்சன் அந்தனி நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

# சிறைக் கைதிகளுக்கு புதுவருட விடுமுறை

வீட்டுக்குச் சென்று புதுவருடத்தை கொண்டாடி மீண்டும் சிறைச்சாலை திரும்புவதற்கு சில கைதிகளுக்கு அனுமதி வழங்கப்பட உள்ளது.

நன்நடத்தை அடிப்படையில் இவ்வாறு கைதிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

எதிர்வரும் தமிழ், சிங்கள புதுவருட காலப்பகுதியில் வீட்டுக்குச் சென்று குடும்ப உறுப்பினர்களுடன் மகிழ்ச்சியாக புதுவருடத்தை கொண்டாடுவதற்கு சில கைதிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட உள்ளது. இதனை சிறைச்சாலைகள் ஆணையாளர் எம்.பீ.ஆ.புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

போதைப் பொருள் கடத்தல், கொலைகள், கொள்ளைகள் உள்ளிட்ட பாரிய குற்றச் செயல்கள் தொடர்பில் குற்றம் சுமத்தப்படாத வேறும் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய நீண்ட காலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நன்நடத்தை கைதிகளுக்கு இந்த சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது.

புதுவருடத்தின் ப…ர் சிறைச்சாலை திரும்பும் வாக்குறுதியின் அடிப்படையில் கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளனர்.

நிபந்தனை அடிப்படையிலேயே இந்தக் கைதிகளுக்கு புதுவருடத்தை கொண்டாட சந்தர்ப்பம் அளிக்கப்படவுள்ளது.

# மக்களின் செயற்பாடுகளை முடக்கும் முயற்சிகள் தீவிரம்

## மக்கள் விடுதலை முன்னணி குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

மக்களின் செயற்பாடுகளை முடக்கி நாசப்படுத்தியது தற்போது ஆட்சியில் உள்ள இரண்டு கட்சிகள் என மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் குற்றஞ்சாட்டினார்.

மக்கள் விடுதலை முன்னணியின் இணைப்பு அலுவலகம் நேற்றுமுன்தினம் யாழ்.கொழும்புத்துறை பண்டியன்தாழ்வு பகுதியில் திறந்து வைக்கப்பட்டது.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் காணப்படுகின்ற பிரச்சினைகளை மக்கள் விடுதலை முன்னணியிடம் முறைப்பாடு செய்ய வேண்டிய போக்கு காணப்படுகின்றது.

விஷேடமாக மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் தேவைகளை முன்னெடுக்க வேண்டிய தேவையும் இருக்கின்றது.

இந்த அலுவலகத்தின் திறப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதமுடிகின்றது. கடந்த காலங்களில் மக்கள் விடுதலை முனனணியின் அரசியல் செயற்பாடுகளை இங்கு முன்னெடுக்க முடியாமல் இருந்தது. ஆனால் தற்போது அரசியல் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆட்சியில் மக்களை சிந்திக்க விடவில்லை. இராணுவ வேட்டைகளை கட்டவிழ்த்து விட்டார்கள்.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சி முடிவிற்கு கொண்டு வந்த பின்னர் மக்களுக்கு விடுதலை விமோசனம் நல்லாட்சி நிலவுகின்றதா? ஏற்படுத்தப்பட்டுள்ளதா? என தேடிப பார்க்கின்ற போது, மக்களினால் எதிர்பார்க்கப்பட்ட நல்லாட்சி இன்னும் ஏற்படுத்தப்படவில்லை.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு எதிராக செயற்பட்டவர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினர் என்பதோடு,

மக்களின் செயற்பாடுகளை முடக்குகின்ற காவாலித்தனமான அரசியல் இன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. மக்கள் விடுதலை முன்னணியினை பரிசீலித்துப் பார்ப்பதற்கு ஒரு வாய்ப்பினை தருமாறு கோரியதுடன், தற்போதுள்ள கட்சிகள் இரண்டும் மக்களை நாசப்படுத்திய கட்சிகள். ஐக்கிய தேசிய கட்சி என்றும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதனால், எதிர்காலத்தில் இந்த நிலைமைகளில் இருந்து விடுதலை பெற மக்கள் முன்னணியினருடன் இணையுமாறு அறைகூவல் விடுப்பதாக தெரிவித்தார். (25)



நல்லூர் பிரதேச செயலக, பிரதேச மலரான சிங்கை ஆரம் நூல் வெளியீட்டுவிழா நேற்றுமுன்தினம் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன் கலந்துகொண்டு நூலை வெளியிட்டு வைத்தார். (48)

## யூனியன் வங்கியின் பரிசுத்திட்டம்

மலரும் புதுவருடத்தை முன்னிட்டு சேமிப்பு கணக்கில் வைப்பிலிடுபவர்களுக்கு விசேட பரிசுத்திட்டத்தை யூனியன் வங்கியின் யாழ்.கிளையினர் அறிவித்துள்ளனர்.

ரூபா 50 ஆயிரம் வைப்பிலிடுபவர்களுக்கு எலக்றிக் அயன் பெட்டியும், 25 ஆயிரம் ரூபா வைப்பாளர்களுக்கு நொண்ஸ்ரிக் பானும் பரிசுகளாக வழங்கப்படுகின்றன.

சிறுவர் சேமிப்புக்கணக்குகளுக்கு 2,500 ரூபா வைப்பிலிட்டால் பட்மின்ரன் செற் அல்லது கலர் பெட்டியும், பரிசுபெறும் வாய்ப்பு இவ் விசேடபரிசுத்திட்டம் இன்றிலிருந்து எதிர்வரும் 30 ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தப்படுவதாக யூனியன் வங்கி அறிவித்துள்ளது. (105)

## தமிழ், முஸ்லிம் மக்கள் சந்திப்பு





வடமாகாண சபை உறுப்பினர் ஐயூப் அஸ்மின் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் ஜே/85, ஜே 85, ஜே/87 பிரிவுக்குட்பட்ட தமிழ், முஸ்லிம் மக்களைச் சந்தித்தார்.

இச்சந்திப்பில் வீடமைப்பு, கல்வி, சுயதொழில் சுகாதாரம் சம்பந்தமான மக்களின் பிரச்சினைகள் ஆராயப்பட்டன.

கதீஜா கல்லூரியில் அகதிமுகாமில் வசிப்பவர்களுக்கான வெற்றுக்காணி வழங்கல், சுயதொழிலுக்கான உபகரணங்கள் வழங்கல், ஆடு வளர்ப்பு, மலசல கூடம் அமைத்தல் போன்றவற்றுக்கான நிதி ஒதுக்கீடு சம்பந்தமான முடிவுகளும் மேற கொள்ளப்பட்டன.

இணைப்பாளர்களான எம்முபாஹிர், எம்.லாபிர் ஆகியோருடன் கொட்டடி சனசமூக நிலையத்தின் தலைவர் கலாநிதி தனேந்திரனும், மாதர் சங்கத்தின் தலைவியும் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (105)



இணுவில் பொது நூலகம் சனசமூக நிலையத்தின் ஆண்டு விழா கடந்த சனிக்கிழமை ச.சிவசங்கர் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் கலந்து கொண்டதோடு பேராசிரியர் க.தேவராஜா தொடக்கவுரை நிகழ்த்தினார். சிறப்பு விருந்தினர்களாக க.சுந்தரலிங்கம் க.தில்லைநாதன் விருந்தினர்களாக ஐ.சொர்ணலிங்கம், இ.குமாரலிங்கம், செ.குணராசா ஆகியோரும் கலந்து கொண்டனர். (48)

## கால்நடைகளுக்கு தடுப்பூசி ஏற்றல்

(வரணி)

வட வரணிப்பிரதேசத்தில் உள்ள கால்நடைகளுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை கடந்த வாரம் மிருக வைத்தியரால் வீடுகளில் முன்னெடுக்கப்பட்டன.

இத்திட்டத்தின் மூலம் பல கால்நடைகள் நன்மையடைந்துள்ளன.

மேலும் கடந்த ஆண்டு கால்நடைகளுக்கு கால்வாய் நோய் ஏற்பட்டு பல கால்நடைகள் இறந்தும் உள்ளன.

பல கால்நடைகளுக்கு உரிய சிகிச்சை வழங்கப்பட்டதால் இறப்பிலிருந்து காப்பாற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (150)

## முரசின் இன்றைய பலன்

(11.04.2015 சனிக்கிழமை)

ஜய வருஷம் பங்குனி மாதம் 28 ஆம் திகதி.
சப்தமி திதி. மரண யோகம்.
பூராட நட்சத்திரம் பி.இ. 03.49 வரை. பின் உத்தராடம்.
இராகுகாலம் 09.06-10.36 வரை சுபநேரம் 03.06-04.36 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.எ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது

**மேடம்**
தொடராக ஏற்படும் நட்ட நிலையினால் தொழிலைக் கைவிடல்.

**ரிஷபம்**
கௌரவக் குறைவினால் பங்கினை முறித்து தனித்தியங்கத் தலைப்படல்.

**மிதுனம்**
ஒழச்சென்று வாகனத்தில் ஏறச சென்றவேளை மயிரிழையில் விபத்தினின்றும் தப்பிவிடல்.

**கடகம்**
நல்ல குருநாதன் நம்மை வருததுவது நன்மைக்கே என எண்ணி ஆறுதல் அடைதல்.

**சிம்மம்**
வாய்மூலம் கொடுத்த கடனைப் பெற முடியாத நிலையில் முறைப்பாட்டில் ஈடுபடல்.

**கன்னி**
அள்ளிவைப்போரால் விவாகம் இழுபடுவதை எண்ணி துக்கசாகரத்தில் மூழ்குதல்.

**மீனம்**
துணையின்றித் தனித்துச் சென்றவேளை ஏற்பட்ட ஆபத்து இறை செயலாக விலகிவிடல்.

**கும்பம்**
நோய் முற்றிய நிலையிலும் மருததுவத்தை நாடாதிருந்ததினால பரிதாப நிலைக்குத்தள்ளப்படல்.

**மகரம்**
மூத்த சகோதரர் உதவியினால் வர்த்தக நிலையம் திறக்க முற்படல்.

**தனுசு**
பிரயாணத்தில் அருகில் இருப்பவரினால்பாலியல்துஷ்பிரயோகம் ஏற்படலாமென பதகளிப்படைதல்.

**விருச்சிகம்**
அரசியல விமர்சனத்தால் முரண்பாடு ஏற்பட்டு நட்புக்கெட்டு விடல்.

**துலாம்**
முகப்புத்தகம் மூலம் மானக்கேடு ஏற்பட்டு மதிப்பிழத்தல்.

## ஐ.பி.எல். இன்றைய ஆட்டம்


ஹைதராபாத்
எதிர் - சென்னை
இடம் :- சென்னை
நேரம் :- மாலை 4.00 மணி

கொல்கத்தா
எதிர் - பெங்களூர்
இடம் :- கொல்கத்தா
நேரம் :- இரவு 8.00 மணி

## ஐ.பி.எல். இரண்டாம் நாள் ஆட்டம்

# இறுதி நிமிடத்தில் வெற்றியை தனதாக்கியது சென்னை அணி





(டில்லி)

இந்தியாவில் இடம் பெறும் ஐ.பி.எல்.தொட ரில் நேற்று முன்தினம் இடம் பெற்ற டில்லி அணிக்கெதி ரான போட்டியில் சென்னை அணி கடைசி நிமிடத்தில வெற்றி பெற்றது.

8 ஆவது ஐ.பி.எல் தொடரின் முதல்போட்டி யில் கொல்கத்தா அணி மும்பையை வீழ்த்தி வெற் றிக் கணக்கை ஆரம்பித் தது. இதனையடுத்து 2 ஆவது போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ், டில்லி டேர்டெவில்ஸ் அணிகள் மோதின. சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடை பெற்ற இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற டில்லி அணி களத்தடுப்பை தெரிவுசெய்தது. இதன்படி சென்னை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தொடங்கியுள்ளது. தொடக்க வீரராக களமிறங்கிய மக்கலம் 1 ஓட்டமிழக்க, அடுத்து களமிறங்கிய ரெய்னாவும் 4 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். ஸமித் 34 ஓட்டங்களும், டு பிளசி 32 ஓட்டங்களும், ஜடேஜா 17 ஓட்டங்களும் எடுத்தனர். அணித்தலைவர் டோனி 30 ஓட்டங்கள் எடுக்க சென்னை அணி 20 ஓவர் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 150 ஓட்டங்கள் எடுத்தது. பந்து வீச்சில டிலலி சார்பில் நாதன் கால்டர் 3 விக்கெட் வீழத்தினார். இதனையடுத்து 151 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய டில்லி அணி 20 ஓவர் முடிவில் 9 விக்கெட் இழப்பிற்கு 149 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து 1 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியை சந்தித்தது. அதிகபட்சமாக அல்பி மார்கல் ஆட்டமிழக்காமல் 73 ஓட்டங்களும், கேதர் யாதவ் 20 ஓட்டங்களும், மயான்க் அகர்வால் 15 ஓட்டங்களும் எடுத்தனர். மற்ற வீரர்கள சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். பந்துவீச்சில் சென்னை அணி சார்பில் நெக்ரா 3 விக்கெட்டும், டுவைன் பிராவோ 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

# இந்தியாவின் தலைசிறந்த அணித் தலைவர் கங்குலி

### ஹர்பஜன்சிங் புகழாரம்




இந்தியாவின் தலைசிறந்த அணித் தலைவர் கங்குலி தான் என்று இந்திய சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் மூத்த வீரரான ஹர்பஜன்சிங், இந்திய அணியில் இருந்து ஒதுங்கி இருக்கிறார். தற்போது ஐபிஎல் தொடரில் மும்பை அணிக்காக விளையாடி வருகிறார்.

இந்நிலையில் டில்லியில் கிரிக்கெட் இன்ஸ்ட்டிடியூட் தொடக்க விழாவில் பங்கேற்ற ஹர்பஜன்சிங், சச்சின், கங்குலி, ராவிட், கும்ப்ளே, லட்சுமணன் போன்ற மிகப்பெரிய வீரர்களுடன் ஆடும் வாய்ப்பு கிடைத்தது எனது அதிர்ஷ்டமாகும் என்று தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், நான் கிரிக்கெட்டில் எதையாவது சாதித்துள்ளேன் என்றால், அதில் இவர்களின் பங்களிப்பு கண்டிப்பாக உள்ளது. இந்தியா கண்ட தலை சிறந்த அணித்தலைவர்களில் ஒருவர் கங்குலியாகும்.

ஷேவாக், ஹோலி உள்ளிட்ட தலை சிறந்த வீரர்கள் அவர்களுக்கே உரித்தான சிறப்பான அணுகுமுறையை வைத்துள்ளனர். எனவே, அவர்களின் திறமையை அப்படியே பயன்படுத்திக்கொள்வதுதான் நல்லது என்று கூறியுள்ளார்.

## புதிய நிர்வாகிகள் தெரிவு

வவுனியா உதைபந்தாட்டச் சங்கத்துக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

வவுனியா உதைபந்தாட்ட சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் அண்மையில் வவுனியா இந்திரன்ஸ் விடுதியில் நடைபெற்றது.

மேற்படி சங்கத்தின் புதிய தலைவராக ஜோன்சன் தெரிவு செய்யப்பட்டார்.

செயலாளராக நாகராஜனும், பொருளாளராக சுஜீவனும், உப தலைவர்களாக கிறிஸ்கோ டினேசும், றைஸ்தீன் சலாவுதீனும் உப செயலாளராக வசந்த ரூபனும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

## இணையத்தை கலக்கும் உடைந்த துடுப்புமட்டை




மும்பை அணிக்கு எதிரான போட்டியில் கொல்கத்தா அணித்தலைவர் கம்பீரின் துடுப்பு மட்டை இரண்டாக உடைந்த புகைப்படம் இணையத்தில் பரவி வருகிறது.

ஐ.பி.எல் 8 ஆவது தொடரின் தொடக்க லீக் ஆட்டத்தில் கொல்கத்தா- மும்பை அணிகள் மோதின. இதில் கொல்கத்தா அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்தப் போட்டியின்போது இரண்டாவதாக துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா அணிக்கு 2 ஆவது ஓவரின் முதல் பந்தை வினய் குமார் வீச, கம்பீர் அதை சந்தித்தார்.

முதல் பந்திலேயே வினய்குமாரின் தன்னம்பிக்கையை சிதைக்க வேண்டும் என்று நினைத்த, கம்பீர், பிடசை விட்டு இறங்கி வந்து அடித்தார். அப்போது துடுப்பு மட்டையில் பந்து எந்த இடத்தில் பட்டதோ, அந்த இடம் துண்டாக முறிந்து விழுந்தது. கைப்பிடி மற்றும் அதனோடு எஞ்சிய சிறு பகுதி மட்டுமே கம்பீர் கையில் இருந்தது.

இதையடுத்து வேறு துடுப்பு மட்டை மாற்றி ஆடினார் கம்பீர். இந்த துடுப்பு மட்டையை எம்.ஆர்.எப் தயாரித்திருந் தது. சச்சினுக்கு பிறகு, ஹோலி, கம்பீர் போன்ற வீரர்கள் கைகளில் எம்.ஆர்.எப் அதிகமாக தவழ்கிறது.

இந்தச் சம்பவத்தை பார்த்ததும், சமூக வலைத்தளமான டுவிட்டரில் அதை நகைச்சுவையாக்கி கருத்துகள் வலம் வந்தன. யுவராஜ் சிங் தனது பங்கிற்கு டுவிட்டரில், "இப்போது துடுப்பு மட்டை கம்பீர் சைசுக்கு வந்துவிட்டது" என்று கேலியாக குறிப்பிட்டுளளார்.

## என்றும் முதலிடம் சச்சின்


சமூக வலைத்தளங்களில் அதிக இரசிகர்கள் பின் தொடரும் கிரிக்கெட் வீரர்கள் பட்டியலில் சச்சின் தான் இப்போதும் முதலிடத்தில் உள்ளார்.

கிரிக்கெட்டில் இருந்து சச்சின் ஓய்வு பெற்று ஒரு ஆண்டு நிறைவடைந்து விட்டாலும், சச்சினுக்கு இன்னும் கிரிக்கெட் இரசிகர்களிடம் கொஞ்சம் கூட பாதிப்பு குறையவில்லை. இந்த பட்டியலில் முதல் 10 இடத்திற்குள் வருபவர்களில் 7 பேர் இந்திய வீரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

| | |
|---|---|
| சச்சின் | : 29 இலட்சத்து 12 ஆயிரம் |
| விராட் ஹோலி | : 24 இலட்சத்து 28 ஆயிரம், |
| மகேந்திர சிங் டோனி | : 15 இலட்சத்து 15 ஆயிரம் |
| வீரேந்திர ஷேவாக் | : 12 இலட்சத்து 68 ஆயிரம் |
| யுவராஜ்சிங் | : 9 இலட்சத்து 86 ஆயிர |
| கிறிஸ் கெய்ல் | : 5 இலட்சத்து 2 ஆயிர |
| சுரேஷ் ரெய்னா | : 4 இலட்சத்து 88 ஆயிர |
| கெவின் பீற்றர்சன் | : 4 இலட்சத்து 65 ஆயிரம் |
| ஜாகீர் கான் | : 4 இலட்சத்து 26 ஆயிரம் |
| டி வில்லியர்ஸ் | : 2 இலட்சத்து 2 ஆயிரம் |

இரசிகர்கள் உள்ளனர்.

## அவுஸ்ரேலிய அணி ஜாம்பவான் ரிச்சி பெனாட் காலமானார்



அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும், சிறந்த வர்ணனையாளருமான அணியின் ஜாம்பவானாக கருதப்படும் ரிச்சி பெனாட் தனது 84 ஆவது வயதில் நேற்றுக் காலமானார்.

சுழற்பந்து வீச்சில் திறமையாக செயற்படும் இவர் அவுஸ்ரேலிய அணிக்காக 63 டெஸ்ட் போட்டியில் விளையாடி உள்ளார். அவற்றுள் 28 போட்டிகளில் அணித்தலைவராகவும் விளையாடியுள்ளார்.

டெஸ்ட் போட்டியில் 2,000 ஓட்டங்களை எடுத்து, 200 விக்கெட்டுக்கள் வீழ்த்திய முதல் வீரர் இவராவார். அவுஸ்ரேலிய அணிக்கு தலைவராக இருந்து மிக முக்கிய பணி களை ஆற்றியுள்ளார். இவர் தலைமையாக செயற்பட்ட 28 போட்டிகளில் அனைத்திலும் அவுஸ்ரேலிய அணி வெற்றியினை பெற்றமை விசேட அம்சமாகும்.

ரெபிலியஸ் உலக கிரிக்கெட் தொடர் 1970 இல் ஆரம்பிக்க முக்கிய பங்கு வகித்தவர். கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றபின் கடந்த 2013 ஆம் ஆண்டு பி.பி.சி. மற்றும் அவுஸ்ரேலியாவில் உள்ள ஊடகங்களுக்கு வர்ணனையாளராக செயற்பட்டார்.

# சிவகுருநாதன் கிண்ணம் கிரிக்கெட் போட்டி

யாழ். இந்துக் கல்லூரி மற்றும் கொழும்பு ஆனந்தாக் கல்லூரி களுக்கிடையே நான்காவது வருடமாக நடைபெற்றுவரும் "சிவகுரு நாதன் கிண்ணத்துக்கான" மாபெரும் கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 24, 25 ஆம் திகதிகளில் யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் கோலாகலமாக இடம்பெறவிருக்கிறது.

யாழ். இந்து 125 ஆவது வருட நிறைவில் அடிஎடுத்து வைத்திருப்பதை முன்னிட்டு இத் துடுப்பாட்டப் போட்டி இன்னும் விமரிசையாக கொண்டாடப் படவிருக்கின்றமை குறிப்பிடத் தக்கது. கடந்த வருடம் கொழுமபு ஆனந்தாக் கல்லூரி வெற்றி பெற்ற நிலையில் இம்முறை நடைபெறும் போட்டியானது மிகவும் எதிர்பார்புக் குரியதாக மாறியுள்ளது.

ஏற்கனவே 2-1 என்று இருக்கின்ற நிலையில் இம்முறை அது சமப்படுத்தப்படுமா இல்லை தொடர்ந்தும் ஆனந்தாக் கல்லூரியே முன்னிலை பெறுமா என்கிற ஆர்வம் பலருக்கும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

யாழ். வீரர்கள் கொழும்பு வீரர்களுக்கு எவ்விதத்திலும் சளைத்தவர்கள் இல்லை. கடந்த வருடம் ஆனந்தாக் கல்லூரி வெற்றிக்கு கல்லூரி பழைய மாணவர்களும் அவர்களது முழு ஆதரவும் தான் முக்கிய காரணமாகும். (90)

# ஆரோக்கியமான சமுதாயத்தை கழகங்கள் உருவாக்க வேண்டும்

## சாவகச்சேரி நகரசபைத் தலைவர்

ஆரோக்கியமான சமுதாயத்திற்கு விளையாட்டுக் கழகங்கள் பாடுபடவேண்டும் என சாவகச்சேரி நகரசபைத் தலைவர் தேவசகாயம்பிள்ளை தெரிவித்துள்ளார். சாவகச்சேரியில் இடம்பெற்ற விளையாட்டு நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல்வேறு பொழுதுபோக்கு சாதனங்களின் வருகையால் இளைய சமுதாயத்தின் கவனம் கலைக்கப்பட்டு அவர்கள் ஒரு சிறுகைத்தொலைபேசிக்குள்ளேயோ அல்லது கணனிக்குள்ளேயோ சுருண்டுகிடக்கும் சூழலில் உடல் உள ஆரோக்கியம் என்பது சற்று பின்னடைகின்ற நிலை உண்டு.

எமது முன்னவர்கள் ஓயாத உடல் உழைப்பாளிகளாகவும் பாரம்பரிய ஆரோக்கியமான உணவுப பழக்கவழக்கங்கள் கடைபிடித்ததாலும் நெடுங்காலம் திடகாத்திரமாக வாழந்ததை வாழ்வதை நாம் பார்க்கின்றோம்.

ஆனால் இன்று தனியே மூளைக்கு மட்டுமே வேலை என்பதாக உருவாக்கப்படும் நவீன சமுதாய முறையில் உடல் ஆரோக்கியம் என்பது பலவீனமாகவே காணப்படுகின்றது.

இத்தகைய நிலையை மாற்றுவதற்கு இத்தகைய விளையாட்டு நிகழ்வுகளும் மாவட்டம் தழுவிய கழகங்களின் ஒருங்கிணைப்பும் போட்டி மனப்பாங்கும் அவசியமாகின்றது.

இது கிராமத்தில் இருக்கின்ற விளையாட்டுக் கழகங்களின் கடமையாக இருக்கின்றது. வெறுமனே இவை விளையாட்டுப்போட்டிகளாக தென்பட்டாலும் இது நோயற்ற ஆரோக்கியமான நம் சமுதாயத்திற்கான வைத்தியமும் கூட என அவர் மேலும் தெரிவித்தார். (160)

# இறுதிப் போட்டி நாளை

யாழ் மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தால் நடாத்தப்படும் 2015 ஆம் ஆண்டுக்கான கழகங்களுக்கு இடையேயான சுற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் அணியை எதிர்த்து பற்றீசியன் அணி மோதியது.

இப் போட்டியின் ஆரம்பம் முதல் ஜொலிஸ்ரார் அணி தனது ஆதிக்கத்தை செலுத்தி 54 : 48 என்ற கணக்கில் வெற்றி பெற்று இறுதிக்குள் நுழைந்தது.

இச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டத்துக்கு ஏற்கனவே தகுதி பெற்றிருந்த சென்றலைற்ஸ் அணியுடன் ஜொலிஸ்ரார் அணி மோதவுள்ளது.

இப்போட்டியின் இறுதியாட்டம் நாளை யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் . மாலை 6.30 மணியளவில் இடம்பெறவுள்ளது. (48)

# வலிகாமம் வலயத்தில் கால்பந்தாட்ட இறுதிப்போட்டி

வலிகாமம் கல்விவலயப் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட கால்பந்துப் போட்டியின் இறுதிப் போட்டி கடந்த புதன் கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் 17 வயதுப் பிரிவு இறுதி ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணியும் மோதின.

இதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 2: 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மூன்றாமிடத்துக்காக போட்டியிடத் தீர்மானிக்கப்பட்டிருந்த அணிகளான சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் அராலி அ.த.க. பாடசாலை அணியும் போட்டிக்கு சமுகமளிக்காமையினால் போட்டி இடம்பெறவில்லை.

19 வயதுப் பிரிவுக்கான இறுதியாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் புனித ஹென்றியரசர் கல்லூரி அணியும் மோதியதில் இரு அணிகளுமே முதல் ஆட்டத்தில் கோல் எதையுமே போடாததினால் தண்ட உதை மூலம் வெற்றியைத் தீர்மானிப்பது என முடிவு செய்யப்பட்டது.

தண்ட உதை மூலம் புனித ஹென்றியரசர் கல்லூரி அணி 9 : 7 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மூன்றாமிடத்துக்காக மகாஜனக் கல்லூரி அணியும் வசாவிளான் மத்திய கல்லூரி அணியும் மோதியதில் வசாவிளான் மத்திய கல்லூரி அணி 1 : 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்துக்குத் தெரிவானது. (93)

# இருபாலாருக்குமான துடுப்பாட்டம்

சோழங்கன் விளையாட்டுக்கழக ஏற்பாட்டில் இருபாலாருக்குமான துடுப்பாட்டப் போட்டி இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

பெண்களுக்கான துடுப்பாட்டத் தொடரில் 6 பேர் பங்குபற்றும் 5 பந்து பரிமாற்றங்கள் கொண்டதாகவும் இன்று கரணவாய் மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.


ஆண்களுக்கான போட்டி 6 பேர் பங்குபற்றும் 12 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்டதாகவும் மேற்படி மைதானத்தில் நாளை நடைபெறவுள்ளது.

# மென்பந்து கிரிக்கெட் போட்டி

உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக் கழகம் மாவட்ட ரீதியில் நடாத்தும் 6 பேர்கொண்ட 5 ஓவர் மென்பந்து கிரிக்கெட் போட்டி ஒன்றை நடாத்தவுள்ளது. இப்போட்டி இன்றும் நாளையும் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# புதுவருடப் போட்டிகளிலிருந்து மறைந்துபோகும் மாட்டுவண்டிச் சவாரி

விளையாட்டுச் செய்திகள்



இன்று கார் வைத்திருப்பவர் கொண்டிருந்த மிடுக்கை அன்று வண்டில் வைத்திருப்பவர் கொண்டிருந்தார். விவசாயப் பொருளாதாரத்தில் தங்கியிருந்த எம்மவர்களுக்கெல்லாம் பெருஞ் செல்வம் மாடுதான். எனவே தான் செல்வத்தை மாடு என்ற சொல்லாலும் குறித்தனர். இந்த மாட்டின் மூலம் மனிதன் பெற்ற செல்வாக்குத்தான் வண்டிச்சவாரிக்கும் வித்திட்டிருக்கின்றது.

நான் சிறுவயதில் சவாரி பார்த்து உருசிப்பட்டது சரசாலை சவாரித்திடலில் தான். மட்டுவில், நீர்வேலி, ஆவரங்கால், பொன்னாலை, அளவெட்டி, விசுவமடு, மன்னார் என அமைந்த சவாரித்திடல்கள் பிரபலமானவை.

காங்கேசன் காளை மாடுகள் வந்து இறங்கிய துறைதானே காங்கேசன்துறை. இன்னும் வல்வெட்டித்துறை, பருத்தித் துறைத்துறைகளின் ஊடாகவும் தென்னிந்தியாவிலிருந்து நல்லினக் காளைகளை இறக்குமதி செய்தனராம்.

காளைகளை ஓடவிட்டு நடத்தப்பட்ட போட்டி இரட்டை மாட்டு வண்டிச் சவாரி, திருக்கல் வண்டிச் சவாரி (ஒரு மாடு பூட்டி ,திருக்கல் வண்டிலில் ஓடவிடுவது) கைக்கொடிச் சவாரி (மாட்டைப் பிடித்துக் கொண்டு ஆள் ஓடுவது) (கொடி என்பது - கயிறு)

நீர்வேலி அச்செழுப் பிரதேசங்களில் சவாரிப் பிரியர்கள் கூடுதலாக இருந் தமையால் 1950 களில் நிலாவரைக்கும் அச்செழுவுக்கும் இடைப்பட்ட வீதியில் தற்போது தேவாலயம் அமைந்திருக்கும் பகுதியில் காளைச் சவாரிப் பயிற்சித் திடல் ஒன்றை அரசு அமைத்துக் கொடுத்தது.

இங்கு ஒவ்வொரு சனிக்கிழமையும் சவாரி இடம்பெற்று வந்ததாக நீர்வேலி அப்புத்துரை அண்ணர் தன் ஞாபகங் களைக் கூறுகின்றார். பந்தயம் கட்டி இருவருக்கிடையில் போட்டி இடம் பெறுகின்ற ஒருவகையான சூதாட்டக் களமாக இது செயற்பட்டிருக்கின்றது.

இச்சவாரித்திடல்களை ஒரு காலத்தில் ஆண்டவர்கள் ஊரில் மிகவும் செல்வாக்குப் பெற்றிருந்தனர். நீர்வேலி பெரிய இராமர், ஊரெழு ஐயர், கல்வியங்காடு சண்முகநாதன் போன்றோர் அவர்களுள் சிலர். இவர்களுடைய காளைகள் வருகின்றன என்றால் ஏனைய போட்டியாளர்கள் கலங்கியது ஒரு காலம்.

தற்போது அரிதாகவே நீர்வேலி சவாரித்திடலில் போட்டிகள் இடம்பெறுகின்றன. போட்டிக்குத் தயார் செய்யும் வகையில் காளைகளை வளர்ப்பதற்கும் தற்போதைய வசதி வாய்ப்புக்கள் இடம்கொடுப்பதாக இல்லை. சவாரி மாடு வைத்திருந்தால் நாள் ஒன்றுக்கு இரண்டு கொத்துக்குக் குறையாத குரக்கன், இரண்டு கொத்துக்குக் குறையாத பச்சை அரிசி என உணவுப் பட்டியல் நீண்டு செல்லும். அவ்வப்போது சாராயம் குடிக்கும் மாடுகளுக்கு தண்ணீரும் காட்ட வேண்டும்.

ஆயினும் புதுவருடத்தையொட்டி அழகுராணிப் போட்டி, கிறிஸ் கம்பம் ஏறும் போட்டி, பணிஸ் தின்னும் போட்டி, தலையணைச் சண்டைப் போட்டி என எங்கள் மரபில் இல்லாத போட்டிகளைத் தான் இன்று பெரும்பாலும் விழாக் கொண்டாட முனைபவர்கள் ஏற்பாடு செய்யப்பார்க்கின்றனர். இதைக்கண்ட மனக்கொதிப்பே அச்செழு சவாரி பயிற்சிப் பாதை பற்றிய இந்தப் பதிவுக்கான வித்து.

-விஜயன்

# தேன்நிலவின் முடிவு மைத்திரியின் ஆதங்கம்.

தேர்தல் முறை மாற்றத்தை ஆரம்பத்தில் விரும்பியது போல ஐக்கிய தேசியக் கட்சி காட்டிக் கொண்டாலும் அதனை விரைவாக நிறைவேற்றுவதில் அவ்வளவு ஆர்வம் காட்டவில்லை. ஏனெனில், வரும்

**- புருஜோத்தமன் தங்கமயில் கட்டுரையிலிருந்து.**

**மை**த்திரி அரசாங்கத்தின் தேன்நிலவுக்காலம் முடிவுக்கு வருகின்றது. நாட்டு மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் ஏற்பட்டிருந்த இணக்கமும் பிணைப்பும் விரிசலாகி நம்பிக்கையீனங்களைத் தோற்றுவித்திருக்கின்றது. பெரும் காதலோடு, தாம் ஆட்சியில் அமர்த்திய அரசாங்கத்தின் மீதான அதிருப்தியை மக்கள் வெளிப்படையாக வெளியிடாத போதிலும் அதன் அளவு நிச்சயமாக அதிர்ச்சியளிக்கக் கூடியது தான்.

ஒளிக்கீற்றாக மக்களினால், கருதப்பட்ட ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவே, தன்னுடைய அரசாங்கத்தின் வீழ்ச்சியை உணர்ந்து கொண்டுவிட்டார். அதுதான், அவரை "அப்பி பஹினவா (நாங்கள் இறங்குவோம்)" என்கிற தொனியினூடு அரசாங்கத்தின் வீழ்ச்சி பற்றி தேசிய நிறைவேற்று சபைக் கூட்டத்தில் ஆதங்கம் வெளியிட வைத்திருக்கின்றது.

நாடாளுமன்றத் தேர்தல் விகிதாசார முறையில் இருந்தாலே தன்னுடைய வெற்றியை உறுதிப்படுத்த உதவும் என்று நம்புகின்றது. தொகுதிவாரியை அதிகம் முன்னிறுத்தும் தேர்தல் முறைமைக்கு உடனடியாகச் சென்றால் தென்னிலங்கையின் கிராமங்களை வெற்றி கொள்ள முடியாது என்பது அதற்கான காரணம். ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்கு வங்கி என்பது கடற்கரை ஓரங்களையும் நகரங்களையும் அண்மித்தே எப்போதும் இருந்து வந்திருக்கின்றது.

அதுபோல, தொகுதிவாரி முறைமை சிறுபான்மைக் கட்சிகளையும் குறிப்பிட்டளவில் பாதிக்கும். அதுவும் கூட நாடாளுமன்றத்துக்குள் ஐக்கிய தேசியக் கட்சிக்கான ஆதரவினை இல்லாமற் செய்யும். இப்படியான நிலையில், அரசாங்கமொன்றை அமைத்தாலும் அது அறுதிப் பெரும்பான்மையின்றி அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் சூழல் உருவாகலாம். அதனையே, ரணில் விக்கிரமசிங்க அதிகமாக கருத்திற் கொள்கின்றார்.

அதுதான், தேர்தல் முறை மாற்றத்தினை உடனடியாக முன்னிறுத்துவதில், குறிப்பாக அடுத்த பொதுத் தேர்தலை அப்படி நடத்துவதை ஐக்கிய தேசியக் கட்சி விரும்பவில்லை. ஆனால், தேர்தல் முறை மாற்றமே தம்மைத் தக்க வைக்க உதவும் என்று சுதாகரித்துக் கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அதனைப் பிடித்துக் கொண்டுள்ளது. 19ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்னால், தேர்தல் முறை மாற்றம் எனும் தடையை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஏற்படுத்தியிருக்கின்றது.

இந்த அல்லோல்கல்லோல நிலைமை தொடர்ந்து வரும் நிலையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளிப்படையான கருத்துக்கள் எதனையும் வெளியிடாமல் அமைதி காக்கின்றார்.

பிராந்திய நாடுகளுடனான உறவை சீரமைக்கும் பயணங்கள் என்கிற பெயரில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, வெளிநாட்டுப் பயணங்களை தொடர்ச்சியாக மேற்கொண்டாலும் அந்தப் பயணங்களினூடு உள்நாட்டு அரசியலில் ஏற்பட்டிருக்கின்ற இழுபறிகளுக்குள், தான் இல்லை என்பதை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்று கருதுகின்றாரோ என்று தெரியவில்லை. ஏனெனில், அரசாங்கத்தின் மீதான மக்கள் அதிருப்தியை அவர் நன்றாகவே உணர்ந்து கொண்டுவிட்டார். அதனைத்தான் அவர் அண்மையில் வெளியிட்டிருக்கின்றார்.



அதுபோக, வரும் பொதுத் தேர்தல் தன்னுடைய நேரடிக் களமில்லை என்பதை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உணர்ந்து கொண்டிருக்கின்றார். என்ன இருந்தாலும், ஊழல் மோசடிகளினால் மக்களின் அதிருப்தியைப் பெற்ற முன்னாள் அரசாங்கத்தின் ஒட்டுமொத்த கூறும், தன் பின்னால் சேர்வதை அவர் விரும்பவில்லை. அதுதான், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள ஊழல் மோசடிகாரர்களை விசாரணைகளினூடு வெளியேற்ற வேண்டும் என்பதில் அவர் கவனமாக இருந்தாலும், அதற்காக எடுக்கும் காலம் என்பது நீண்டுகொண்டேயிருப்பது தொடர்பில் அவர் எரிச்சலடைந்திருக்கின்றார்.

மறுபுறத்தில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஊழல் மோசடிகள் தொடர்பிலான விசாரணைகளின் மென்நகர்வினை ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றிக்காக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதில் குறியாக இருக்கின்றார். அதுதான் மீண்டும் மக்களிடம் ஊழல் மோசடிக்காரர்கள் என்கிற தோரணையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மீது விமர்சனங்களை வைத்து வாக்குகளைக் கோர முடியும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள ஊழல் மோசடிக்காரர்களை அகற்றிவிட்டால் அது, ஐக்கிய தேசியக்

---

# கே.வி. மகாதேவன்



**67**

**- பி.ஜி.எஸ்.மணியன் -**

**க**வியரசு கண்ணதாசன் கதை வசனம் பாடல்கள் எழுத மூன்று இசை அமைப்பாளர்கள் இசை அமைக்க வெளிவந்த திரைப்படம் "தெய்வத் திருமணங்கள்." மூன்று தேவியரின் திருமணங்களை சித்தரிக்கும் இந்தப் படத்துக்கு மூன்று இயக்குனர்கள். மீனாட்சி திருமணம் பகுதிக்கு இசை அமைத்தார் கே.வி. மகாதேவன். இந்தப் பகுதியை ப. நீலகண்டன் இயக்கினார். வள்ளி திருமணத்துக்கு இசை ஜி.கே. வெங்கடேஷ். இயக்கம் கே.காமேஸ்வரராவ். மூன்றாவதாக வந்த பத்மாவதி கல்யாணம் பகுதியை கே.சங்கர் இயக்க எம். எஸ். விஸ்வநாதன் இசையமைத்தார்.

மீனாட்சி கல்யாணம் - பகுதியில் இடம் பெற்ற "திருமாலே சீராரும் மணிவண்ணா" என்ற வாணி ஜெயராமின் பாடல் கே.வி.மகாதேவனின் சிறப்பான இசையால் முதலிடம் பிடித்த முத்தான பாடலானது.

இப்படி பிற இசையமைப்பாளர்களுடன் சேர்ந்து பணியாற்ற கே.வி. மகாதேவன் தயங்கியதே இல்லை.

இதற்கு இன்னொரு உதாரணம் பாடகர் ஏ.எல். ராகவன் சொந்தமாகத் தயாரித்த "கண்ணில் தெரியும் கதைகள்" படம். இந்தப் படத்துக்கு ஐந்து இசை அமைப்பாளர்கள்.

கே.வி.மகாதேவன், டி.ஆர். பாப்பா, சங்கர்-கணேஷ், ஜி.கே.வெங்கடேஷ், இளையராஜா.

படத்துக்கு பின்னணி இசை அமைத்தவர் இளையராஜா.

இந்தப் படத்தில் "வேட்டைக்காரன் மலையிலே" என்ற டி.எம். சௌந்தரராஜனின் பாடலுக்கு இசை அமைத்தார் கே.வி. மகாதேவன்.

ஆனால் ரசிகர்களின் வரவேற்பைப் பெற்ற பாடல்களாக சங்கர்-கணேஷ் அமைத்த "நான் உன்னை நினைச்சேன்" பாடலும், இளையராஜா அமைத்த "நான் ஒரு பொன்னோவியம் கண்டேன்" பாடலும் அமைந்து விட்டன. பெருத்த வரவேற்பை இந்த இளம் தலைமுறை இசை அமைப்பாளர்கள் பெற்று விட்டதால் மற்றவர்களின் பாடல்கள் அப்படியே மறக்கப்பட்டுவிட்டன.

ஒரு கதைவசனகர்த்தாவாக படவுலகில் நுழைந்த எஸ்.ஜெகதீசன் "ஓம் சக்தி" ஜெகதீசன் என்ற அடைமொழியோடு ஒரு இயக்குனராக உயர்ந்து மேல்மருவத்தூர் ஆதிபராசக்தியின் அருமைபெருமைகளைச் சொந்தமாகத் தயாரித்து இயக்கினார். மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி, மேல்மருவத்தூர் அற்புதங்கள், சமயபுரத்தாளே சாட்சி, பதில்சொல்வாள் பத்ரகாளி, ஒரே தாய் ஒரே குலம் என்று அவரது ஓம்சக்தி சினி ஆர்ட்ஸ் நிறுவத்தின் பெயரில் வெளிவந்த படங்கள் எல்லாமே கே.வி.மகாதேவனின் இசையைத் தாங்கி வந்தன.

"மேல்மருவத்தூரில் வளர் மரகதமே" - (மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி) வாணி ஜெயராம்.

"அம்மா உனது அற்புதங்கள் ஒன்றா இரண்டா ஆயிரங்கள்" (வாணி ஜெயராம்), "உன்னைத்தானே சரணம் என்று நம்பிட்டேன்" "பெற்றவளே பெரியவளே" (கே.ஜே. யேசுதாஸ்) - (மேல்மருவத்தூர் அற்புதங்கள்)

"சமயபுரம் ஆத்தா நீ சகலத்துக்கும் சாட்சி" (வாணி ஜெயராம்),

"ரங்கநாதன் தங்கச்சி ரெண்டுங்கெட்டான் உன் கட்சி" (கே.ஜே.யேசுதாஸ்) (சமயபுரத்தாளே சாட்சி)

"பத்ரகாளியே பதில் சொல்லடி" வாணி ஜெயராம் (பதில்சொல்வாள் பத்ரகாளி) - ஆகிய பாடல்கள் இன்றளவும் உயிர்ப்புடன் இயங்கும் பாடல்கள்.



பேராசிரியர் ஏ.எஸ். பிரகாசத்தின் கதை வசனம் இயக்கத்தில் சாரதா இரட்டை வேடங்களிலும் முத்துராமன், ஸ்ரீகாந்த் ஆகியோர் இணையாக நடிக்க வெளிவந்த படம் "மழை மேகம்". இந்தப் படத்தில் இடம் பெற்ற "ஆகாய கங்கை இன்று மண்ணில் வந்தது" என்ற எஸ்.பி. பாலசுப்ரமணியம் பி.சுசீலா பாடிய பாடல் மகாதேவனின் இசையால் வெற்றி பெற்ற பாடல்.

"நான் நானேதான்" - ராஜேஷ், வடிவுக்கரசி நடித்த படம். இந்தப் படத்துக்கு மகாதேவன் அமைத்த இசையில் "காயா குறிஞ்சி மலை" என்ற வாணிஜெயராமின் பாடல் படம் வந்த புதிதில் அடிக்கடி வானொலியில் கேட்ட பாடல்.

இப்படி எண்பதுகளிலும் சுறுசுறுப்பாகவே இயங்கிக்கொண்டிருந்தார் கே.வி. மகாதேவன்.

ஏ.சி. திருலோகச்சந்தர் இயக்கத்தில் சிவகுமார், ரத்தி நடித்து வெளிவந்த படம் "காதல் கிளிகள்" கே.வி.மகாதேவனின் இசையில் "நதிக்கரை ஓரத்து நாணல்களே என் நாயகி அழகைப் பாருங்களேன்" "செவ்வானமே சீர் கொண்டுவா வெண்மேகமே தேன்கொண்டுவா" பாடல்களை கே.ஜே. யேசுதாஸ் எஸ்.பி. ஷைலஜா ஆகியோர் இணைந்து பாடினார்கள். "காதல் கிளியே நீ ஏன் பேசமறந்தாய்" - என் மனதை உருக்கும் சோககீதம் பொழிந்தார் எஸ்.பி.பாலசுப்ரமணியம். இந்த மூன்று பாடல்களுமே இன்றளவும் காற்றலைகளில் நிலைத்து நிற்கின்றன.

சுதாகர் - சரிதா நடிப்பில் வெளிவந்த "குருவிக்கூடு" என்ற படத்தில் இடம் பெற்ற "வண்ணத்துப்பூச்சி சிரிக்குது பல வடிவம் காட்டி அழைக்குது" என்ற பாடல் எஸ்.பி. பாலசுப்ரமணியம் - பி.சுசீலாவின் குரல்களில் மயக்கின.

இதே படத்தில் கே.வி. மகாதேவனின் இசையில் எஸ்.பி.பி. தனித்துப் பாடிய "பொன் நதி ஓரத்திலே ஏலேலேலோ" என்ற பாடல் இன்றளவும் எஸ்.பி.பாலசுப்ரமணியத்தின் ஹிட் பாடல்கள் லிஸ்டில் இடம் பிடித்த பாடல்.

பாடகர் ஜெயச்சந்திரனுக்கு கே.வி.மகாதேவனின் இசையில் மறக்கமுடியாத சிறப்பான பாடல் ஒன்று அமைந்தது. அதுதான் "எங்கெங்கும் அவள் முகம் அங்கெல்லாம் என் மனம்". பாடல் "நெருப்பில் பூத்த மலர்". படம் வெளிவந்த ஆண்டு 1981.

தெலுங்கில் மகத்தான வெற்றிபெற்ற "சிரிவெண்ணிலா" தமிழில் டப் செய்யப்பட்டு "இசைக்கு ஒரு கோகிலா"க வெளிவந்தது. மகாதேவனின் கர்நாடக சங்கீத ஆளுமையை ஒரிஜினல் "சிரிவெண்ணிலாவி"லேயே ரசிகர்கள் ரசித்துவிட்டதால் படமும் எடுபடவில்லை. இசையோ அபாரம்.

(தொடரும்)

கட்சியின் வெற்றியை பாதிக்கும் என்று அவர் கருதுகின்றார். இன்னொரு பக்கம், மகிந்த ராஜபக்ஷக்கு ஆதரவான கூட்டங்களை ரணில் விக்கிரமசிங்க இரசிப்பதற்கும் அதுதான் காரணம்.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளில் 70 சதவீதமானவை இன்னமும் மீதமிருக்கின்றன. ஆனால், அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதை இரண்டாம் விடயமாக்கிவிட்டு, தன்னுடைய இருத்தலை தீர்மானிக்கும் 19ஆவது திருத்தச் சட்டத்தின் நிறைவேற்றத்தையும், பொதுத் தேர்தலையுமே பிரதான விடயங்களாக ஐக்கிய தேசியக் கட்சி முன்னிறுத்துகின்றது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவோ இவ்வளவு குழப்பங்களையும் எவ்வாறு கையாள்வது என்று தெரியாமல், தன்னுடைய கடிவாளத்தின் கட்டுப்பாட்டை இழந்து கொண்டிருக்கின்றார்.

# உலக மகா எத்தர்கள்



**பா**ரிஸ் நகர இரும்பு வியாபாரிகளான அந்த ஐந்து பேரும், அந்நகர பொதுக் கட்டடங்களைப் பராமரிக்கும் அரசு அதிகாரியான விக்டர் லஸ்ட்விக் சொல்வதை, வியப்புடன் கேட்டுக் கொண்டிருந்தனர். "பாரிஸ் நகரின் பெருமையை உலகுக்கு உணர்த்தும் சின்னமான, "ஈ.்.பில் டவர்" விலைக்கு வருகிறது. அதைப் பராமரிக்க ஆகும் செலவு அதிகமாவதால், அரசு கஷ்டப்படுகிறது. எனவே, அதை அடியோடு இடித்து அப்புறப்படுத்த முடிவெடுத்துள்ளது. அதற்கு குத்தகை எடுப்பவர்கள் தங்கள், "டெண்டர்"களை முத்திரையிட்ட உறைகளில், தனித்தனியே கொடுத்து விட வேண்டும்..." என்றார் லஸ்ட்விக்.

ஐந்து வியாபாரிகளும், மனக் கணக்குப் போட்டனர். "ஈ.்.பில் டவரை உடைத்தால், மிக உயர் ரக இரும்பு, 7,000 தொன் கிடைக்குமே... என்ன ஒரு அதிர்ஷ்டம்!" என நினைத்து மகிழ்ந்து, ஐந்து வியாபாரிகளும், "டெண்டர்" அனுப்பி வைத்தனர். மறுநாளே, ஆண்ட்ரி பாஸன் என்பவரின் டெண்டர் எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பதாகவும், பணத்தைக் கட்ட வேண்டும் என்றும் தகவல் சொல்லப்பட்டது.

பணத்தை தயார் செய்து விட்டார் பாஸன். ஆனால், அவருக்கு ஒரு சந்தேகம்... ஈ.்.பில் டவரை இடிப்பது, டெண்டர் எடுப்பது போன்ற மிக முக்கியமான விஷயத்தை ஒரு அரசு அலுவலகத்தில் கூப்பிட்டுப் பேசாமல், ஹோட்டல் அறையில் ஏன் பேசுகிறார் என்று!

மறுநாள், விக்டர் லஸ்ட்விக்கை அவரது அரசு அலுவலகத்தில் சந்தித்த போது, இச்சந்தேகத்தைக் கேட்டார் பாஸன். உடனே விக்டர், தன் உதவியாளரை வெளியே அனுப்பி விட்டு, "ஒரு அரசு ஊழியனின் வாழ்க்கை இருக்கிறதே... அது ரொம்ப மோசம்; இதுபோன்ற பெரிய, "டெண்டர்" விஷயங்களில், நாங்கள் பல கோடீஸ்வரர்களைக் கூப்பிட்டு, விருந்து கொடுக்க வேண்டும்; அன்றைக்கு பிரமாதமாக ஆடை அணிந்து, ஓடி ஓடி உபசரிக்க வேண்டும்; இவற்றை எல்லாம் இந்த அரசு கொடுக்கும் பிச்சைக் காசிலேயே முடிக்க வேண்டும். முடிகிற காரியமா? அது தான், இந்த மாதிரி, குத்தகை விடும்போது..." என்று கூறி, "ஹி... ஹி..." என்று சிரித்தார்.

புரிந்து கொண்ட பாஸன், "டெண்டர்" கொடுத்ததற்காக அதிகாரிக்கு, ஒரு பெரிய தொகையைக் கொடுத்து விட்டு, ராஜநடையில் வெளியேறினார்.

ஒரு மணி நேரத்தில், "செக்"கைப் பணமாக்கிக் கொண்டு தலைமறைவாகி விட்ட விக்டர், அதன் பின், இன்று வரை பொலிஸிடம் பிடிபடவே இல்லை.


**('உலக மகா எத்தர்கள்' நூலிலிருந்து)**

**இ**ந்தியாவில் பீகார் மாநிலத்திலுள்ள கயா நகரம். இங்கு ஒரு வங்கி தொடங்கப்பட்டது. வங்கியின் பெயர் மங்களா வங்கி. இங்குள்ள மங்களா கவுரி ஆலயத்தில் பிச்சையெடுப்பவர்கள் ஒன்று சேர்ந்து இந்தப் பெயரில், வங்கியை ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த வங்கியின் மனேஜரும் பிச்சைக்காரரே. அவர் பெயர் ராஜ்குமார் மஞ்ச்கி. இவருடைய மனைவி தேவி பட்டப்படிப்பு முடித்துள்ளார். தேவி வங்கியின் காசாளராகப் பணிபுரிகிறார்.




பிச்சையெடுத்த பணத்தைச் செலவு செய்தது போக, மீதியை வங்கியில் ஒவ்வொருவரும் வைப்புச் செய்ய வேண்டும் என்று கட்டளையிட்டிருக்கிறார்கள். இதனால் ஒவ்வொரு பிச்சைக்காரரும் ரூபா20 முதல் ரூபா1000 வரை வைப்புச் செய்கிறார்கள். பிச்சைக்காரர்கள் இந்த வங்கியில் இருந்து கடன் பெற்றுக் கொள்ளலாம். விபத்தில் சிக்கிக் கொண்டாலும் கடன் உதவி உண்டு. வங்கியில் கணக்கு வைத்துள்ள பிச்சைக்காரர்களுக்கு கிரெடிட் கார்ட்டும் தரப்போகிறார்களாம். உலகம் எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறது இல்லையா?

# அடுத்தவன் பிள்ளையளைக் கொலைக் களம் அனுப்பி...



வெளிவாயன் வேலாயுதன் சொல்லுவது....

**வா**க்குப் போட்ட சனங்களின்ரை எல்லாப் பிரச்சினையளுக்கும் அப்பாலை தூய தமிழ்த் தேசியவாதியள் ஆரெண்டதுதான் இண்டைக்குப் பிரச்சினையாய் இருக்குது. தமிழரசுக் கட்சி சொல்லுது தாங்கள் மட்டுந்தான் எண்டு. தங்கடை கட்சி மட்டுந்தான் தமிழர் உரிமைக்காகப் பல போராட்டங்களையும் தியாகங்களையும் செய்தது. அதுக்கு வேறை ஆரும் உரிமை கொண்டாடேலாது எண்டுஞ் சொல்லுது. தலைக்கிடா சரிஞ்சால் புலுட்டையள் தாங்கள்தான் தலைக்கிடா என்னுங்களாம்.

கன தியாகங்களை தமிழரசுக் கட்சி செய்ததுக்காகத்தான் இவையாலை உசுப்பேத்தப்பட்டு கையிலை தண்டெடுத்த இயக்கங்கள் இவையின்ரை தலைவர்களைக் கொன்றவையோ? தளபதி அமிர்தலிங்கத்தையும், யோகேஸ்வரனையும், நீலன் திருச்செல்வத்தையும் புலிகளும், ஆலாலசுந்தரம், தர்மலிங்கம் ஆகிய எம்.பிமாரை ரெலோ(?)வும் துரோகிகள் எண்டு சொல்லித்தான் கொன்றவை. அதுகளைக் கண்டிக்கக் கூடத் திராணியற்று தமிழரசுக் கட்சி தங்களை நிறுவப் பாக்கிறதுதான் பெரிய வேடிக்கை பாருங்கோ!

தமிழரசுக் கட்சியெண்டது இலத்தீன், சமஸ்கிருத மொழியைப் போல இறந்து போன கட்சி பாருங்கோ! அது தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எண்டு புது வடிவங்களைப் பெற்றிட்டுது. அது மட்டுமன்றி நேற்று வந்தவனெல்லாம், தமிழரசுக் கட்சியின்ரை பாரம்பரியம், பண்பாடுகள் தெரியாதவனெல்லாம் தமிழரசுக் கட்சியின்ரை தூணுகள் தாங்கள்தான் எண்டு மார்தட்டுகினை எண்டு குமுறுகிறார் 80 வயது நிரம்பிய தமிழரசுக் கட்சியின்ரை பழம்பெரும் உறுப்பினர் ஒருத்தர். அந்தக் காலத்திலையே தமிழரசுக் கட்சியை உடைக்க வெளிக்கிட்ட மாவையை தலைவராக்கி வச்சிருக்கினை எண்டு வேறை குமுறுகிறார்.

உண்மைதான். தமிழரசுக் கட்சியின்ரை தலைவர்களின்ரை சாவை நியாயப்படுத்தக் கூடிய சிறிதரன் போன்றோர் தமிழரசுக் கட்சியிலை கொம்பூதினையெண்டால் பழைய தமிழரசுக்காரர்களுக்கு கோபம் வருந்தானே! வல்லரசொன்றின்ரை பின்னணியிலை கொண்டு வரப்பட்ட சுமந்திரன், சம்பந்தமேயில்லாமல் சிங்களத் தலைவர்களோடை கூடிக் குலாவியிருந்த ஒருத்தர், கொழும்பு மேட்டுக்குடியும், இன்னொரு அண்டைநாடும் சிபார்சு செய்யக் கொண்டு வரப்பட்ட விக்கினேஸ்வரன், ரெலோ - புலி - ஈ.பி.ஆர் - எல்.எப். புகழ் ஐங்கரநேசன், அரசியலற்று வேறு லோகங்களிலை இருந்து இப்ப குடை பிடிக்கிற அரியரத்தினம், குருகுலராசா, சத்தியலிங்கம், பிரதேச சபையளிலை இருக்கிற கனபேர் எண்டு தமிழரசுக் கட்சியின்ரை காத்துக் கூடப் படாத கனபேர் முன்னிலையிலை நிக்க, சத்தியாக்கிரகம், அகிம்சைப் போர், கட்சிக் கூட்டம் எண்டு அலைஞ்சு திரிஞ்சவனெல்லாம் பாவம் வெளியிலை நிண்டு குமுறுகிறாங்கள்.

இந்தக் குமுறலாளர்களிலை ஆனந்தசங்கரியும் ஒருத்தர். ஆனந்தசங்கரி பல குத்துக்கரணங்கள் அடிச்ச மனிசன் எண்டாலும் இந்தப் போலியள் எல்லாத்தையும் விட தமிழரசுக் கட்சி மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியிலை நிறையப் பணி செய்ததை மறக்கேலாது. தமிழரசுக் கட்சிக்காரர்கள் தனிச்சு மார்தட்டேலாது எண்டு அவர் அடிச்சுக் கூறி இருக்கிறார்.

60 வரியமாய் பிறக்காத பிள்ளையை பெத்துக் காட்டிறன் எண்டு மாய்மாலம் கொட்டி, அதை சனங்கள் நம்புற மாதிரி வச்சிருக்கிறதே தமிழரசுக் கட்சியின்ரை பெரிய டிப்புளொமசி பாருங்கோ! இதுக்காகவே கின்னஸ் சாதனையிலை கட்சியைப் பதிவு செய்யலாம். அதை விட சிங்களவருக்கு தலையும், தமிழருக்கு வாலும் காட்டிற விலாங்குத் தனத்தைக் கொண்டிருக்கிற தந்திரத்துக்காக இன்னொரு தங்க விருதும் குடுக்கலாம். இப்பவும் பாருங்கோ! சம்பந்தனும் சுமந்திரனும் அரசாங்கத்தையும், மேற்குலகத்தையும் அனுசரிக்கிற மாதிரிக் கதைக்கினம். இனியும் கதைப்பினம். ஆனால் சனங்களிட்டைப் போற மாவையும் சிறிதரனும் விக்கினேஸ்வரனும் அரசாங்கத்தை எதிர்க்கிற மாதிரிக் கதையளக்கினை. இனியும் அப்பிடித்தான் கதைப்பினை. இதுதான் தமிழரசுக் கட்சியின்ரை விலாங்கு இராஜதந்திரம்.

இந்த இராஜதந்திரத்தை சனங்கள் புரிஞ்சு கொள்ளுற வரையிலை, இவையின்ரை காட்டிலை மழைதான். சனங்களும் இதயசுத்தியோடை பிரச்சினையளை நோக்கிறதில்லை. உசுப்பேத்திறவன் எல்லாம் போராடியதில்லை. போராட்டத்துக்கு உதவினதில்லை. தங்கடை பிள்ளையளைப் பாதுகாப்பாய் வச்சுக் கொண்டு அடுத்தவன் பிள்ளையளைக் கொலைக் களத்துக்கு அனுப்பியவங்கள்தான் இண்டைக்கு மேடை மேடையாய் உசுப்பேத்துகிறாங்கள். சனங்களிட்டை இரத்தத்தோடை சேர்ந்திருக்கிற சிங்கள எதிர்ப்பை இரத்தம் புடைக்கிற மாதிரி உசுப்பேத்தி வாக்கு வங்கியை நிரப்பிறதும், மத்தி அரசுகளோடை தமது நலன் சார்ந்து கூடிக் குலவிறதும், திரும்ப சனங்களிட்டை வந்து புலம்பிறதும், உசுப்பேத்திறதும் எண்டு ஒரு வட்டப் பாதையிலை பயணிக்க முடியுது.

கேக்கிறவன் கேணையனாக இருந்தால் எருமைமாடு ஏரோபிளேன் ஓட்டுமாம்.



# புதிர்ப்போட்டி இல. 35

**(01). கீழ்வரும் எண் தொடர்கள் ஒவ்வொன்றும் குறிப்பிட்ட ஒரு விதியை ஆதாரமாகக் கொண்டமைந்தவை. அதே விதியைப் பின்பற்றி ஒவ்வோர் எண் தொடரிலும் கீறிட்ட இடத்தில் வரவேண்டிய எண்களை எழுதுக.**

01) 4, 5, 7, 11, 19, ........

02) 33, 44, 55, 57, 68, ........

03) 6, 8, 10, 12, 30, 56, 90, ......

04) 5, 6, 13, 14, 15, 31, 32, 33, .....

05) 4, 5, 18, 19, 20, 78, 79, 80, .......

06) 3/12, 5/30, 7/56, 9/90, ......

07) 6,2(16), 6,1(7), 7,3(30), 8,1(.....)

08) 1028, 12(144), 512, 6(48), 1000, 9(90), 216,3 (.......)

09) 2,2(12), 3,3(36), 4,4(80), 6,6(.......)

10) 789, 798, 879, 978, 987, ......

11) 4, 2, 6, 8, 4, 7, 12, 8, 8, ......

12) 45, 90, 30, 120, 24, ......

**(02). கீறிட்ட இடங்களை நிரப்புக**

13) 6, 8, 9, ....... 12, ....... 15

14) .........., 24, 29, .......... 33, 34, 35

15) 1, 3, 5, ....... 9, 12, 13, ......... 21, 22

16) 1, 2, ..........., 4, 6, .......... 10, 13, 16

17) 0.09, ........, 0.25, 0.5, ....... 0.7

**(03). கீழே தரப்பட்டுள்ள ஆங்கில நெடுங்கணக்கு வரிசைகள் திட்டவட்டமான விதிக்கிணங்க ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் விடை தருக**

18) Z, X, Y, W, T, ..................

19) A, B, B, A, C, C, A, E, ..............

20) B, B, D, H, N, V, D, J, N, P, ........

21) Z, Z, Y, Z, Y, X, Z, Y, X, W, Z, Y, X, W, ..................

22) B, T, D, V, F, X, H, Z, J, ........

23) B, D, H, P, F, L, ...............

24) a/z, x/c, e/v, t/g, ................

25) b/x, u/d, f/r, o/h, ...................

**(04). தினபதி, நந்தினி, மதுபதி, கமலினி, பகவதி, தனவதி ஆகிய சொற்களைக் குறிக்கும் இரகசியக் குறியீட்டு முறையைக் கண்டுபிடித்து அவற்றிற்கு நேரே இச் சொற்களை எழுதுக**

26) N Y P L ....................

27) S N C R ....................

28) T O K L ....................

29) L O R L ....................

30) R S K L ....................

31) M B L R ....................

**(05). கீழ்வருவனவற்றுள் சரியான சொல்லைத் தெரிக**

32) தான் பிறந்த நாட்டை நேசிப்பவன் (தேசாந்தரி, தேசாதிபதி, தேசாபிமானி, நேசகன்)

33) பிணங்களை அடக்கம் செய்யும் இடம் (சுடுகாடு, இடுகாடு, மண்மேடு, சவச்சாலை)

34) அரச உத்தியோகத்தர்களது தவறுகளை மக்கள் எடுத்துக்கூறும் போது அதனை விசாரிப்பவர் (மேல்நீதிபதி, மந்திரி, ஒம்புட்ஸ்மன், அரச அதிபர்)

அனுப்பவேண்டிய முகவரி

புதிர்ப்போட்டி இல: ----
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

35) வெளிப்படையாகப் புகழ்ந்ததும் மறைபொருளில் இகழ்ந்தும் கூறுவது (அங்கதம், இங்கிதம், புளகாங்கிதம், புகழாரம்)

36) தன்னிச்சையான சங்கங்களின் தலைவர்களைக் கொண்ட அமைப்பு (வீடமைப்பு, சூழல்சபை, கிராமோதயசபை, கிராம அபிவிருத்தி அமைப்பு)

**(06). கீழே தரப்பட்டுள்ள சொற்களில் 4 சொற்கள் ஒரு பொது விதியைப் பின்பற்றியுள்ளன. மாறுபட்ட சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக**

37) யானை, சிங்கம், புலி, காண்டாமிருகம், கரடி

38) மில்லிகிராம், சென்ரிகிராம், மில்லிலீற்றர், கிலோகிராம், சென்ரிமீற்றர்

39) கிராமம், கிராமோதயசபை, பிரதேசசபை, மாவட்டசபை, நகரசபை

40) கொழும்பு, எகிப்து, டில்லி, பீக்கிங், டோக்கியோ

41) குரக்கன், வாழை, கோதுமை, நெல், கேழ்வரகு

42) 16, 24, 32, 39, 46

43) இப்பொழுது, அன்று, எப்போது, எங்கே, நேற்று

44) பழச்சாறு, பால், தேயிலை, கோப்பி, கொக்கோ

## பறவைகள் பற்றிய சில தகவல்கள்

•ரோடுரன்னர் என்ற பறவை 40 கிலோமீற்றர் வேகத்தில் ஓடக்கூடியது. ஆனால் இது பறக்காது.

•நீரிலும் நிலத்திலும் வாழும் பறவை பென்குயின்.

•கிளிகள் 54 ஆண்டுகள் வரை உயிர் வாழும்.

•புறாக்கள் மணிக்கு 80 கிலோ மீற்றர் வேகத்தில் பறக்கக் கூடியது.

•ரென் என்ற பறவை தன் குஞ்சுகளுக்கு ஒரு நாளில் 1,271 முறை உணவு ஊட்டி விடுமாம்.

•சில்லிமட் எனும் ஆர்ட்டிக் பிரதேச கடல் பறவையில் ஆண் இனம்தான் முட்டையிடும்.

•கோல்டன் கழுகு வெவ்வேறு இடங்களில் இரண்டு கூடுகள் கட்டி வைத்துக் கொண்டு, ஆண்டுக்கொருமுறை கூட்டை மாற்றிக் கொள்ளுமாம்.

•கிவி என்ற பறவைக்கு இறகுகளுமில்லை. அதனால் பறக்கவும் முடியாது.

•ஹம்மிங் பறவையால் மட்டுமே பின்னோக்கிப் பறக்க முடியும். இப்பறவைகளுக்கு சிறகுகள் கிடையாது. இப்பறவையால் நடக்கவும் இயலாது.

•பறவைகளிலேயே அதிக அளவில் சிறகுகள் கொண்ட பறவை அன்னப்பறவைதான்.

•மார்ஷ் வார்ப்ளர் என்ற பறவை மற்ற பறவைகளைப் போல் குரலை மாற்றி ஒலி எழுப்பும் திறன் படைத்தது.

•டெரின் எனும் பறவை எட்டு மாதங்கள் வரை தொடர்ந்து நிற்காமல் பறக்கும் திறனுடையவை.

•பறவைகள் எவ்வளவு பறந்தாலும் அதற்கு வியர்க்காது. ஏனென்றால் அவற்று குவியர்வைச் சுரப்பிகள் கிடையாது.

•பூங்கொத்திப் பறவைகளின் எடை ஐந்து கிராம் மட்டுமே.

**இதற்கான விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும் புதிர்ப்போட்டியில் வெளியிடப்படும். அதற்கு முன்னதாக பெயர் விபரத்துடன் உங்களது பதில்கள் புகைப்படத்துடன் குறித்த முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் கிடைப்பதோடு படங்களுடன் பெயர்களும் பிரசுரிக்கப்படும்.**

## சென்றவார விடைகள்

(01).01.6 எண்களுக்கு இடையிலான வித்தியாசங்களது தொடர்பு

02.44 எண்களுக்கு இடையிலான வித்தியாசம்

03.90 = $9^2$ + 9

04.36, 2, 5, 8ஆவது எண்கள் இருமடங்கால் அதிகரித்தல்

05.81 முதல் இரு எண்களையும் கூட்டி 3ஆல் பெருக்குதல்

06.13/171

07.10 7 (21) முதல் எண்களது வித்தியாசத்தை 2ஆம் எண்ணால் பெருக்குதல்

08.45 முதலாவது எண்ணின் கனமூலத்தை அருகில் உள்ள எண்ணால் பெருக்குதல்

09.168 1ஆம் எண்ணையும் 2ஆம் எண்ணையும் பெருக்கி 1ஆம் எண்ணுக்கு அடுத்த பெறுமதி எண்ணால் பெருக்குதல் அதாவது 7x3x8

10.231 எண்களை மாற்றி எழுதுதல்

11.0.5 எண்களுக்கு இடையிலான வித்தியாசம் ÷ 2, + 3, -3, 2, + 6, - 6 என்ற வகையில் அமைந்துள்ளது

(02).12.0.3x3 = 9, 3x4 = 12 என்ற வகையில்

13.F எழுத்துக்களின் வித்தியாசம் 7.3.5.1ஆல் குறைந்து பின்னர் 1.3.5.7ஆல் அதிகரித்தல்

14.E 1,1,2,1,2,3 என்ற வகையில் எழுத்து தொடர் அமைதல்

15.O முதலில் 6,10,11, 4ஆவது எழுத்துக்கள் பின்னர் 10,12,13,3 பின்பு 14,14,15ஆவது எழுத்துக்கள்

16.5.M 2, 6, 10, 14ஆவது எழுத்துக்கள் பின்னர் 3,7, 15ஆவது எழுத்துக்கள்

17.V = (1,26,25), (2,24,33) என்ற வரிசையில் எழுத்துக்கள்

(03).18.பொற்கொல்லர் 19.வலு

20.மன்பதைச்சாதனங்கள் 21.சாதனங்கள்

22.கோள்கள் 23.போர்த்துக்கீசர்

24.கட்டற்றவை

(04).25.3,5 26.1,5 27.2,4 28.1,4

29.2,3 30.2,5 31.2,4 32.1,2

33.2,3 34.1,3

(05).35.76 = 32 x 3 - 20

36.13 = 10 2 = 4 x 2

37.212 38.லத்தீப்

39.விடுகதைகள் 40.அன்னாசிப்பழம்

41.முடி 42.நாய் 43.தையல்க்காரர்

44.படகு 45.மிளகாய் 46.குடை

47.ஆமை 48.சோளம்

## சரியான விடைகளை எழுதி பாராட்டுப் பெறுவோர்

பெயர் :- மா.தர்மினி
தரம் :- 06
பாடசாலை :- யா /இந்து மகளிர் கல்லூரி

பெயர் :- க.தேனுசா
தரம் :- 11
பாடசாலை:-யா/வேம்படி மகளிர் கல்லூரி

### விண்ணப்பதாரரின் விபரம்

முழுப்பெயர் :- ......................

பாடசாலை :- ......................


கல்வி கற்கும் தரம் :- ......................

வீட்டு முகவரி :- ......................

தொ.பேசி இலக்கம் :- ......................

# மகளிர்தினம் கொண்டாடப்படுவது எமக்குக் கிடைத்த பெரு வெற்றி

## வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் தெரிவிப்பு



மகளிர்தினம் கொண்டாடப் படுவது எமக்குக்கிடைத்த பெரு வெற்றி என வலி.மேற்கு பிர தேச சபைத் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் தெரி வித்துள்ளார்.

தொல்புரம் மாதர் சங்கத் தினால் தொல்புரம் சர்வோதய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற மகளிர்தின நிகழ் வில் சிறப்பு அதிதியாகக்கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள் ளார்.

இந் நிகழ்வில் குறித்த மாதர்சங்க அமைப்பினரால் தவி சாளரின் தன்னலமற்ற அற்பணிப் புடனான சேவை தொடர்பில் பொன் னாடைபோர்த்திக் கௌரவிக்கப் பட்டார்.

மேலும் அவர் கூறுகையில் இவ்வாறான நிகழ்வுகள் ஊடாக மகளிர் தொடர்பிலான விழிப் புணர்வு பரவலாக ஏற்படுத்தப் பட வேண்டும். இதுவே எமது இலக்கு நோக்கிய பயணத்தின் வெற்றிக் கல்லாக அமையும் இன்று பெண்கள் மற்றும் பெண் பிள் ளைகள் மீது சமூகம் கொண் டுள்ள பற்றுறுதியின் நிலையில் மேலும் பலமாற்றங்கள் இடம் பெறவேண்டும். இவ்வாறான மாற்றம் என்பது அடிமட்டத்தி லிருந்து நாட்டின் சகல மட்டங் களிலும் ஏற்படவேண்டும்.

இன்று இந நாட்டில் 50 வீதத திற்கும் அதிகமாகப் பெண்கள் காணப்படுகின்றனர் இவர்கள் சகல துறைகளிலும் தமக்கென தனியிடம் பெற்றுள்ளனர். சில இடங்களில் ஆண்களிலும் பார்க்க பெண்களே அதிக அளவில் காணப்படுவதும் குறிப்பிடக் கூடிய ஒன்றாகும். இவ் விட யங்கள் நாட்டின் இயங்கு நிலை யில் பெண்கள் கொண்டுள்ள பங்கினை மிகத்தெளிவாகக் காட்டி நிற்கின்றது.

இவ்வாறே தேசிய உற்பத் தியிலும் பெண்களின் பங்கே மிக அதிகமாக உள்ள நிலை குறிப் பிடக்கூடிய ஒன்றாகும் இந் நிலையிலேயே இந் நாட்டில் பெண்கள் தினமான பங்குனி 8ஆம் திகதியினை தேசிய விடு முறை தினமாக மாற்றுமாறு கோரி 10000 பெண்களின் கை யொப்பத்தினைப்பெற்று நாட்டின முதற்பெண்மணிக்கு அனுப் பினேன் இதுவரை எது வித மான பதிலும் கிடைக்கவில்லை.

இவ் விடயம் தொடர்பில் மீண் டும் இப் புதிய அரசின் முதல் பெண்மணிக்கும் அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள உள் ளேன். எமது நாட்டில் சாதனை படைத்த பெண்கள் பலர் இருந் துள்ளனர் இருந்தும் வருகின்ற னர். இனத்தின் விடுதலைக்கு கள மாடி காவியமான பெண் போரா ளிகள் வாழ்ந்த மண் இது இவ் வாறான சிறப்புக்களைக்கொண்ட எமது தேசத்தில் பெண் விடு தலை பெண்கள் மீதான அடக்கு முறைகள் தொடர்பில் மாற்றங் கள் பல ஏற்படுத்தப்பட வேண் டும். எனக்குறிப்பிட்டார் (க)

## மேலைத்தேய நடனப்போட்டி

கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தால் சித்திரைப் புத் தாண்டை முன்னிட்டு மாபெரும் மேலைத்தேய நடனப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆண், பெண் இருபாலாரும் தனித்தனியாகவோ அல்லது குழுவாகவோ போட்டிகளில் பங்கு கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

நிலையத் தலைவர் க.தயா ளன் தலைமையில் நடைபெற உள்ள இந்தப்போட்டியில் பங்கு கொள்ள விரும்புவோர் அன் றைய தினமே பதிவுகளை மேற் கொண்டு போட்டியில் பங்கு பற்ற முடியும். (90)

## முதியோர் கொடுப்பனவு வழங்கல்

வரணிப்பிரதேசத்தில் சமூக சேவைகள் அமைச்சினால் வழங் கப்படும் முதியோர் கொடுப் பனவு 2000 ரூபா வழங்கப்பட்டு வருகிறது.

பயனாளிகள் பணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறும் இக் கொடுப்பனவு நாளை மறுதினம் வரை மாத்திரமே வழங்கப்படும் எனவும்அஞ்சலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் கொடுப்பனவைப் பெற்றுக்கொண்ட பயனாளி ஒருவர் புதுவருடப்பிறப்பிற்கு முன்னதாக கொடுப்பனவு கிடைதத தால் பெரிதும் உதவியாக உள்ள தாகக்குறிப்பிட்டார். (150)

## கூட்டுறவுச்சபைக்கு புதிய நிர்வாகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட கூட்டுற வுச்சபையின் புதிய நிர்வாகத் தெரிவு கடந்த புதன்கிழமை இடம் பெற்றுள்ளது. மாவட்டக் கூட் டுறவு சபையின் உபதலைவர் ச.பி.அமலராசா தலைமையில் முற்பகல் 10.00 மணிக்கு கூட்டு றவு மண்டபத்தில் இடம்பெற்றது இந்நிகழ்வில் மாவட்ட கூட்டுறவு சபையின் புதிய தலைவராக அ.கேதீஸ்வரனும், உப தலைவராக நா.செல்வராசாவும் தெரிவு செய்யப்பட்டதுடன் ஏனைய உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்தின் மீள் குடியேற்றத்தின் பின்னர் ஜன நாயக முறைப்படி இத்தெரிவு இடம்பெற்றுள்ளது.

கடந்த ஐந்தாண்டுகளாக அர சினாலும் அரசியல் கட்சிகளினா லும் நிர்வாகம் தெரிவு செய்யப் பட்ட நிலையில் தற்போது ஜன நாயகமுறைப்படி இத்தெரிவுகள் இடம்பெற்றுள்ளன. (160)

## விவசாயக் காணிகள் உவரடையும் நிலை

### நிவாரணம் கோரும் குஞ்சுக்குளம் மக்கள்.

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வன்னேரிக்குளம் கிராமத்தின் குஞ்சுக்குளம் மக்கள் தமது கிராமம் முழுமையாக உவரடைந்திருப்பதன் காரணமாக தமக்கு நிவாரணம் வழங்கவேண்டுமென கோரிக்கை விடுத் துள்ளதுடன், இதற்கு அரச அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வன்னேரிக்குளம் கிராமம் கிளிநொச்சி மாவட்டத்தின் உவ ர்ப்பத்தினை எதிர்கொண்டுள்ள கிராமம் ஆகும். இக்கிராமத்தின் ஒருபகுதியான குஞ்சுக்குளம் முழுமையாக உவரடைந்துள்ளது. இதன் காரணமாக 500 ஏக்கர் வரையான நெற்செய்கை நிலம் உவரடைந்துள்ளது. குஞ்சுக்குளம் கிராமத்தில் வாழ்ந்த 50 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்து ஐயனார்புரம், ஆனைவிழுந் தான்குளம் ஆகிய பகுதிகளில் குடியேறியுள்ளனர்.

இந்நிலையில் குஞ்சுக்குளம் கிராம மக்கள் தங்களுடைய வயல்நிலம் மேட்டுப்பயிர்ச்செய்கை நிலங்கள் உவரடைந்திருப்பதன் காரணமாக நிவாரண உதவிகளை வழங்குமாறு அவசரமாக கோரிக்கை விடுத்துள்ளனர். (160)

## வாரம் ஒரு காரம்

### தமிழர் தலை விதி தற்போது தண்ணீரில் வந்து நிற்கின்றது மலர்ந்தது தமிழரசு என்றோம்!.... எங்கேயது மடிந்துவிட்டதா?......

தமிழ்தேசிய கூட்டமைப்பு மாகாணசபைத் தேர்தலில் வெற்றி பெற்று வட மாகாண சபையை பொறுப்பேற்ற வேளை மலர்ந்தது தமிழரசு என்று பலமாக மார்புதட்டினோம். நடந்த துன்பங்களிற்கெல்லாம் நாள டைவில் தீர்வு வந்து விட்டது என்று இறைவனிற்கு நன்றி சொன்னோம்.

சிங்களப் பேரினவாதம் திட்டமிட்டு தமிழர் கல்வியை சிதைக் கின்றது. சுயாட்சி யென்கின்ற பெயரில் எமது கல்வி நிர்வாக அதி காரங்களை தமிழ் கல்வியமைச்சர் ஒருவர் பொறுப்பேற்பதையெண்ணி மனம் பூரிப்படைந்தோம். முதலமைச்சர் உட்பட எமது அமைச்சரவை யில் படித்தவர்கள் துறை தேர்ந்தவர்கள் இருக்கின்றார்கள் மற்றைய மாகாணசபைகளை விட இது வினைத்திறனாக செயற்படும் என் றெல்லாம் எதிர்பார்த்திருந்தோம்.

கடந்தது நாட்கள் நடந்தது எதுவுமின்றி.....

ஏனென்று கேட்டோம "எங்களிடம் அதிகாரமில்லையென்றார்கள்". மகிந்த அரசு மக்களிற்கு துரோகம் செய்கின்றதென்றார்கள். தங்களை ஏமாற்றுகின்றது என்றார்கள். மாற்றுவழியென்ன என்றோம்?... "மைத்திரியை கொண்டுவாருங்கள்" என்றார்கள். மறுவார்த்தையின்றி பெரும்பான்மைத் தெரிவையும் தோற்கடித்தோம்.

மைத்திரிவந்தும் நாளாச்சு தமிழர்க்கு மடிப்பிச்சை இன்னும் மாற வில்லை. சுத்தமான காற்றும் நீரும் மட்டும்தான் இதுவரை தமிழர்க்கு மிச்சமாய் இருந்தது. இன்று தலைவிதி தண்ணீரில் வந்து நிற்கிறது. இப்போது சொல்லுங்கள் மலர்ந்த தமிழரசு எங்கே மடிந்துவிட்டதா?....

அரசியல் மாற்றங்கள் இல்லாதிருந்தால் மின்னல் வேகத்தில் நகர்ந்த செயற்பாட்டின் மூலம் என்றோ இதற்குத் தீர்வு கிடைத்திருக் கும் என நன்நீர் செயற்குழுவின் செயலாளர் சிவமகிந்தன் விமர்சிக்கின் றார். "ஐங்கரநேசன் ஓர் அடி எடுத்து வைக்கவே ஆறுமாதமாகும் அதற்குள் தண்ணீரால் சனம் அரைவாசி நோய்வாய்ப்பட்டுவிடும்" என்கிறார் அவர்.

தியாகத்தின் திருவுருவம் அன்று வீற்றிருந்த நல்லை மண்ணில் தாகத்தில் திருவுருவங்கள் இன்று வீற்றிருக்கின்றன. குமரா உனக் கேனும் இடைவெளி புரியவில்லையா?

இணக்கப்பாடுகள் இறுக்கமானால் இருக்காது தமிழர்க்கு இனப்பிரச்சினை என்று திட்டமிட்டு திசைமாறுகின்றது முதலமைச சரின் அரசியல். கோடிக்குள் நடக்க வேண்டிய கொல்லைச் சண் டையை ஆதாரப்படுத்தி இன்று மீண்டும் அரங்கேற்றுகின்றனர் அடுத்த இனப்பிரச்சினையை.

ரணில் - விக்னேஸ்வரன் என்கின்ற தனிநபர்களின் சண்டைகள் இனப்பிரச்சினையின் இணக்கப்பாட்டையே சீர்குலைக்கு மென்றால் மற்றைய மாகாணசபை உறுப்பினர்கள் இருந்தென்ன லாபம்.

இது ஒரு புறமிருக்க சிங்கள தேசம் திட்டமிட்டு தமிழர் கல்வியை சீர் குலைக்கின்றது என்றெல்லாம் பலமாக எக்காளமிட்டோம். இன்று யார் யாரது கல்வியை சீர்குலைக்கின்றனர்?...... இதுவரை நடைபெறாத பல சீர்கேடுகள் இன்று வடமாகாண கல்வி நிர்வாகத்துக்குள் இடம் பெறுகின்றன.

செய் அல்லது செத்துமடி என்று பிலிம் காட்டி வந்த குருகுலராஜா உண்மையில் கவரிமான் பரம்பரையாக இருந்தால் தற்போது செத்தி ருக்க வேண்டும். அப்பாவி ஆசிரியர்கள் இடமாற்றம் என்கின்ற பெய ரில் பலமாகப் பாதிக்கப்பட அதிகாரிகளின் உறவுகள் பாதுகாக் கப்படுகின்றன என்பதை ஆதாரங்களுடன் ஆசிரியர்கள் முன்வைத் துள்ளனர்.

மாகாண அமைச்சின் உயர் அதிகாரியாக இருக்கின்ற நிர்வாகி யின் மனைவிக்கு இடமாற்றம் இரத்து; வடமராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த பிரதேச செயலாளர் ஒருவரின் மனைவிக்கு இடமாற்றம் இரத்து. அந்தப் பிரதேச கல்வி உயர் நிர்வாகியின் மனைவிக்கு இட மாற்றம் இரத்து. அதே போல் யாழ்.கல்வி வலயத்தில் உள்ள உயர் அதிகாரியின் மனைவிக்கு இடமாற்றம் இரத்து என்று பல உள்ளன.

இத்தனைக்கும் மேலாக நிர்வாகம் சார் பல குற்றச்சாட்டுக்களை ஆசிரிய சங்கங்கள் முன்வைக்கின்றன. இவ்வாறெல்லாம் இருக்கும் போது மாகாண சபைக்கு அப்பால் மத்திய அரசின் கீழ் முன்பு போல் கல்வி நிர்வாகம் இருந்திருந்தால் ஊழல்கள் குறைவாக இருந்திருக்கும் என்கின்ற நிலை கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் மத்தியில் கூட தற்போது தலைதூக்கிவிட்டன.

யார் ஆள்கின்றனர் யாரை யார் தெரிவு செய்திருக்க வேண்டும் என்கின்ற அரசியல் பக்கங்களிற்கப்பால் சிந்தித்தோமானால் சுயாட்சி என்கின்ற அதிகார அந்தஸ்து அற்றவர்கள் தமிழர்கள் என்கின்ற நிலை தற்போது உருவாகிவிட்டது. இதை ஓர் இடத்தில் தற்போதைய பிரதமர்கூடக் கூறியிருக்கின்றார். அதிகாரங்களைக் கொடுத்தும் கூட மாகாணசபையை இயக்க அருகதையற்றவர்கள் பிரதமரை விமர் சிப்பதற்கு என்ன அருகதை உள்ளது.

- வெண்கட்டியன்

# சிறுவனின் மரணம் தொடர்பில் மூவர் சந்தேகத்தில் கைது

வவுனியா நெளுக்குளம் சாம்பல்தோட்டம் பகுதியில் கழுத்து வெட்டப்பட்டு கொலை செய்யப்பட்ட சிறுவனின் மரணம் தொடர்பில் மூவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் சாம்பல் தோட்டத்தில் அமைந்துள்ள சிறுவனின் வீட்டின் பின்புறமிருந்து கழுத்து வெட்டப்பட்ட நிலையில் சடலம் மீட்கப்பட்டிருந்தது.

இந் நிலையில் இக் கொலை தொடர்பில் வீட்டில் வர்ணப் பூச்சில் (பெயின்டிங்) ஈடுபட்டு வந்த மூவரை பொலிஸார் சந்தேகத்தில் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மாற்றுவழி மூலம் தேர்தலில் போட்டியிடுவேன்

## - முன்னாள் அமைச்சர் எச்சரிக்கை -

இலஞ்சஊழல் மற்றும் மோசடி குற்றச்சாட்டுக்கள் உள்ள யாருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் எதிர்வரும் தேர்தலில் போட்டியிட இடம் தரப்படமாட்டாது என நிலவி வரும் விடயம் குறித்து முன்னெச்சரிக்கையாக கருத்து வெளியிட்டுள்ள முன்னாள் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே, அவ்வாறு தாம் புறக்கணிக்கப்பட்டால் மாற்றுவழியில் தேர்தலில் போட்டியிடப்போவதாகவும் அவ்வாறே மற்றவர்களும் இணையும் போது இலங்கை அரசியலில் புதிய திருப்பம் வரும் எனவும் தெரிவித்துள்ளார்.

சிங்கள வானொலி நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்ட போதே இவ்வாறு தெரிவித்த அவர், யார் வேண்டுமானாலும் யார் மீது வேண்டுமானாலும் குற்றஞ்சுமத்தலாம். ஆனால், அவை நிரூபிக்கப்பட வேண்டும்.

அவ்வாறு குற்றச்சாட்டுள்ளவர்களுக்கு தேர்தலில் போட்டியிட அனுமதிப்பதில்லையென கட்சி முடிவெடுக்குமாக இருந்தால் மாற்று வழி மூலம் தமது அரசியல் எதிர்காலத்தைத் தேர்ந்தெடுக்க அனைவரும் முன்வருவார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

# திருமணத்தின் பின்னர் பெண் மீது உத்தரவுகளை ஆண் திணிக்க முடியாது!

## - இலங்கை மனிதஉரிமை ஆணைக்குழுவின் மட்டக்களப்பு இணைப்பாளர் -

(மட்டக்களப்பு)

திருமணத்தின் பின் பெண்ணின் மீது உத்தரவுகளை ஆண் திணிக்க முடியாது மிருகங்களில் ஆண்மிருகங்களை உயர்வாக கருதப்படுகின்றது. ஆனால் மனித குலத்தில் உயர்வாக பெண்களுக்கே உயர்வான இடம் வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் எம்.ஏ. அஸீஸ் தெரிவித்தார்.

பெண்களை அடித்துத் துன்புறுத்துவது குற்றவியல் சட்டமாகும். அதன்மூலம் குற்றவாளியாக கருதப்படும் ஒருவருக்கு சிறைத் தண்டனையும் வழங்கப்படும்.

திருமணத்தின் பின்னர் ஒரு பெண்ணின் முழுப் பொறுப்பினையும் அந்த ஆணே ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் பெண்ணின் மீது உத்தரவுகளை அவர் திணிக்க முடியாது.

பெண்களை ஏசுவது அவர்களை இழிவுபடுத்துவதாகவே கருதப்படுகின்றது. 1978ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் 03 ஆம் பிரிவின் படி பெண்ணின் அடிப்படை உரிமை மீறலாக கருதப்பட்டு வழக்குத் தொடர முடியும்.

இந்த நாட்டில் இரண்டு சட்ட நடைமுறைகள் உள்ளன. குற்றவியல் சட்டம், சிவில் சட்டம். ஒரு பெண்ணை அடித்து துன்புறுத்தும சம்பவமானது குற்றவியல் சட்டமாகும் இதன்மூலம் ஒருவருக்கு குறைந்தது ஏழு வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்க முடியும்.

குடும்பத்தில் கருத்து முரண்பாடுகள் ஏற்படும்போது அது தொடர்பில் வழக்குத் தொடர முடியாது ஆனால் அவற்றினை இணக்க சபைக்கு செல்வதன் மூலம் தீர்த்துக் கொள்ள முடியும்.

ஆண்கள் குறுக்குவழிகளினால் பணம் சம்பாதிக்க முனையும்போது அவற்றினால் பாதிக்கப்படுவது அந்தக் குடும்பமும் அதில் உள்ள பெண்களுமாகும். அதேபோன்று பெண்களும் மட்டுப்படுத்தப்பட்ட ஆசைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

அதிகளவான போதை பாவனையே வீட்டு வன்முறைகளுக்கு காரணமாக அதிகளவில் பதிவு செய்யப்படுகின்றன. மதுபாவனையை கட்டுப்படுத்தி குடும்பத்துடன் ஒன்றித்துச் செல்வதன் மூலமே ஒரு இன்பமான குடும்பத்தினை கட்டியெழுப்ப முடியும்.

சமூகத்தின் கௌரவமான வாழ்வினை நாங்கள் எதிர்நோக்குவதாக இருந்தால் எமது நடத்தையினை அதற்கேற்றாற் போல கொண்டு செல்ல வேண்டும். பொறுப்பு இருவருக்கும் உள்ளது கணவன், மனைவிக்கு இடையே புரிந்துணர்வு இருக்க வேண்டும் என்றார்.

# பண்டிகைக்கால சேவையை நேரில் ஆராய்ந்த அமைச்சர்

பேலியகொட மத்திய மீன் சந்தையில் தொடர்ந்தும் முறைகேடுகள் நடப்பதாக மீன்பிடித் துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அமைச்சர் நேற்று காலை பேலியகொட மத்திய மீன் சந்தைக்கு விஜயம் செய்து நிலைமைகளை பார்வையிட்ட பின்னர் ஊடகங்களிடம் இதனைக் கூறியுள்ளார்.

பண்டிகைக் காலத்தில் நுகர்வோருக்கு உரிய முறையில் சேவைகள் வழங்கப்படுகிறதா என்பதை கண்காணிக்கும் நோக்கிலேயே அமைச்சர் மீன் சந்தைக்கு நேரில் விஜயம் செய்து நிலைமைகளை பார்வையிட்டுள்ளார்.

நுகர்வோருக்கு மாத்திரமல்லாது வர்த்தகர்களுக்கு காணப்படும் வசதிகள் குறித்தும் அமைச்சர் கவனம் செலுத்தியுள்ளார்.

மத்திய மீன் சந்தையில் இடம்பெறும் சில வெளிநாட்டு மீன் வர்த்தகம் உரிய நடைமுறைகளின் அடிப்படையில் நடப்பதில்லை எனவும அமைச்சர் அமரவீர குறிப்பிட்டுள்ளார்.

# பொய்களை மெய்யாக்க அரசாங்கம் முயற்சி

## - முன்னாள் ஜனாதிபதி குற்றச்சாட்டு -

(கொழும்பு)

அரசாங்கம் பொய்களை மெய்ப்பித்துக் காட்டுவதற்கு கூடுதல் முயற்சி எடுத்து வருவதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அரசாங்கம் தனது இயலாமையை மூடி மறைத்துக் கொள்ளும் நோக்கில் இவ்வாறு பொய்யை உண்மையாக்கக் முயற்சித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பொய் ஒன்றை உண்மையாக்குவதற்கு 100 தடவைகள் அதே பொய்யைக் கூறும் கோபல்ஸின் தர்க்கத்திற்கு அமைய இந்த அரசாங்கம் செயற்பட முயற்சிக்கின்றது

நாம் அனைவரும் வாழ்வதற்கு ஒரு நாடு தேவை எனவும், நாடு துண்டு துண்டாக பிளவடைந்துவிட்டால் பாரிய பிரச்சினை ஏற்படும் என அவர் தெரிவித்துள்ளார். தேசிய பாதுகாப்பு இல்லாத நாட்டில் நல்லாட்சி அல்ல வேறு எந்த ஆட்சியையும் முன்னெடுக்க முடியாது

கடந்த காலத்தில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து சிங்கள மக்களுக்கு மட்டுமன்றி முஸ்லிம் தமிழ் மக்களுக்கும் சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுக்க முடிந்தது என அவர் தெரிவித்துள்ளார்.

சிங்கள மக்களுக்காக யுத்தம் செய்யப்பட்டது என சிலர் பிழையாகக் கருதுகின்றனர் பயங்கரவாதத்திலிருந்து அனைத்து மக்களையும் மீட்டெடுக்கும் நோக்கில் யுத்தம் முன்னெடுக்கப்பட்டது

இந்த நாடு அனைவருக்கும் சொந்தமானது எனவும், வடக்கு கிழக்கு கொழும்பு தெற்கு மத்திய மலைநாடு உள்ளிட்ட நாட்டின் எந்தவொரு பகுதியும் ஒரு இன சமூகத்திற்குச் சொந்தமானது என கூற முடியாது அனைத்து மக்களும் ஒற்றுமையுடன் வாழ வேண்டியது அவசியமானது

நாட்டின் தலைவர் ஒரு தொகுதி, ஒரு இன சமூகம், ஒரு பிரிவினருக்கு மட்டும் சேவையாற்ற முடியாது முழு நாட்டுக்கும் சேவையாற்ற வேண்டும்.


மாத்தறையில் 7, 8 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட அப்பம் இன்று 10 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது பொருட்கள் சேவைகளின் விலைகள் உயர்த்தப்பட்டுள்ளன

அதிகாரம் இருக்கும் போது மக்களின் குரலை கேட்பதில்லை அந்த நிலைமையே தற்போதைய ஆட்சியாளர்களுக்கும் ஏற்பட்டுள்ளது

முஸ்லிம் மக்களை எம்மிடமிருந்து பிரிக்க முயற்சிக்கப்படுகின்றது என்றார்.

# மகாநாயக்க தேரரின் சேவை பௌத்தசாசனத்திற்கு ஒளிகொடுத்துள்ளது

## - அனுதாபச்செய்தியில் ஜனாதிபதி -



உடுகம ஸ்ரீ புத்தரகித மகாநாயக்க தேரர் செய்த தன்னலமற்ற சேவைகள் பௌத்த சாசனத்திற்கு மிகப்பெரும் ஒளியைக் கொண்டுவந்துள்ளது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கண்டி அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் உடுகம ஸ்ரீ புத்தரகித்த மகாநாயக்க தேரரின் மறைவையொட்டி ஜனாதிபதி விடுத்திருக்கும் அனுதாபச் செய்தியிலேயே இவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மகாநாயக்க தேரரின் தர்மச் செயற்பாடுகள் அவரை ஒரு மிகப்பெரும் உன்னதமான அ[illegible]மையாக வெளிக்காட்டியது [illegible]றும் அவரது பிந்திய காலங்களில் பௌத்த தர்மத்திற்கான பணிகளைத் தொடர்வதற்கு இது அவருக்கு ஒரு உள்ளார்ந்த பலத்தைக் கொடுத்தது என நான் நம்புகிறேன்

உடுகம ஸ்ரீ புத்தரகித தேரர், அஸ்கிரிய பீடத்தின் மகா நாயக்க தேரர் காலம் சென்ற உடுகம ஸ்ரீ ரத்னபால மகாநாயக்க தேரரின் ஒரு மாணவராக இருந்து தர்ம கற்கைகளைப் பூர்த்தி செய்ததன் பின்னர் 1945 ஆம் ஆண்டு சாசனத்திற்குள் பிரவேசித்து பௌத்த துறவியானார். காலம் சென்ற மகாநாயக்க தேரர் ஸ்ரீ தலதா மாளிகையில் புத்தபெருமானின் புனித தந்தத்திற்கு தனிப்பட்ட முறையில் பூஜைகள் செய்து புத்தபெருமானுக்கு சேவை செய்த மகிழ்ச்சியை அடைந்து கொண்டார். புனித தந்தத்தை மக்களுக்கு மிகநெருக்கமாகக் கொண்டு வருவதற்காக அவர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் மூலம் மகாநாயக்க தேரர் மிகப்பெரும் திருப்தியடைந்தார் என்பதை நான் அறிவேன் எனத் தெரிவித்துள்ளார்.

# அரசாங்கம் மாறினாலும் அதிகாரிகளின் கடமை மாறுவதில்லை

## - அமைச்சர் ஜோசப்மைக்கல் பெரேரா தெரிவிப்பு -

(கொழும்பு)

அரசாங்கம் மாறினாலும் அரச அதிகாரிகளின் கடமை மாறுவதில்லை. கிராமத்துக்கு அரச அதிகாரி பெற்றுக்கொடுக்கும் செயற்பாட்டிலே அவரது தலைமைத்துவம் தங்கியுள்ளது என்று உள்நாட்டு விவகார அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்தார்.

மேல்மாகாணத்தில் கிராம அதிகாரிக்கான பயிற்சியை முடித்த 140 பேருக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், நாட்டின் பிரதேச நிர்வாகமானது மக்களுக்கு சிறந்த சேவையைப் பெற்றுக் கொடுப்பதற்கு மாற்றங்களை செய்ய தீர்மானித்துள்ளது. அவ்விடத்தில் கிராமசேவையாளர் பொறுப்புடன் செயற்படவேண்டும்.

அரசாங்கம் மாறினால் அமைச்சர்களாகிய நாங்கள் செல்ல வேண்டிவரும். ஆனால் அரச் அதிகாரிகளாகிய நீங்கள் தொடர்ந்தும் இருப்பீர்கள் தோல்வியடைந்த பின்னர் யாருமே எங்களை மதிக்க மாட்டார்கள். ஆனால் நீங்கள் தொடர்ந்து இருப்பதால் உங்களுக்கு நல்ல வரவேற்புள்ளது! எந்தவொரு அரசாங்கமும் வந்துபோகும். அதுதான் உங்களின் முக்கியத்துவம்.

# வடவரணிப்பிரதேசத்தில் வாழ்வாதார உதவிகள்

வடவரணிப்பிரதேசத்தில் தற்போது வேள்ட்விசன் நிறுவனம் பலவிதமான வாழ்வாதார உதவிகளை வழங்கி வருகிறது.

பல்பொருள் வாணிப உதவிகள் கால்நடை வளர்ப்பு, பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டி நிறைகுறைந்த பிள்ளைகளை கவனித்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

அதேவேளை கடந்த வருடம் வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட குடும்பம் இரண்டிற்கு வளர்ப்பு மாடு வழங்கப்பட்டு அதைப் பராமரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பள்ளி மாணவன் ஒருவனுக்கு சுமார் பதினையாயிரம் ரூபா பெறுமதியான துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டுள்ளது.

58.பூமி சூரியனை ஒரு முறை சுற்ற எடுக்கும் காலம் எத்தனை நாட்கள்? ..........................................

59.பூமி தன்னைத்தானே சுற்ற எடுக்கும் காலம் எவ்வளவு? ..........................................

60.எமது நாட்டின் எந்த நகரத்தில் பனிகாலத்தில் பனிஉறையும்? ..........................................

61.நான்கு வகையான காலநிலையில் ஒன்றை எழுதுங்கள் ..........................................

62.ஒட்டகங்கள் எமது நாட்டில் ஏன் காணப்படுவதில்லை? ..........................................

63.பனிக்கட்டியில் இருந்து நீரைப் பெற என்ன செய்ய வேண்டும்? ..........................................

64.இரவு பகல் ஏன் உண்டாகிறது? ..........................................

65.பகலில் ஏன் நட்சத்திரங்கள் தெரிவதில்லை? ..........................................

66.சூரியன் எத்தனை மணிக்கு உதயமாகும் என 24 மணித்தியால நேரத்தில் கூறுக ..........................................

67.சூரியன் எத்தனை மணிக்கு மறையும் என 24 மணித்தியால நேரத்தில் கூறுக ..........................................

68.வருமானம் என்பதன் எதிர்க்கருத்தை எழுதுக ..........................................

**(11).சொற்களை ஒழுங்காக்கி அர்த்தமுள்ள வசனங்களை உருவாக்குக**

69.நுழையுமுன் / கதவை / வாருங்கள் / தட்டிவிட்டு / வீட்டுக்குள்

..........................................

70.பற்சுத்தைக்குக் / சிறுவர்களின் / ஒன்றை / காரணம் / எழுதுங்கள்

..........................................

**(12).பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான சிங்களச் சொல்லை சிங்களத்தில் எழுதுங்கள்**

71.மழை .......................... 72.மாலை ..........................

73.மீன் ..........................

**(13).சரியான விடையின் கீழ்க் கோடிடுக**

74.வாகனங்கள் செல்லலாம் என்பதைக் காட்ட வீதிகளில் எரியும் விளக்கின் நிறம்
(1).நீலம் (2).கறுப்பு (3).பச்சை

75.புகையிரத நிலையம் ஒன்றில் நாளாந்தம் நடைபெறாத நிகழ்ச்சி ஒன்று
(1).பயணத்திற்கான அனுமதிப்பத்திரம் வழங்கல்
(2).புகையிரதம் புகையிரத நிலையத்தினுள் நுழைவதற்கான சமிக்ஞை வழங்கல்
(3).பருவகால சீட்டுக்களை வழங்குதல்

### நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(01).1.அகப்பை 2.சாந்தகப்பை 3.வாள் 4.1.சீப்பு 2.கத்தரிக்கோல் (02).5.2 6.3 7.1 8.3 9.2 10.2 11.1 12.3 13.2
(03).14.துன்பத்தின் மேல் துன்பம் 15.தங்கியிருத்தல் (04).16.நத்தார் 17.விவசாயி
18.இறந்தகாலம் 19.காட்டு விலங்குகளிலிருந்து பாதுகாக்க 20.11பேர் 21.காட்டில்
22.இல்லை 23.பந்து 24.தென்னோலை, கரும்பு (05).25 - 29 வரை விரும்பிய வசனம்
(06).30.முப்பாய்ச்சல் 31.ரட்ணம் 32.நதிகா,மஞ்சுளா 33.மஞ்சுளா 34.4.2
35.மஞ்சுளா 36.கமலா (07).37.கபிரிஞ்சா 38.சந்திரவட்டக்கல் 39.குர்ஆன்
40.சிவனொளிபாதமலை 41.காங்கேசன்துறை 42.கட்டுநாயக்க 43.சிகிரியா
44.ஆசியா (08).45 - 48 வரை விரும்பியவசனம் (09).49.1.குறைந்த 2.செயற்கை
3.சூடு 50.1.குன்று 2.பராமரித்தல் 3.நடுவில் 4.யோசனை 51.3km 52.737m
53.Blue colour 2.white colour 54.பீதுறுதாலகாலமலை 55.காட்டிப்பு
56.நீர்த்தாவரங்கள் 57.1.டன்சினன் 2.துன்கிந்த (10).58.நூற்றாண்டு 59.வெள்ளிவிழா
(11).60.2 61.1 62.1

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



## தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - II
1மணி 15நிமிடம்



# கல்வி முரசு

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.

**(01).பின்வரும் சிங்களச் சொற்களை தமிழில் எழுதுக**

01.கரவில .......................... 02.சிஷ்யா ..........................

03.ஹொந்த .......................... 04.மல்லி ..........................

05.முருங்கா ..........................

**(02).அடைப்புக்குள் உள்ள சொற்களைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புக**

06.நானுஓயா பாடசாலை .......................... (சிறுவர்கள், சிறுவன், சிறுமி) துறைமுகத்தையும் நாடாளுமன்றத்தையும் பார்வையிடச் சென்றனர்

07.சூரியன் மறைந்து செல்லும் மாலைவேளைகளில் கடற்கரை ரம்மியமாகக் காட்சி ..........................
(அளித்தது, அளிக்கும், அளியும்)

08.மண்டபத்தில் இருந்த குத்துவிளக்கை ஏற்றுவதற்கு அதிபர் பிரதம அதிதிக்கு உதவி ..........................
(செய்வார், செய்தார், செய்கிறார்)

09.நல்ல பிள்ளைகள் பெரியோரைக் கனம் .......................... (பன்னுவர், பண்ணுவர்)

**(03).பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் அடைப்பினுள் எழுதுக**

10.தரம் 5 மாணவர்கள் 11 வயதின் கீழ் உள்ள விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்ற முடியும் (.......)

11.இரவில் பூக்கும் பூக்கள் வெள்ளை நிறமாக அல்லது மணமுடையதாக இருக்கும் (.......)

12.அன்னம் பாலில் இருந்து நீரை வேறாக்கும் இயல்புடையது (.......)

13.தாவரங்கள் வளர நீர் அத்தியாவசியமற்றது (.......)

14.தவளை ஈருடக வாழியாகும் (.......)

15.பிற்பகல் முற்பகல் என நாளைப் பிரிக்கும் நேரம் பகல் 12.00 மணியாகும் (.......)

16.கொடித்தோடை ஒரு வித்திலைத் தாவரமாகும் (.......)

17.மிளகு, பாக்கு, கருவாப்பட்டை என்பன தாவரங்களாகும் (.......)

18.கடிகாரத்தின் மூலம் அளவிடக்கூடிய மிகச்சிறிய நேரம் நிமிடம் ஆகும் (.......)

19.நீரில் காணப்படும் ஒட்சிசன் வாயுவை மீன்கள் சுவாசிக்கின்றன (.......)

**(04).பின்வரும் வினாக்களுக்கு விடை தருக**

20.7மீற்றர் உயரமுள்ள தூண் ஒன்றின் மூலம் 21மீற்றர் உயரமுள்ள நிழல் தெரியும் எனின் 18 மீற்றர் நீளமுள்ள நிழல் தெரியும் தூணின் உயரம் எத்தனை மீற்றர்?
..........................................

21.3,4,5 என்பவற்றால் பிரிக்கும் போது 1ஐ மிகுதியாகத் தரும் மிகச்சிறிய எண் ..........................

22.நிமிடத்திற்கு 25 பைக்கற்றுக்கள் வீதம் 7 நிமிடங்களில் தயாரிக்கப்படும் பால் பைக்கற்றுக்களின் எண்ணிக்கை எத்தனை?


23. மண்டபம் ஒன்றில் 329 கதிரைகளை நிரைக்கு 7 விதம் எத்தனை நிரல்களில் வைக்கலாம்?

.....................................................................................................

24.1. $\frac{1}{4} + \frac{2}{8} = \frac{\square}{8}$

2. 8 0 2 பெட்டியில் வரவேண்டிய சரியான இலக்கத்தை தருக

$$\begin{array}{r} 802 \\ -\ 4\square5 \\ \hline 377 \end{array}$$

25. 

இவ்வுருவின் சுற்றளவு எத்தனை cm? .....................................................

26. 3L 525 ml இதனை மில்லிலீற்றரில் தருக? .....................................................


**(05). பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக**

27. வாழ்க்கை வட்டத்தை முழுமையாக்க நீரைப் பயன்படுத்தும் அங்கி எது?
01. நீர்ப்பாம்பு 02. தவளை 03. நண்டு

28. ஒரே பாத்திரத்தில் நீரையும் மண்ணெண்ணையும் விட்டால்
01. இரண்டும் கலந்து காணப்படும்
02. மண்ணெண்ணையின் மேல் நீர் காணப்படும்
03. நீரின் மேல் மண்ணெண்ணை காணப்படும்


29. எமது நாட்டு நாடாளுமன்றம் அமைந்துள்ள இடம்
01. கண்டி 02. கொழும்பு 03. ஸ்ரீஜெயவர்த்தனபுர

30. எப்படத்து புனலின் மூலம் நீரை செலுத்துதல் கடினமானது?




31. 1969ஆம் ஆண்டு நீலஆம்ஸ்ரோங் என்பவரால் செய்யப்பட்ட சாதனை
01. ஈர்ப்பு விசையைக் கண்டுபிடித்தமை
02. நிலவில் முதன் முதலில் காலடி எடுத்து வைத்தமை
03. நிலவில் காலடி எடுத்து வைக்க முடியாது எனக்கண்டு பிடித்தமை

32. வெகுவிரைவில் அணைந்து போகும் மெழுகுவர்த்தி எது?




33. சூரியனுக்கு மிக அண்மையில் உள்ள கோள்
01. புதன் 02. சனி 03. வெள்ளி

34. 


இலகுவாக திறப்பதற்கு கையை வைக்க வேண்டிய பகுதி
01. A 02. B 03. D

35. பழுதடைந்த மின்குமிழ் ஒன்றினுள் நீரை இட்டு மூடிய பின் அதனை எழுத்துக்களின் மேல் பிடிக்கும் போது எழுத்துக்களின் விம்பம் தெரியும் முறை
01. சிறிய எழுத்துக்கள்
02. பெரிய எழுத்துக்கள்
03. எழுத்துக்கள் தெரிவதில்லை






36. மூடி அகற்றப்பட்ட சோடாப்பானப் போத்தல் ஒன்றின் மேல் 10 சதநாணயம் ஒன்றை வைத்து அதனை கொதிநீர் கொண்ட பாத்திரத்தின் மேல் வைத்தால் பெறக்கூடிய அவதானம்
01. நாணயம் சற்று உயர்ந்து காணப்படும்
02. நாணயம் கீழே விழும்
03. நாணயம் நீர்ப்பாத்திரத்தினுள் விழும்




37. ஊசியில் நூல் கோர்த்தல், பேனையால் எழுதுதல், கரண்டியால் கரைத்தல் போன்ற வேலைகளுக்கு உதவும் விரல்
01. பெருவிரலும் சுட்டுவிரலும் 02. நடுவிரலும் சுட்டுவிரலும் 03. சின்ன விரலும் பெருவிரலும்

38. 

மேசைமேல் வைக்கப்பட்டுள்ள இரும்புக் கௌவியை மேசையின் அடுத்த பக்கத்திற்கு இழுத்துச் செல்லக் கூடியது
01. கிளிப்பு 02. காந்தம் 03. ஆணி

**(06). கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தில் கீறிடப்பட்ட சொல்லின் பொருளை தமிழில் எழுதுக**

**I <u>can</u> <u>fly</u>, I have <u>green fathers</u>, What am I, It's <u>parrot</u>**

39. can ..................................... 40. fly .....................................

41. green fathers ..................................... 42. what .....................................

43. parrot .....................................

**(07). A,B ஆகிய பகுதிகளை பொருத்தமானவற்றுடன் இணைக்குக**

| A | B |
|---|---|
| 44. இரும்புத் துண்டுகள், பேணி, பொலிதீன் | A - இலங்கையின் தலைநகரம் |
| 45. தொலைபேசி, இ.மெயில், இண்டர்நெட் | B - பூவின் பகுதிகள் |
| 46. கோழி, தீக்கோழி | C - மின் கடத்திகள் |
| 47. ஸ்ரீ ஜெயவர்த்தனபுர | D - தகவல் தரக்கூடியவைகள் |
| 48. அல்லி, மகரந்தம், தம்பம் | E - இலங்கைக்குரியன |
| 49. இரும்புக்கம்பி, செப்புக்கம்பி, அலுமினியக்கம்பி | F - மனிதன் சூழலில் இடும் பொருட்கள் |

**(08). பின்வரும் எண்தொடரை பூர்த்தி செய்க**

50. 19, 22, 24, 27, .........., .......... 51. 5, 15, 45, .........., ..........

52. 1, 10, 100, .........., .......... 53. 1000, 500, 250, .........., ..........

54. 2, 5, 11, 20, .........., ..........

**(09). "நாம் செய்திகளைப் பரிமாறிக் கொள்ளும் நவீன முறைகள்" என்ற தலைப்பில் 3 வசனங்களை எழுதுக**

55. .....................................................................................................

56. .....................................................................................................

57. .....................................................................................................

**(10). கீழே உள்ள பந்தியை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக**

நாம் வாழும் பூமியானது சூரியனைச் சுற்றி வலம் வருகின்றது. இவ்வாறு பூமி சுற்றி வருகின்ற போது உலகின் ஒவ்வொரு நாட்டிற்கும் ஒவ்வொரு விதமாக சூரியஒளி கிடைக்கும் ஒளியின் அளவிற்கிணங்க அவ்வவ் நாடுகளில் காணப்படும் தாவரங்கள் விலங்குகள் என்பன காணப்படும் அத்துடன் காலநிலைகளும் நாட்டிற்கு நாடு வித்தியாசப்படுகின்றன. இதற்கிணங்க உலகில் நான்கு வகையான காலநிலைகள் காணப்படுகின்றன. எமது நாட்டிலும் சில காலங்களில் பனி உறையும் இடங்களும் உண்டு

# பழைய முறிகண்டியில் மணல் அகழ்வு அழிவுகள் ஏற்படுவதாக மக்கள் குற்றச்சாட்டு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பழைய முறிகண்டிக் கிராமத்தில் நடைபெறும் பெரும் எடுப்பிலான மணல் அகழ்வினால் தமது கிராமம் பெரும் அழிவுகளை எதிர்கொண்டுள்ளதாக கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஐந்தாண்டுகளாக பழைய முறிகண்டி ஆறு மற்றும் பழைய முறிகண்டிக் குளத்தின் பின்பகுதிகளில் பெரும் எடுப்பில் மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது.

நாள்தோறும் 20 இற்கு மேற்பட்ட டிப்பர்களில் இக்கிராமத்திலிருந்து மணல் கொண்டு செல்லப்படுகின்றது.

இதன் காரணமாக பழைய முறிகண்டிக் கிராமத்திற்கான வீதி பெரும் குன்றும்குழியுமாக மாறியிருப்பதன் காரணமாக போக்குவரத்துச் செய்வதில் மக்கள் பெரும் இடர்களை எதிர்கொண்டுள்ளனர். துணுக்காய் பிரதேச செயலர் மற்றும் மாவட்டச் செயலர் ஆகியோருக்கு இக்கிராம மக்கள் மணல் அகழ்வு தொடர்பாக மனு கையளித்திருந்தனர்.

அத்துடன் துணுக்காய் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களிலும் இக்கிராமத்தின் மணல் அகழ்வு தொடர்பாக குரல் எழுப்பப்பட்ட போதிலும் எந்தவிதமான பயன்களும் ஏற்படவில்லை.

40 வரையான குடும்பங்கள் வாழும் இக்கிராமத்தில் நடைபெறும் மணல் அகழ்வு தொடர்பாக வடமாகாண சபை தகுந்த நடவடிக்கையெடுக்கவேண்டுமெனவும் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (160)

# மாங்குளத்தில் நூலகம் இன்மையால் சிரமத்தை எதிர்கொள்ளும் மக்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாங்குளத்தில் நூலக வசதியின்மையால் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் நூல்களை பெறுவதில் இடர்களை எதிர்கொண்டுள்ளனர். வடமாகாணத்தின் மிக முக்கிய நகரமான மாங்குளத்தில் பெருமளவான குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன.

துணுக்காய் வலயக்கல்விப் பணிமனை, மாங்குளம் மகா வித்தியாலயம் உட்பட பல முக்கியமான திணைக்களங்கள் மாங்குளத்தில் இயங்கிவரும் நிலையில் நூலகம் இல்லாமை பெருங்குறையாகவுள்ளது. மாணவர்கள் தங்களுடைய கற்றலுக்கான நூல்களைப் பெறுவதில் இடர்களை எதிர்கொண்டுள்ளனர்.

மாங்குளத்தில் நூலகமொன்று இயங்குமானால் அம்பகாமம், கரிப்பட்டமுறிப்பு, ஒலுமடு, மன்னகுளம், பனிக்கங்குளம், வன்னிவேளாங்குளம் எனப் பல கிராமங்களின் மக்களும் மாணவர்களும் பயன்பெறுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (160)

# வைப்புச் செய்த பணத்தை மீள வழங்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வரணி வடக்கு தம்பான் பகுதியில் தொண்டு நிறுவனம் ஒன்றினால் சுமார் ஒரு இலட்சம் ரூபா வழங்கப்பட்டு தற்காப்பு வளர்ச்சிக்கழகம் ஒன்று கடந்த காலங்களில் வளர்ச்சிப் பாதையில் முன்னேறிய நிலையில் நாட்டில் ஏற்பட்டபோர் காரணமாக இயங்காமல் தடைப்பட்டது.

இக்கழகத்தில் தலைவர், செயலாளர், பொருளாளர் தெரிவு செய்யப்பட்ட நிலையில் மக்கள் கடனடிப்படையில் பணம் பெற்று சேமிப்பும் செய்துள்ளனர்.

அதற்கான ஆதாரமாக மக்களிடம் தற்போதும் சேமிப்பு புத்தகங்கள் கைவசம் உள்ளன.

மேலும் கடனடிப்படையில் பணம் எடுத்தவர்கள் தற்போது எந்தவித அக்கறையும் இன்றி செயற்படுகின்றனர். தற்போது கழகத்தில் பணத்தை வைப்பு செய்தவர்கள் கழகம் செயற்படாததால் தமது பணத்தை மீள எடுக்க முடியாத நிலையில் உள்ளனர்.

எனவே உரிய கழகத்தினர் பணச் சேகரிப்பு செய்தவர்களின் பணத்தை மீள வழங்க வேண்டுமென பாதிக்கப்பட்ட தரப்பினர் தெரிவித்துள்ளனர். (150)

## வாழ்க வளமுடன்



பெயர் : அஸ்பான்
முகவரி: காதி அபூபக்கர் வீதி, யாழ்ப்பாணம்.

அகவை 4 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

உங்களது மழலைச் செல்வங்கள் 10 வயதுக்கு உட்பட்ட வராயின் அவர்களின் பிறந்த நாளை வெளியிட தினமுரசு பத்திரிகையில் வெளிவரும் கீழ்க்காணும் கூப்பனை நிரப்பி புகைப்படத்தையும் அனுப்பி வையுங்கள்.

சிறாரின் பெயர் :- ..............................

முகவரி :- ..............................

பிறந்த ஆண்டு :- ..............................

..............................
பெற்றோர் கையொப்பம்

# சுகாதாரமற்ற நிலையிலுள்ள காணியை சுத்தப்படுத்தித் தருமாறு மக்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி தொண்டைமான் நகர் A-9 பிரதான வீதியில் கிராம அலுவலருக்குச் சொந்தமான காணி சுகாதாரமற்ற நிலையில் உள்ளதுடன் நீர் தேங்கிக் காணப்படுவதாகவும் இதனால் நோய் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேலும் மழைகாலங்களில் வெள்ளநீர் தேங்கி நிற்பது போல் கோடை காலங்களிலும் அவ்வாறே நீர் நிற்பதால் அந்தக் காணி சேறும் சகதியுமாகக் காணப்படுவதுடன் இதனால் மலேரியா, வயிற்றோட்டம், டெங்கு மற்றும் பல நோய்கள் ஏற்படக்கூடிய அபாய நிலை காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

அதுமட்டுமன்றி இக் காணி கிராம அலுவலருக்குச் சொந்தமானதாக இருந்த போதிலும் இக்காணியை துப்புரவாக்கி நோயத்தொற்றை இல்லொழிக்க முன்... என கேள்வி எழுப்... ன.

இது தொடர்பில் பிரதேச செயலருக்கு தெரிவித்துள்ள போதிலும் இது தொடர்பில் கருத்திற் கொள்ளாதது ஏன் என கேள்வியெழுப்பும் மக்கள் இதற்கான தீர்வினை சுகாதாரப் பிரிவு உடன் தலையிட்டு வழங்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (77)

# காந்திசேவா சங்கத்தின் நிறுவுனர் வேலாயுதபிள்ளை

**அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் ஸ்தாபகரும் உருத்திரபுரம் காந்தி நிலையத்தின் நிறுவுனருமான காந்தி வேலாயுதபிள்ளையின் 22 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**



அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் ஸ்தாபகரும் கிளிநொச்சி உருத்திரபுரம் காந்தி நிலையத்தின் நிறுவுநருமான சி.க.வேலாயுதபிள்ளை 1922 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 31 ஆம் திகதி நீர்வேலியில் பிறந்தார். தனது பாடசாலைக் காலத்திலிருந்தே சமய, சமூக ஈடுபாடு மிக்கவராக அவர் விளங்கினார். காந்தியக் கொள்கைகள் இவர் வாழ்வில் அதிக தாக்கத்தைச் செலுத்தியமையால் காந்திய சர்வோதய வேலைத்திட்டங்களின் பால் இவரது கவனம் குவிந்தது. காந்திசேவா சங்கம் என்ற ஒரு அமைப்பை அகில இலங்கை ரீதியாக உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் 1948 - 49 களில் இவரின் மனதில் உருவானபோது கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் அப்போது ஆசிரியப் பணியாற்றிக்கொண்டிருந்த காந்தி ஆசிரியர் என எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் பொ.கந்தையா மற்றும் காந்திய அன்பர்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் இவருக்குக் கிடைத்திருந்தது. காந்திய அலை அப்போது யாழ்ப்பாணத்தில் அடித்துக் கொண்டிருந்த காரணத்தால் பல பெரியோர்கள் காந்தியக்கொள்கைகளால் ஈர்க்கப்பட்டிருந்தனர்.

புகழ்பெற்ற காந்தியவாதி ச.ஹன்டி பேரின்பநாயகம் தலைமையில் அகில இலங்கை காந்திசேவா சங்கம் 1949 ஆம் ஆண்டு தொடக்கி வைக்கப்பட்டது.

சங்கம் சமூக முன்னேற்றம் சார்ந்த செயற்றிட்டங்களை முன்னெடுத்தபோது சங்கத்தின் முழுநேர ஊழியராக வேலாயுதபிள்ளை தனது பணியை ஆற்றியிருந்தார்.

44 வருடங்கள் அவரின் உழைப்பு காந்திசேவா சங்கத்திற்குக் கிடைத்தது. காந்திஜியின் நிர்மாணத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதையே வேலாயுதபிள்ளை தனது மூச்சாகக் கொண்டிருந்தார்.

சங்கம் உருத்திரபுரத்தில் காந்தி நிலையத்தையும், தர்மபுரத்தில் கஸ்தூரிபாய் இல்லத்தில் மாதரில்லம், அக்கராயன் 300 ஏக்கர் பரப்பில் விவசாயம், கைத்தொழில், மாடு வளர்ப்பு எனத் திட்டங்கள் இருந்தன.

இவை எல்லாவற்றுக்கும் மேற்பார்வையாளராக வேலாயுதபிள்ளை இருந்தார். காந்திசேவா சங்கத்தின் கிளைகள் இலங்கையின் பல இடங்களிலும் நிறுவப்பட இவரே காரணகர்த்தவாக விளங்கினார்.

காந்தீயக் கொள்கைகளின் அடிப்படையில் மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு, சமபோசனம், ஆலயப்பிரவேசம் எனப்பல வேலைகள் தொடங்குவதற்கு வேலாயுதபிள்ளையும் காத்தீயத் தொண்டர்களும் அக்காலத்தில் பெரிதும் பாடுபட்டனர்.

காந்தியைப் போன்று எளியவராக இருந்த வேலாயுதபிள்ளை ஒரு பழுப்பு நிற கதர் வேட்டியும் திறந்த மேனியின் தோளில் பரந்து தொங்கிக் கொண்டிருககும் சால்வையும் அணிந்தவராக இருநதார். தனது வாழ்வில் பிரமச்சரியத்தைக் கடைப்பிடித்தார். சாது போன்று வாழ்ந்த அவர் சமூக நலனில் பெரிதும் அக்கறை காட்டினார். எல்லா சமூக சம்பந்தமான நிகழ்வுகளிலும் கலந்துகொண்டார். அவருடைய சேவை வடக்கில் மட்டுமன்றி தெற்கிலுள்ள சர்வோதயாக் கிராமங்களிலும் இருந்தது. சர்வோதய இயக்கதலைவர் கலாநிதி ஏ.ரி.ஆரியரட்ணாவுடன் நெருங்கிய நட்பைப் பேணி வந்தார். இது கொள்கை ரீதியான நட்பாக இருந்தது.

மகாத்மா காந்தியடிகளின் காலம் தொடக்கம் இந்தியாவில் நடைபெற்ற எல்லா சர்வோதய சம்மேளனங்களிலும் கலந்துகொண்ட வேலாய்தபிள்ளை 1953 ஆம் ஆண்டு நீர்வேலியிலும் 1955 ஆம் ஆண்டு பண்ணாகத்திலும் இலங்கையின் முதலாவது மற்றும் இரண்டாவது சர்வோதய மாநாடுகளை வெற்றிகரமாக நடத்தி முடித்தார்.

வன்னிப் பிரதேசத்தில் பனை மரங்களை நட்டு பனையின் பயனை மக்கள் உணர உதவினார். கற்பகதரு நாயகன் மில்க்வைற் கனகராசா அவர்களுடன் நெருக்கமான தொடர்புகளைப் பேணி மில்க்வைற் நிறுவன செயற்பாடுகள் வ்ன்னிப் பகுதியில் செயற்படுத்தப்படுவதற்கு தன்னாலான உதவிகளை வழங்கியும் வந்தார்.

இதனால் மில்க்வைற் நிறுவனம் வேலாயுதபிள்ளை அவர்களின் மறைவின் பின் அவரை உருவாக்கிய சைவ வித்தியாவிருத்திச் சங்க திருநெல்வேலி கலாசாலைச் சூழலில் சிறுவர் விடுதியில் அவர் ஞாபகார்த்த தினத்திற்கு பிள்ளைகளுக்கு மதிய உணவு வழங்கி வந்தது.

"காந்தீயம்" என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்ட வேலாயுதபிள்ளை இலங்கையில் மட்டுமன்றி இந்தியாவிலும் பலராலும் அறியப்பட்ட காந்தீயவாதியாக விளங்கினார். அவர் அரை நூற்றாண்டு காலம் ஆற்றிய சமூகப் பணிகளை உருத்திரபுரமும், அக்கராயனும், தர்மபுரமும் நன்கறியும். அவருடன் இணைந்து பணியாற்றி அவர் பற்றி அறிந்து வைத்துள்ள மூத்தவர்கள் வரிசையில் இன்று வாழ்ந்து கொண்டிருக்கக் கூடிய காந்தி வாத்தியார் பொ.கந்தையா (திருகோணமலை), அ.தாமோதரம்பிள்ளை, சோ.க.தம்பிப்பிள்ளை, செல்வராணி சோமசேகரம்பிள்ளை, ஞா.அந்தோனிப்பிள்ளை (வன்னேரி), கா.நாகலிங்கம் (உருத்திரபுரம்), கணேஷானந்த மகாதேவ சுவாமிகள் (கிளிநொச்சி) போன்றோர் குறிப்பிடத்தக்கோர் ஆவர்.

எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி எம்.ஏ
பொதுச்செயலாளர்
அகில இலங்கை காந்தி சேவா சங்கம்

# ஆந்திரா அரசை எதிர்த்து போராட்டம்

# திருமாவளவன் உட்பட 500பேர் கைது



20 தமிழர்களை படுகொலை செய்த ஆந்திர அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்து சென்னையில் போராட்டம் நடத்திய விடுதலை சிறுத்தைகள் கட்சித்தலைவர் திருமாவளவன் கைது. செய்யப்பட்டுள்ளார். ஆந்திராவின் திருபபதி வனப்பகுதியில் கடந்த 7ஆம் திகதி செம்மரங்களை வெட்டி கடத்தியதாக கூறி, 20 தமிழக தொழிலாளர்களை ஆந்திரா பொலிஸார் சுட்டுக் கொன்றனர்.

இதற்கு எதிர்ப்புத்தெரிவித்து தமிழகம் முழுவதும் நேற்று 3ஆவது நாளாக போராட்டம் நடை பெற்றது. இந்நிலையில் ஆந்திர அரசை கலைக்க வலியுறுத்தி, விடுதலை சிறுத்தைகள் கட்சித்தலைவர் திரு மாவளவன் தலைமையில் போராடடம் நடைபெற்றது.

இந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட 500இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## சவூதி போர் விமானங்களுக்கு எரிபொருள் நிரப்பும் அமெரிக்கா



ஏமனில் நடைபெற்று வரும் உள்நாட்டுப் போர் தீவிரம் அடைந்துள்ளது. அரசுக்கு எதிராக போரிடும் ஹவுத்தி கிளர்ச்சிப்படையை ஒடுக்க சவுதி அரேபியாவும் அதன் நட்பு நாடுகளும் குண்டு வீச்சு நடத்தி வருகின்றன. இதில் கிளர்ச்சி படைகள் மீது தொடர்ச்சியாக குண்டு விசி தாக்குதல் நடத்திவரும் விமானங்களுக்கு செவ்வாய்க்கிழமை முதல் வானிலேயே எரிபொருள்களை அமெரிக்க விமானங்கள் நிரப்பிவருகின்றன.

அமெரிக்காவின் கே-135 ஸ்டார்டோ டேங்கர் என்ற விமானம் சவுதியின் எப்-15 மற்றும் எப்-16 என்ற ஐக்கிய அரபு எமிரேட்ஸ் விமானத்திற்கும் வானிலேயே எரிபொருள் நிரப்பியதாக சவூதியின் இராணுவ உயர் அதிகாரி தெரிவித்துள்ளார். மேலும் 12 பேரை கொண்ட அமெரிக்க இராணுவ குழு ஒன்று, 2 தளபதிகள் தலைமையில், சவூதி அரேபியாவுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டு வருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

## இத்தாலியில் துப்பாக்கிச் சூடு நீதிபதி உட்பட நால்வர் பலி

இத்தாலி மிலான் நகரில் அமைந்துள்ள நீதி அரண்மணை என்று அழைக்கப்படும் நீதிமன்றத்தில் இன்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் நீதிபதி உட்பட நால்வர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டை நடத்திய சந்தேக நபர் அந்த நீதிமன்ற வளாகத்தில் பதுங்கி இருந்ததாகவும் பின்னர் அங்கிருந்து தப்பியோடியதாகவும் இத்தாலிய உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தச்சம்பவத்தின்போது நீதிமன்ற வளாகத்திலிருந்த நீதிபதிகள் வழக்கறிஞர்கள் மற்றும் ஊழியர்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகளின் முகாம்களின் மீது தாக்குதல்



சிரியாவில் முதல் முறையாக கனடிய போர் விமானங்கள் நேற்று முன் தினம் குண்டுவீச்சை நடாத்தியுள்ளனர்.


ஈராக் மற்றும் சிரியாவின் பல்வேறு நகரங்களை கைப்பற்றி தனி இஸ்லாமிய தேசத்தை உருவாக்கிய ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பிற்கு எதிராக அமெரிக்கா பிரான்ஸ்,ஜேர்மனி, பிரித்தானியா உள்ளிட்ட நாடுகள் தாக்குதல் நடாத்தி வருகின்றன.

இந்நிலையில் நேற்று முன்தினம் சிரியாவின் ரக்கா நகரில் உள்ள ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளின் முகாம்கள் மற்றும் அவர்களின் அணிவகுப்புகளை குறிவைத்து இரண்டு கனடிய போர் விமானங்கள் முதன்முறையாக குண்டுவீச்சை நடத்தியுள்ளன.

அதிநவீன 2-சி.எப்.18- வகை விமானங்களை கொண்டு இந்த தாக்குதல் நடந்ததாக கூறப்படுகிறது.

மேலும் முக்கிய இலக்குகளை குறி வைத்து தாக்குதல் நடந்ததாகவும், இதனால் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளுக்கு கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## சந்தேக நபரை சுட்டுக்கொல்லும் பொலிஸார் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் கரோலினா மக்கள்



அமெரிக்காவின் தென் கரோலினாவில் சந்தேக நபர் ஒருவரை பொலிஸ் அதிகாரி சுட்டுக் கொன்ற காணொளி வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில் அந்தச் சம்பவத்துடன தொடர்புடைய மற்றுமொரு காணொளி வெளியாகியுள்ளது.

முதலாவது காணொளியில் வெள்ளையின பொலிஸ் அதிகாரி குறித்த கறுப்பினத்தைச் சேர்ந்த சந்தேக நபர் தப்பி ஓடுகையில் சுட்டுக் கொன்ற காட்சி பதிவாகியிருந்தது. இந்த நிலையில் தற்போது வெளியாகியுள்ள புதிய காணொளியில், அந்த சம்பவத்திற்கு முன்னர் இடம் பெற்றிருந்தவைகள் பதிவாகியுள்ளன.

இதன்படி சந்தேக நபரை பொலிஸ் அதிகாரி காரில் இருக்கவைத்து வெளியில் செல்வதாகவும். இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி சந்தேக நபர் தப்பியோடியதும் புதிய காணொளியில் காணப்படுகின்றது.

சம்பவத்துடன் தொடர்புடைய ஸ்லகர் என்ற பொலிஸ் அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவருக்கு எதிராக கொலை வழக்கும் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன.

இதேவேளை பொலிஸாரின் இவ்வாறான சம்பவங்கள் அண்மைக்காலமாக இடம்பெற்றுள்ள நிலையில் இவற்றை கண்டித்து நேற்று முன்தினம் கரோலினாவில் மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கடற்பரப்பில் மிதந்தன சடலங்கள் அகதிகளாக இருக்குமென சந்தேகம்

ஹெய்டி நாட்டின் வடபகுதி கடற்பரப்பில் மிதந்து கொண்டிருந்த நிலையில் 17 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. தலைநகர் போர்ட் ஓ பிரின் ஸிலிருந்து 160 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள கடற்கரை நகரான போர்னுக்கு அண் மித்த கடற்பகுதியில் இந்தச் சடலஙகள் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு மீட்கப்பட்ட சடலஙகளில் 11 ஆண்களும், 6 பெண் களும் அடங்குவதாகத் தெரிவிக்கபபட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் அகதிகள் எனவும் சந்தேகிக்கப்படுகிறது.

துர்க்ஸ் மற்றும் கைகோஸ் தீவுகளுக்கு ஆபத்தான படகு பயணத்தை மேற்கொண்டிருந்த நிலையில் இடம்பெற்ற விபத்தில் இவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்திருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

எனினும் இந்த விபத்தில் உயிர்தப்பியவர்கள் உள்ளார்களா? என உறுதிப்படுத்தப்படவில்லை. இந்த நிலையில் ஹெய்டி கடலோர பாதுகாப்பு அதிகாரிகள் குறித்த கடற்பரப்பில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

## தலிபான் அமைப்பினர் தாக்குதல் 10பேர் பலி; 65 பேர் படுகாயம்



ஆப்கானிஸ்தானில் இடம் பெற்றுள்ள தாக்குதல் சம்பவமொன்றில் 10 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், 65 இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளதாக அந்த நாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வட ஆப்கானிஸ்தானிலேயே நேற்று முன்தினம் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. வழக்கறிஞர் அலுவலகத்தினுள் நுழைந்த துப்பாக்கிதாரிகள் இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

இந்த துப்பாக்கிதாரிகள் இராணுவச் சீருடைகளை அணிந்துகொண்டு வந்திருந்தனர். இந்த நிலையில், நான்கு துப்பாக்கிதாரிகள் இந்த அலுவலகத்தினுள் நுழைந்து பாரிய துப்பாக்கிப் பிரயோகங்களையும் குண்டு வெடிப்புக்களையும் மேற்கொண்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தத் தாக்குதல் சம்பவத்தின்போது கொல்லப்பட்டவர்களில் பொலிஸ் தலைமை உத்தியோகஸ்தர் ஒருவர் உட்பட ஐந்து பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் அடங்குகின்றனர். காயமடைந்தவர்களில் 26 அரசாங்க உத்தியோகஸ்தர்களும் அடங்குகின்றனர்.

இந்த தாக்குதலை தாங்களே மேற்கொண்டுள்ளதாக தலிபான் அமைப்பினரின் பேச்சாளர் தெரிவித்துள்ளார் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த அளவு
விளம்பரத்திற்கு
1000/= ரூபா மட்டுமே

# அத்துமீறிய கடற்றொழிலை நிறுத்த நடவடிக்கை தேவை

## ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

அத்துமீறிய வகையில் கடற்றொழிலில் ஈடுபட்டுவரும் தென்பகுதி கடற்றொழிலாளர்களினால் வடபகுதி கடற்றொழிலாளர்களது வாழ்வாதாரங்கள் பாதிக்கப்பட்டு வருகின்றன. எனவே இதனைத் தடுத்து நிறுத்தி வடபகுதி கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரங்களை பாதுகாக்க உடன் நடவடிக்கை தேவை என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள செயலாளர் நாயகம், எமது கடற்றொழிலாளர்களது வாழ்வாதாரங்களைப் பாதிக்கும் வகையிலும் அவர்களது தொழில் உபகரணங்களை அழித்தும் கடல் வளத்தைச் சுரண்டியும் இந்தியக் கடற்றொழிலாளர்களினால் மேற்கொள்ளப்பட்டுவரும் அத்துமீறியதும் தடை செய்யப்பட்டதுமான செயற்பாடுகளினால் எமது கடற்றொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், வடக்கில் குறிப்பாக வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளம் பகுதியில் தென்னிலங்கை கடற்றொழிலாளர்கள் அத்துமீறி தொழில்களில் ஈடுபட்டு வருவதாக அப்பகுதி கடற்றொழிலாளர்களிடமிருந்து எனக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இவ்வாறான அத்துமீறிய செயற்பாடுகளுக்கு பொலிஸாரும் பாதுகாப்புத் தரப்பினரும் துணை போவதாகவும் இதனைத் தட்டிக் கேட்கும்போது இன ரீதியிலான முரண்பாடுகளைத் தோற்றுவிக்கக்கூடிய செயற்பாடுகள் அங்கு முன்னெடுக்கப்படுவதாகவும் அங்கு வாழ்ந்துவரும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது நாட்டில் சுமுகமானதொரு சூழல் ஏற்பட்டுள்ள நிலையில் சுய லாபங்களுக்காக இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவது தவிர்க்கப்பட வேண்டியதாகும்.

அத்துடன் கடந்த காலங்களில் பல்வேறு பாதிப்புகளுக்கு முகங்கொடுத்துள்ள எமது கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரங்கள் பாதுகாக்கப்பட்டு, உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதில் நாம் அக்கறையுடன் செயற்பட்டுவரும் நிலையில், அத்துமீறியதும் தடை செய்யப்பட்டதுமான கடற்றொழில் செயற்பாடுகளுக்கு இடமளிக்க முடியாது.

எனவே இவ்விடயம் தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

# சுகாதாரத்துறை அபிவிருத்திக்கு இந்திய உதவி தொடர்ந்து கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

சுகாதாரத் துறையின் அபிவிருத்தியில் இந்தியா மேலும் பல உதவிகளைத் தொடர்ந்தும் மேற்கொள்ளும் என யாழ். இந்திய துணைத்தூதுவர் ஏ.நடராஜன் தெரிவித்துள்ளார்.

யூபிலி மகப்பேற்று நிலையம் ஐ.ஓ.சி. பெற்றோலிய நிறுவனத்தினால் புனரமைப்பு செய்யப்பட்டு நேற்று மக்கள் பாவனைக்காக திறந்துவைக்கும் வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய அரசினால் சுகாதாரத் துறைக்கு பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த வகையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு பல மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டன. அதேபோல் வடமாகாணத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் உள்ள வைத்தியசாலைகளுக்கு மருத்துவ அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு பல மருத்துவ உபகரணங்களை வழங்கியிருக்கிறோம்.

வவுனியா பொது வைத்தியசாலையின் அபிவிருத்திக்காக புதிய கட்டடத் தொகுதி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மிக விரைவில் அக்கட்டடம் திறந்துவைக்கப்படவுள்ளது.

இதேபோல் இந்திய அரசு வடபகுதி மக்களின் சுகாதாரத் தேவைக்காக பல்வேறு உதவிகளை மேலும் மேற்கொள்ளும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# நிறைவேற்று அதிகாரம் நீக்கப்படாவிட்டால் வீதியில் இறங்கி போராட்டம்

## மாதுலுவாவே சோபித தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தின் 100 நாட்கள் நிறைவடைவதற்கு சொற்ப நாட்களே உள்ளதாகவும் அதற்கு முன்னர் நிறைவேற்று அதிகாரம் குறைக்கப்படவில்லை என்றால் அரசாங்கத்திற்கு எதிராக பாதைக்கு இறங்க ஆயத்தமாக உள்ளதாக கோட்டை மாதுலுவாவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் குறைப்பதாக ஒப்புக்கொண்டு 49 பேர் கையெழுத்திட்டுள்ளனர். அதன் பின்னரே தேர்தல் இடம்பெறும்.

100 நாட்களில் 90 நாட்கள் கடந்து விட்டன. நிறைவேற்று அதிகாரம் முழுமையாக குறைக்காவிட்டால், அதன் ஒரு பகுதி அல்லது அரை பகுதியாவது குறைக்கப்பட வேண்டும்.

நிறைவேற்று அதிகாரத்தை குறைத்து, நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் வழங்கினால் பிரதமர் ரணில் விக்ரமசிங்க அதிகாரத்திற்கு வருவார் என சிலர் கூறுகிறார்கள்.

அப்படி என்றால் அதிகாரம் அவருக்கா வழங்கப்படும். ஜே.ஆர் அவருக்கு ஏற்ற வகையிலே அரசியலமைப்பை அமைத்துக் கொண்டார். அதனை இம்முறையும் நடைமுறைப்படுத்த வேண்டுமா? இம்முறை மாற்றம் வேண்டும்.

ஜனாதிபதி பொம்மை போன்று செயற்படுவார் என்று சிலர் கூறுகிறார்கள். கடவுளே அப்படி என்றால் அவருக்கு எதனை செய்ய வேண்டுமெனக்கூறி மக்கள் வாக்களித்தார்கள்.

இறுதியாக, நிறைவேற்று அதிகாரம் ஒழிக்கப்படாவிட்டால் வீதிக்கு இறங்கவும் ஆயத்தமென அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# எதிர்க் கட்சித் தலைவர் பதவி எமக்கு வழங்க வேண்டும்

## சம்பந்தன் கோரிக்கை

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் தற்போது சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை தமக்கு வழங்கவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரியுள்ளது.

இது தொடர்பில் கட்சியின் தலைவர் ஆர்.சம்பந்தன் நேற்று சபாநாயகரிடம் கோரிக்கை கடிதம் ஒன்றை கையளித்துள்ளார்.

தேசிய அரசாங்கத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினரும் இணைந்த பின்னர் ஏற்கனவே எதிர்க்கட்சித் தலைவராக பதவி வகிக்கும் நிமால் சிறிபால டி சில்வாவுக்கு அதனை வகிக்க முடியாது என்ற நிலை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தனவை எதிர்க்கட்சித் தலைவராக்குவதற்கான கையொப்பங்களை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் திரட்டி வருகின்றனர்.

இந்தநிலையிலேயே சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைத் தமது கட்சிக்கு வழங்க வேண்டும் என்று சபாநாயகரிடம் கோரியுள்ளார்.

இந்தக் கடிதத்தில் கட்சியின் செயலாளர் துரைராஜசிங்கம் மற்றும் தலைவர் சம்பந்தன் ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

## வலி. வடக்கு...

தெரிவித்துள்ளார்.

இதற்கமைய வறுத்தலைவிளான் பிரிவுக்கு செல்லும் மக்கள் தமது காணிகளைப் பார்வையிட தெல்லிப்பளை வைத்தியசாலை வீதி வழியாகவும், பலாலி தெற்கு கிராம அலுவலர் பிரிவுக்கு செல்லும் மக்கள் தமது காணிகளை பார்வையிட அச்சுவேலி தம்பாட்டி வழியாகவும் ஏனைய கிராம அலுவலர் பிரிவுகளுக்கு செல்லும் மக்கள் தெல்லிப்பளை, வீமன்காமம் புகையிரத வீதிவழியாகவும் சென்று தமது காணிகளை பார்வையிட முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் மீளக்குடியேறும் மக்கள் தங்களுடைய காணிகளை பார்வையிட்டு உறுதிப்படுத்திய பின்னர் அந்தந்தப் பிரிவு கிராம அலுவலர்களிடம் தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் தெல்லிப்பளைப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (25)

## நெல்லியடியில்...

சேர்ந்தவரும் தற்போது கோப்பாயில் வசித்துவருபவருமான இன்பன் புஸ்பகரன் (வயது - 36) என்பவரே உயிரிழந்தவராவார். இவர் தனியார் மினிபஸ் உரிமையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

அண்ணாசிலையடி, கரணவாயைச் சேர்ந்தவரும், யாழ். நகரப் பகுதியில் காப்புறுதி கூட்டுத்தாபனமொன்றில் பணியாற்றுபவருமான பொன்னம்பலம் பிரதாபலன் (வயது - 24) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

யாழிலிருந்து நெல்லியடி நோக்கியும், நெல்லியடியிலிருந்து யாழ். நோக்கியும் இவர்கள் வந்த வேளையிலேயே நேருக்கு நேர் மோதி இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

காயமடைந்த இருவரும் மந்திகை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையிலேயே இன்பன் புஸ்பகரன் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (18)

## குளத்தில்....

அத்தோடு குறித்த சடலத்தை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நேரில் சென்று பார்வையிட்ட பின்னர் மீட்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு சடலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

புதுமுறிப்பு குளத்தில் இவ்வருட ஆரம்பத்திலும் ஒருவர் மூழ்கி இறந்தமை குறிப்பிடத்தக்கது. (29)

## மத்திய...:

தெரிவித்தார். கடந்த ஜனவரி 8 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலுடன் வடக்கு மாகாணமானது விடுதலையடைந்தது

எமது அரசாங்கத்தின் தோற்றத்தின் பின்னரே வடக்கில் இத்தனை வருடங்களாக இராணுவ கையகப்படுத்தலில் இருந்து தமிழ் மக்களின் காணிகள் விடுவிக்கப்பட்டு தமிழ் மக்களிடையே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இராணுவ முகாம்களில் இருந்து பொதுமக்களின் காணிகளை அவர்களிடமேயே ஒப்படைத்திருக்கின்றோம்.

அதுமட்டுமன்றி அரசாங்கத்தினால் ஒதுக்கீடு செய்யப்படுகின்ற அனைத்து நிவாரணங்களிலும் தமிழ் பேசும் வடக்கு மக்களையும் உள்ளடக்கியே மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையினையும் மறந்துவிடக்கூடாது.

இவ்வாறான புரிதலை தேசிய அரசு கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் வசைபாடுதலை முதலமைச்சர் விக்னேஸ்வரன் நிறுத்த வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளார்.

## ஐ.நா. விசேட...

பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையில் உயர்மட்ட பிரமுகர்கள் இருவர் கொழும்புக்கு அண்மையில் விஜயம் செய்திருந்தனர்.

இவர்களது விஜயம் அடுத்தடுத்து இடம்பெற்றமையினால் ஆட்கடத்தல் மற்றும் காணாமற்போனோர் தொடர்பான விவகாரங்களைக் கையாளும் ஐ.நா. பிரதிநிதிகளின் இந்த விஜயம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

எது எவ்வாறு இருப்பினும் யூன் மாத நடுப்பகுதியில் இவர்கள் கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளார்கள் என ஐ.நா. தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஜனாதிபதி...

ஊடகவியலாளர் மாநாடு நேற்று கொழும்பு கிருலப்பனையிலுள்ள அதன் தலைமையகத்தில் இடம்பெற்றது.

இதன்போது உரையாற்றுகையிலேயே அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டில் உயர்பதவியிலுள்ளோருக்கு முதுகெலும்பு அவசியம் எனக் குறிப்பிட்ட அவர், மைத்திரிபால சிறிசேன மேடையில் ஏறிய கூட்டத்தில் பொதுமக்கள் கூக்குரலிட்டுள்ளனர்.

இதற்கு முன்னர் ஜனாதிபதியாக இலங்கையில் பதவி வகித்தவர்கள் எவருக்கும் இவ்வாறு நடந்ததல்ல எனக் குறிப்பிட்ட அவர், அரசு மீது இருக்கும் விரக்தியின் காரணமாகவே மைத்திரிபால சிறிசேன ஏறிய கூட்டத்திற்கு பொதுமக்கள் இவ்வாறு கூக்குரலிட்டுள்ளதாக தெரிவித்தார்.

100 நாள் வேலை திட்டம் நாட்டிற்கு அச்சுறுத்தலாகவே அமைந்துள்ளதாகவும் புலம்பெயர் அமைப்பு, பிரபாகரனின் கிளைகளை உருவாக்குவதற்கு புதிய அரசாங்கம் வழிவகுத்து வருவதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அமெரிக்க உள்ளிட்ட நாடுகள் இதற்கு உதவி செய்து வருகின்றதாகவும் இந்த சக்திகளை அழிப்பதற்கு நாட்டு மக்கள் அணிதிரள வேண்டும் எனவும் கலகொட அத்தே ஞானசார தேரர் வலியுறுத்தியுள்ளார்.

100 நாள் வேலைத்திட்டம் முடிவடைந்த பின்னர், மைத்திரிபால சிறிசேன கௌரவமான முறையில் ஜனாதிபதி பதவியை இராஜினாமா செய்துவிட்டு வீட்டுக்குச் செல்ல வேண்டும். இல்லாவிடின் தொடர்ந்து அழுத்தங்களைப் பிரயோகப்போம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கஞ்சா...

பட்ட 87 கிலோ 336 கிராம் நிறையுடைய கஞ்சாவை கைப்பற்றியதுடன், இதில் பயணம் செய்த குருநகர் மற்றும் நெடுந்தீவைச் சேர்ந்த இருவரைக் கைதுசெய்து நேற்று இரவு நெடுந்தீவுப் பொலிஸாரிடம் ஒப்படைத்ததையடுத்து நேற்று இவர்களை ஊர்காவற்றுறை பொலிஸார் நீதிமன்றில் ஆஜர்செய்ய ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர். (இ)

# தேர்தல் சட்டத்தில் திருத்தம் நிறைவேற்று அதிகாரம் குறைப்பு

## இரண்டும் சமகாலத்தில் வேண்டும்; ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விடாப்பிடி

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைப்பது மற்றும் தேர்தல் முறையில் சீர்த்திருத்தங்களை செய்வது ஆகியன சம்பந்தமான 19 மற்றும் 20 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டங்கள் ஒரே நேரத்தில் நிறைவேற்றப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு தீர்மானித்துள்ளதாக முன்னாள் அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

இரண்டு திருத்தங்களையும் ஒரே நேரத்தில் கொண்டு வர வேண்டும் என்றே நாங்கள் தீர்மானித்தோம். அப்போது நாங்கள் ஆதரவு வழங்குவோம் என்று கூறினோம் என்றும் வெல்கம குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் நிறைவேற்று



அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைக்கும 19ஆவது திருத்தச் சட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்படும் எனவும் அது நிறைவேற்றப்பட்ட பின்னர் நாடாளுமன்றம் கலைக்கப்படும் எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நேற்று பொலனநறுவையில் தெரிவித்திருந்தார்.

நாடாளுமன்றம் கலைக்கப்படுமா, இல்லையா என்பது தனக்கு தெரியாது எனவும் உடனடியாக நாடாளுமன்றம் கலைக்கப்படாது என்றே தனக்கு தோன்றுகிறது எனவும் தெரிவித்துள்ள குமார வெல்கம, கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் தீர்மானத்திற்கு ஜனாதிபதி இணக்கம் வெளியிட்டதாகவும் கூறியுள்ளார். தேர்தல் முறையையும் 19 ஆவது திருத்தச் சட்டத்தையும் ஒன்றாக கொண்டு வர ஜனாதிபதி இணங்கியுள்ளார்.

# ராஜஸ்தான் றோயல்ஸிடம் வீழ்ந்தது கிங்ஸ்லெவன் பஞ்சாப்

போல்க்னரின் சகல துறை ஆட்டத்தின் மூலம் ராஜஸ்தான் றோயல்ஸ் 26 ஓட்டங்களால் கிங்ஸ்லெவன் பஞ்சாப் அணியை தோற்கடித்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கிங்ஸ்லெவன் பஞ்சாப் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் முதலிரு விக்கெட்டுக்களும் அணி 14 ஓட்டங்களை பெற்றிருந்த வேளை சரிக்கப்பட்டது. இதனையடுத்து சிமித்துடன் நாயர் இணைந்த போதிலும் அவரும் அதன் பின் சிமித்தும் (33), பின்னியும் வெளியேறினர். கோடாவுடன் இணைந்த போல்க்னர் அதிரடியான ஆட்டத்தினை வெளிப்படுத்தினார். எனினும் கோடா 15 பந்துகளில் 30 ஓட்டங்களைப் பெற்ற வேளை ஆட்டமிழந்தார். அதிரடியில் கலக்கிய போல்க்னர் 46 ஓட்டங்களைப்பெற்றார். இறுதியில் ராஜஸ்தான் றோயல்ஸ் 7 விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் அனுறித்சிங் 3, ஜோன்சன் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

163 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கிங்ஸ்லெவன் பஞ்சாப்பிற்கு ஆரம்பமே அதிர்ச்சி காத்திருந்தது. சேவாக் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தார் அடுத்து வந்த வீரர்களும் சீரான இடைவெளியில் ஆட்டமிழக்க அவ்வணி 20 ஓவர் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 136 ஓட்டங்களை மட்டும் எடுத்தது. அவ்வணி சார்பாக முரளிவிஜய் 37, பட்டேல் 24, மில்லர் 23, பெய்லி 24 ஓட்டங்களைப் பெற்றார் பந்துவீச்சில் போல்க்னர் 3, சௌத்தி 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக போல்க்னர் தெரிவானார்.

# இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் இப்போது ஏற்படாவிட்டால் 40 வருடங்கள் சென்றாலும் முடியாது

## தென்னாபிரிக்க நிபுணர் சொல்கிறார்



இலங்கையில் தற்போது நல்லிணக்கம் ஏற்படுத்தப்படாவிட்டால் இன்னும் 40 வருடங்கள் சென்றாலும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது என்று தென்னாபிரிக்காவில் நிறவெறிக்கு எதிராக போராடிய ஐவர் எச்.ஜென்கின்ஸ் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவில் நிறவெறிக் கொள்கை கொண்ட 10 தலைவர்கள் நீக்கப்பட்டமையை அடுத்தே அங்கு சமாதானம் நிலைபெற்றது. அதேபோன்று இலங்கையிலும் 2015 ஜனவரி 8 ஆம் திகதிக்கு பின்னர் இயல்பு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனைத் தவறவிடக்கூடாது.

தென்னாபிரிக்காவின் உண்மையை கண்டறியும் குழுவே இலங்கையிலும் அமைக்கப்பட வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும். அந்த அனுபவங்களை கொண்டு இலங்கையின் பிரச்சினையை தீர்ப்பதற்கான பொறிமுறையே அவசியமானது.

போர் நடக்கலாம். பலர் கொல்லப்படலாம். எனினும் இறுதியில் பேச்சுவார்த்தை ஒன்றின் மூலமே பிரச்சினைக்கு தீர்வை எட்டமுடியும் என்று தென்னாபிரிக்காவின் தேசியத் தலைவர் நெல்சன் மண்டேலா தெரிவித்திருந்தார். இலங்கையில் சமூகங்களுக்கு இடையிலான சந்தேகங்கள் நீக்கப்படவேண்டும்.

இதற்காக முக்கிய பாத்திரங்களை கொண்டுள்ள ஜாதிக ஹெல உறுமய மற்றும் புலம் பெயர்ந்த தமிழ் அமைப்புக்கள் பேச்சுவார்த்தை ஒன்றுக்கு தயாராக வேண்டும். இதன்போது சந்தேகத்தை தீர்த்து பிரச்சினைக்கான தீர்வை எட்டமுடியும் என ஜென்கின்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

இவர் இலங்கையின் நல்லிணக்கம் தொடர்பில் கடந்த 8 வருடங்களாக ஈடுபாட்டைக் கொண்டிருக்கிறார். அண்மையில் சிங்கப்பூரில் இலங்கை இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் இடம்பெற்ற சந்திப்பு ஒன்றின்போதும் இவரே தென்னாபிரிக்கா சார்பில் பங்கேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரதமர் ரணிலுடன் கூட்டமைப்பினர் சந்திப்பு

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, அரச நியமனங்கள் மற்றும் பொது மக்களின் காணிகளை விடுவித்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளதாக கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த சுதந்திர தினத்தன்று ஒரு சில தமிழ் அரசியல் கைதிகளையாவது விடுதலை செய்திருக்கலாம் என்ற கூட்டமைப்பின் குற்றச்சாட்டடை பிரமதர் ரணில் ஏற்றுக்கொண்டதோடு, அவர்களின் விடுதலை தொடர்பாக தான் உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்துள்ளார்.

இதேவேளை இராணுவத்தின் வசமுள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை தாம் எடுப்பதாகவும் இதன்போது பிரதமர் உறுதியளித்துள்ளார்.

# வலுவடையும் உறவு; பூட்டான் பிரதமருடன் மைத்திரி



கல்வி மற்றும் விவசாய உறவுகளை மேம்படுத்திக்கொள்வதற்கு பூட்டான் பிரதமருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் இடையில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு கெழும்பு வந்துள்ள பூட்டான் பிரதமர் ஷெரின் டோப்கே, மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோருக்கு இடையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பூட்டானுக்கும் இலங்கைக்கும் இடையில் நேரடி விமான சேவையை முன்னெடுப்பது குறித்து இருநாட்டுத் தலைவர்களும் கலந்துரையாடியுள்ளனர். பௌத்த தர்மத்தைப் பின்பற்றுகின்ற பூட்டானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவின் ஊடாக இனங்களுக்கு இடையில் நல்லுறவுகளை ஏற்படுத்துவதற்கு சந்தர்ப்பம் கிடைப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பூட்டான் பிரதமரை சந்தித்தபோது சுட்டிக்காட்டியுள்ளார்.

பூட்டான், சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு வழங்குகின்ற ஒத்துழைப்புக்களுக்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்துள்ளார். இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு இணக்கம் காணப்பட்டதோடு, இருநாட்டு வெளிவிவகார அமைச்சின் செயலாளர்களுக்கு இடையில் ஒப்பந்தமொன்றும் கைச்சாத்திடப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது.

# பிரதமருக்கு அதிக அதிகாரம்; அரசியலமைப்பு சூழ்ச்சி தோல்வி

## சம்பிக்க தெரிவிப்பு

(கொழும்பு)

பிரதமரை நாட்டின் பிரதான நிறைவேற்றாளராக மாற்ற முன்னெடுக்கப்பட்ட அரசியலமைப்பு சூழ்ச்சி தற்போது தோல்வியடைந்துள்ளதாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய நேற்று கொழும்பில் ஒழுங்கு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார். 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் ஊடாகவே இந்த அரசியலமைப்பு சூழ்ச்சி முன்னெடுக்கப்பட்டது.

எனினும் உயர்நீதிமன்றம் வழங்கிய பரிந்துரைகளுக்கு அமைய அரசாங்கத்திற்கு அதில் இருந்த கெடுதியான திருத்தங்களை நீக்க நேர்ந்துள்ளது என சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை தனக்கு எதிரான முறைப்பாடு, அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் அரசியல் பழிவாங்கல் என நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளமை குறித்தும் சம்பிக்க ரணவக்க கருத்து வெளியிட்டுள்ளார்.

எவருடனும் தனக்கு அரசியல ரீதியான கோபதாபங்கள் இல்லை எனவும் நடந்த முறைகேட்டை நாட்டுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்பதே தனது தேவை எனவும் அவர் கூறியுள்ளார்.

ராடா நிறுவனம், புலிகளுக்கு நிதியுதவி வழங்கியுள்ளதாக கிடைத்த தகவல்களின் அடிப்படையிலேயே அது தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் புலிகளுக்கு உதவியோர் யாராக இருந்தாலும் அவர்களைக் காப்பாற்ற முடியாது. அதற்கு நாம் ஒரு போதும் இடமளியோம் யாருடைய அச்சுறுத்தலுக்கும் நான் பயப்படமாட்டேன்

ராடா நிறுவனம், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராபக்ஷவின் ஆட்சிகாலத்தில் அதாவது 2006 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. அதன் தலைவர் டிரான் அலஸ் ஆவார்.

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காக எங்களுடைய இராணுவ வீரர்கள் மாண்டுகொண்டிருந்த நேரம் பயங்கரவாதிகளுக்கு 8,000 மில்லியன் ரூபாய் கொடுக்கப்பட்டதாக எங்களுக்கு தகவல் கிடைத்தது. அந்தத் தகவலின் அடிப்படையிலேயே முறைபாடு செய்துள்ளோம்.

முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதே எங்களுடைய கோரிக்கையாகும். குற்றப்புலனாய்வு பிரிவுக்கு சென்று நானும் வாக்குமூலம் அளித்துள்ளேன். வாக்குமூலம் அளித்தமைக்காக யாரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 ஏப்ரல் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.